

குடும்ப
நாவல்
ரூ 7
தந்து விட்டேன்
என்னை!
லட்சுமி பிரபா

# தந்து விட்டேன் என்னை!



## லட்சுமி பிரபா

## 1

ரம்யமான அதிகாலைப் பொழுது. பறவைகளின் 'கீச் கீச்' கோரஸ்சால் கீழ்வானம் மகிழ்ந்து சிவக்கின்றதா அல்லது வானத்தின் வர்ண ஜாலங்களைக் கண்ட பரவசத்தில் பறவைகள் கீதமிசைக்கின்றனவா என்பது புரியாது மயங்கி மகிழக் கூடிய அதிகாலை.

சம்யுக்தாவுக்கு ஐந்து மணிக்கெல்லாம் விழிப்பு தட்டிவிட்டது. விழிகளை மூடிய வண்ணம் எழுந்து அமர்ந்த சம்யுக்தா... இரு கைகளையும் பரபரவென்று தேய்த்து உள்ளங்கையில் பார்வையைப் பதித்தாள்.

பக்கவாட்டில் போர்வையைத் தலைவரை இழுத்துப் போர்த்திக் கொண்டிருந்தாள் வீணா. தூக்கத்தில் ஏதோ உளறியபடி புரண்டு படுத்த பெரியம்மாவின் மகள் வீணாவைக் கண்டு சம்யுக்தாவின் இதழ்களில் குறுநகை இழையோடியது.

கலைந்து கிடந்த கூந்தலைக் கோதி கொண்டையிட்டவள், ஜன்னல் கதவைத் திறந்தாள். தோட்டத்தில் மலர்ந்திருந்த சம்பங்கி மற்றும் பன்னீர் பூக்களின் சுகந்த நறுமணத்தை சுமந்து கொண்டு வந்த காலைத் தென்றல் - சம்யுக்தாவின் அழகு முகத்தை சில்லென்று ஸ்பரிசித்தபடி உரிமையாய் உள்ளே புகுந்தது.

புருவ மத்தியில் நினைவை நிறுத்தி பத்து நிமிடங்கள் ஆழ்ந்த தியானம் செய்து விட்டு எழுந்தாள். குளிப்பதற்கு முன் காலண்டர் தேதியை கிழித்து விட்டுத்தான் பாத்ரூமுக்குச் செல்வாள். நாலைந்து நாட்களாக தேதி கிழிக்கப் படாமலிருந்தது.

தோழி வான்மதியின் திருமணத்திற்காக குமுளி எஸ்டேட், கம்பம் பகுதிகளுக்குச் சென்றுவிட்டு நேற்று மாலைதான் அவர்கள் வீடு திரும்பியிருந்தனர். நாலைந்து தாள்களைக் கொத்தாக கிழித்து விட்டு இன்றைய தேதியை ஊன்றிப் பார்த்தவளுக்கு தூக்கி வாரிப் போட்டது.

'மே பத்து'

'இன்றைக்குத் தானே அந்தக் கோர சம்பவம் நடந்தது? என் வாழ்க்கைத் தடத்தை அடியோடு புரட்டிப் போட்ட தினத்தை எப்படி மறந்தேன் நான்?'

சிரிப்பும் குதூகலமும் கும்மாளமுமாய் சுவர்க்கத்தில் திளைத்துக் கொண்டிருந்த குடும்பம்... இருந்த சுவடு தெரியாமல் குலைந்த தினமல்லவா இது?

அவளுக்குப் பாலூட்டித் தாலாட்டி வளர்த்த அன்னையும் தந்தையும் அவளை அனாதையாக்கி விட்டு... அகால மரணமடைந்த நாளல்லவா இது?

கடந்த ஐந்தாண்டுகளாக மே மாதம் நெருங்கும் போதே... சம்யுக்தாவை சோக மேகங்கள் சூழ்ந்து கொள்ளுமே?

வேதனையும் சோகமும் அவளை ஆட்டிப் படைக்குமே?

'அதை எப்படி மறந்தேன் நான்?'

அழகிய விழிகளில் ஊற்றெடுத்த கண்ணீர் உடைப்பெடுத்துக் கொண்டு கன்னங்களில் வாய்க்கால் போட்டு வழிந்தது.

சம்யுக்தா...!

வத்சலாவுக்கும் சதாசிவத்திற்கும் பிறந்த அழகு தேவதை. சதாசிவம் - வத்சலா தம்பதியினர் பேங்கில் வேலை பார்த்து வந்தனர். காதலித்து மணம் புரிந்து கொண்ட ஆதர்ஷ தம்பதிகள் அவர்கள்.

பெற்றோர்களின் அன்பு மழையில் நனைந்து குட்டி இளவரசியாக - வாழ்வில் எந்தக் குறையும் இன்றி பவனி வந்தவள் தான் சம்யுக்தா.

சந்தோஷமும் குதூகலமும் மட்டுமே தாண்டவமாடிய அவர்களது குடும்பத்தின் மீது... ஊரார் கண் பட்டுவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

இதே தினத்தில்... ஸ்கூட்டரில் ஜோடியாக அமர்ந்து வேலைக்குச் சென்றவர்கள் வீடு திரும்பவே இல்லை.

டேங்கர் லாரி மோதி சம்பவ இடத்திலேயே அவர்கள் பலியாகி விட்டதாக தகவல் வந்ததும்... சம்யுக்தாவுக்கு தலையில் இடியே வந்து விழுந்தது போலிருந்தது.

அவளது மென்மையான மனம் சுக்கு நூறாக நொறுங்கி விட்டிருந்தது. கல் மனமும் கரையும் வண்ணம் கதறி அழுதாள்.

வத்சலாவும் சதாசிவமும் விரும்பி மணந்தவர்கள் என்பதால்... இரண்டு பக்கமும் உறவு அறுந்து விட்டிருந்தது. தகவல் அறிந்து வந்தவர்கள் பட்டும் படாமலும் துக்கம் விசாரித்து விட்டு கழன்று கொண்டனர்.

வத்சலாவின் தமக்கையான தங்கத்தின் செவிகளில் துக்க செய்தி விழுந்தது தான் தாமதம்... தானாடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்பார்கள்.

காதலித்தவனுடன் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப் போய் திருமணம் செய்து கொண்டு குடும்பத்திற்கு தீராத களங்கத்தை ஏற்படுத்தி விட்ட தங்கையின் மீது தீராத பகை கொண்டிருந்த தங்கம், தனது கோபத்தையும் துவேஷத்தையும் காற்றில் பறக்க விட்டுவிட்டு ஓடோடி வந்தாள்.

சம்யுக்தாவை வாரி அணைத்துக் கொண்டு கதறி அழுதாள்.

''நாங்க யாரும் அவ மூஞ்சியிலேயே முழிக்க மாட்டோம்னு ஒரு கோபத்துல சொன்னோம்... ரோஷக்காரி அவ... கடைசியில அவ முகத்தைக் கூடப் பாக்க முடியாம போயிடுச்சே?

இப்படியொரு அழகுச் சிலையை தனியா தவிக்க விட்டுட்டுப் போறதுக்கு அவளுக்கு எப்படி மனசு வந்துச்சு?

பெத்த தாயையும் தகப்பனையும் ஒரே நேரத்துல பறி கொடுத்துட்டு நிக்கிறியே! உன் இளம் மனசு என்ன பாடுபடும்... என் ராஜாத்தி!''

தங்கத்தின் கணவர் பொன்னுரங்கத்திற்கு உண்மையிலேயே தங்கமான



மனசுதான்.

''தங்கம்! நடந்தது நடந்து போச்சு... வத்சலாவை அப்படியே உரிச்சுக்கிட்டு வந்திருக்காளே... இந்த அழகு பெட்டகம் சம்யுக்தா... இவ முகத்தைப் பார்த்து மனசைத் தேத்திக்க வேண்டியதுதான்.

சுரேஷ், வீணா மட்டுமல்ல... சம்யுக்தாவும் இனிமே நம்ம குழந்தைதான். அந்தக் குழந்தைக்கு ஆறுதல் சொல்றதை விட்டுட்டு நீ அழுதுட்டிருந்தா என்ன அர்த்தம்? சம்யுக்தாவை அழைச்சுக்கிட்டு கிளம்பற வழியைப் பாரு.''

அன்று அடைக்கலமாக இங்கு வந்தவள்தான் சம்யுக்தா.

அசப்பில் தனது தங்கையின் ஜாடையிலிருந்த சம்யுக்தாவின் மீது பாசத்தைப் பொழிந்தாள் தங்கம்.

வீணாவிற்கும் சம்யுக்தாவிற்கும் சம வயதுதான். இருவரும் நகமும் சதையுமாக இணை பிரியாமல் இருப்பார்கள். சுரேஷைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்... பரம சாது! வீணாவையும் சம்யுக்தாவையும் சமமாகவே கருதி பாசம் காட்டுபவன்.

பெரியப்பா பொன்னுரங்கம் பிஸினஸ் செய்து கொண்டிருப்பவர். சொந்தமாக இரண்டு மூன்று கம்பெனிகள் இருந்தன. பங்களா சைஸில் வீடு, வெளியே போக வர கார் என்று வசதிக்கு குறைவில்லைதான்!

பெற்றவர்களை இழந்து அனாதையாக இருக்கும் சம்யுக்தாவைப் பார்த்தாலே பொன்னுரங்கத்திற்கு மனம் இளகி விடும்.

'என்னடா குழந்தே? சாப்பிட்டியா இல்லையா? ஏன் கண்ணு இப்படி சிவந்திருக்கு? அழுதியாடா? வீணா... சம்யுக்தாவை தனியே விடாதே. சதா அவ கிட்டயே இருக்கணும். சரியா?' என்று பெற்ற மகளை அதட்டுவார்.

பெரியம்மா, பெரியப்பா, அண்ணன் சுரேஷ், வீணா என்று அத்தனை பேரும் அவளிடம் வாஞ்சையாகத்தானிருந்தார்கள்.

ஆனாலும் அவளால் இங்கு உரிமையாய் - சுதந்திரமாய் இருக்கவே முடியவில்லை. முள்ளின் மேல் இருப்பதைப் போன்ற அவஸ்தையுடன் அவள் தவித்ததற்கு காரணம் இல்லாமல் இல்லை.

தங்கத்தின் மாமியார் பேச்சியம்மாள். எழுபத்தைந்து வயது கிழவி. சம்யுக்தாவைப் பார்க்கும் போதெல்லாம் கரித்துக் கொட்டினார்.

'அப்பனையும் ஆத்தாளையும் சேர்ந்தாப்பல முழுங்கிட்டு. இங்க வந்து அண்டிக்கிட்டியாக்கும்?

இங்க யாரையாச்சும் முழுங்கி வைக்காம இருந்தா சரிதான்!' என்று காதுபடவே இரைவார்.

'இந்த விடியாத மூஞ்சியைக் கூட்டிட்டு வந்து நடு வீட்டுலே வச்சா வீடு விளங்குமா?' என்பார்.

''என் தங்கச்சி பொண்ணை ஏன் இப்படி திட்டறீங்க? தாய் தகப்பனில்லாப் பொண்ணோட மனசை நோகடிக்காதீங்க.''

தங்கம் ரோஷம் தாளாமல் மாமியாரிடம் சண்டை பிடிப்பாள்.

அந்த மாதிரி சமயங்களில் சம்யுக்தாவுக்கு துக்கம் பீறிட்டுக் கொண்டு வரும். தன் பொருட்டு இந்தக் குடும்பத்தில் பிரச்சினை முளைப்பதை அவள் அறவே வெறுத்தாள்.

பொன்னுரங்கமோ கெஞ்சும் தோரணையில் அவளை சமாதானப்படுத்துவார்.

''மருமகளை எந்த வகையிலாவது சீண்டிப் பார்க்கணும்னு எங்கம்மாவுக்கு ஆசை... உன்னை ஏதாவது சொன்னா அவளுக்கு ரோசம் வந்து தன்கிட்ட சண்டை பிடிக்கட்டும்னு ஆசைப்படறா... வயசாயிடுச்சு இல்லையா? மரை கழண்டு போச்சு! வம்புக்கு அலையுது. நாம்ப கண்டுக்காம விட்டா தன்னால அடங்கிடும். போற காலத்துல கிருஷ்ணா ராமான்னு இருக்கலாம். சரி... குழந்தே! நீ புத்திசாலிப் பொண்ணு இல்லியா? உனக்கு பொறுப்பும் அதிகம்... பொறுமையும் அதிகம். கொஞ்ச நாளைக்கு சகிச்சுட்டுப் போயேன்.''

சகித்துக் கொண்டு வாழப் பழகிக் கொண்டாள் சம்யுக்தா.

என்னதான் சகித்துக் கொண்டாலும் உள் மனம் ஆற்றாமையில் வெந்து துடிக்கும்.

வீணா உறங்கிய பின் நடுநிசியில் மௌனமாக உடல் குலுங்க தலையணை நனையும் வரை கண்ணீர் உகுப்பாள் சம்யுக்தா.

வீணாவும் சம்யுக்தாவும் கல்லூரியில் பி. ஏ. ஆங்கில இலக்கியம் படித்துக் கொண்டிருந்தனர். சென்ற மாதம்தான் கடைசி செமஸ்டர் எக்ஸாமை எழுதி முடித்தனர்.

வீணா படிப்பில் சுமார்ரகம்தான்... படிப்பில் மட்டுமல்ல! பார்ப்பதற்கும் சுமாராகத்தான் இருப்பாள்.

ஆனால் சம்யுக்தாவோ நிலவை சில நட்சத்திரங்களுடன் சேர்த்துப் பிசைந்து வார்த்த சிலை போன்று... கண்களை வசீகரித்தாள்.

நீண்ட கூந்தல், பிறை நெற்றி, மானின் மருண்ட விழிகள், கூர்மூக்கு, பாலில் குங்குமப்பூவைக் கலந்தாற் போன்ற நிறம், சிறுத்த இடை என்று ஒட்டு மொத்த அழகையும் குத்தகைக்கு எடுத்திருந்தாள்.

வீணா 'லொக்' 'லொக்' என்று இருமியபடி புரண்டு படுத்தாள். சம்யுக்தா சட்டென்று தன்னிலை மீண்டாள்.

கண்களிலிருந்து வழிந்த கண்ணீரை அவசரமாகத் துடைத்தாள். இந்த கறுப்பு தினத்தை எப்படி மறக்க முடிந்தது? மறக்கக் கூடிய தினமா இது? இதை மறக்கும் வண்ணம் புத்தி மழுங்கி விட்டதா என்ன?

'ஊகூம்... புத்தி மழுங்கி விடவில்லை. புத்தி தடுமாறி விட்டது. என் மனம் என்னிடம் இல்லை. மனதிற்கு கடிவாளம் போட்டு கஷ்டப்பட்டு அடக்கி வைத்திருந்தும் பிரயோஜனம் இல்லை.'



மனம் தறிகெட்டுப் பாய்ந்து... சதா அவனையே சுற்றி வருகின்றதே?

யாரவன்? நல்லவனா கெட்டவனா? எந்த ஊர் - என்று எதையும் ஆராய்ந்து பாராமல்... அவளையும் மீறி அவளது இதயக்கதவுகள் திறந்து அவனது வசீகரமான உருவத்தை தன்னுள் சிறைப்படுத்திக் கொண்டனவே?

இது எதில் போய் முடியும்? அவனது நினைவு தந்த சுகத்தில்தான் இந்த தினத்தைப் பற்றிய ஞாபகமே தலை காட்டவில்லை போலும். குற்ற உணர்வு மனசு பூராவும் படர்ந்து நம நம வென்று பிராண்டியது.

## 2

''அம்மா... கஞ்சி கொணந்திருக்கேன். சாப்பிடறீங்களா?'' - வேலைக்காரியின் குரல் பவ்யமாய் தொனித்தது.

ஜன்னல் வழியே தூரத்தில் தெரிந்த மலைத்தொடர்களை இலக்கின்றி வெறித்துக் கொண்டிருந்த தனம்மாள் தன் பார்வையைத் திருப்பவே இல்லை.

அவர் இந்த எஸ்டேட் பங்களாவின் எஜமானி. சந்தனக் கலர் பட்டுப் புடவை, கைகளில் அரை டஜன் கணக்கில் பொன் வளையல்கள், காதுகளில் ஒன்பது கல் பதித்த வைரத் தோடுகள் என்று பணக்கார தோரணையில் இருந்தாலும் முகத்தில் சாந்தம் தவழ்ந்து கொண்டிருந்தது நிஜம்!

தனம்மாளின் கணவர் லோகநாதராஜன்... குமுளி, தேக்கடி, மூணாறு, கம்பம், மெட்டு பகுதிகளிலிருந்த ஏகப்பட்ட எஸ்டேட்டுகளுக்கு சொந்தக்காரர்.

ஏலக்காய், தேயிலை, கிராம்பு, ரப்பர், காபி, திராட்சை தோட்டங்களிலிருந்து பணம் கொழித்துக் கொண்டிருந்தது.

லோகநாதராஜன் - தனம்மாள் தம்பதிகளுக்கு திருமணமாகி பத்தாண்டுகள் வரை குழந்தை பாக்கியமே கிட்டவில்லை. அவர்கள் போகாத கோவில் இல்லை. பண்ணாத பரிகாரம் இல்லை.

தேனி மாவட்டம், மதுரை மாவட்டம் என்று சுற்று வட்டாரத்தில் பிரபலமாயிருந்த டாக்டர்கள் ஒருவரையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை.

மாதங்களும் வருடங்களும் விரயமானது தான் மிச்சம்! தனம்மாளின் நம்பிக்கை நாளுக்கு நாள் தேய்பிறையைப் போல் தேய்ந்து கொண்டே வந்தது.

தனம்மாள் சாதாரண குடும்பத்திலிருந்து வந்தவர்தான். கௌரவத்திற்கும் அந்தஸ்திற்கும் பெயர்போன குடும்பத்தில் தான் வாழ்க்கைப்பட்டதே பெரிய விஷயம்! வாரிசு இல்லாமல் அந்த வம்சமே பட்டுப் போவதை தனம்மாவால் ஜீரணித்துக் கொள்ளவே முடியவில்லை.

லோகநாதராஜனை மறுமணம் செய்து கொள்ளும்படி கட்டாயப்படுத்த

ஆரம்பித்தார். அவரோ மனைவியின் சொல்லுக்கு செவி சாய்க்கவும் இல்லை; அசைந்து கொடுக்கவும் இல்லை.

ஒருவாரமாக பட்டினி கிடந்து - சத்தியாக்கிரகம் செய்து தனம்மாள் மயக்கம் போட்டு விழவும், லோகநாதராஜனுக்கு சர்வமும் பதறி விட்டது. தனது பிடிவாதத்தைக் கை விட்டார்.

தனம்மாள் தன் சொந்தத் தங்கையான கற்பகத்தையே கணவருக்கு இரண்டாம் தாரமாகக் கட்டி வைத்தார்.

தனம்மாள் எதிர்பார்த்தது போலவே... அடுத்த வருடமே கற்பகத்திற்கு ஆண் குழந்தை பிறந்தது. **'தியாகராஜன்'** என்று பெயரிட்டு பாசத்தைக் கொட்டி வளர்த்தனர்.

அந்தக் குழந்தைக்கு நான்கு வயதாகும் போது அதிசயத்திலும் அதிசயமாக தனம்மாள் கர்ப்ப முற்றார்.

அவருக்கு ஆண் குழந்தை பிறந்த போது... லோகநாதராஜன் அளவு கடந்த சந்தோஷத்தில் நெகிழ்ந்து போனார்.

**'ரகு ராஜன்'** என்று பெயரிட்டு வளர்த்தனர்.

தியாகு பரம சாதுவாய் இருப்பான். அவன் இருக்கிற இடமே தெரியாது. ஆனால் ரகுவோ... மிகவும் குறும்புக்காரன். அவன் இருக்கும் இடமே கலகலப்பாகத்தான் இருக்கும்.

தியாகுவையும் ரகுவையும் இரு கண்களாக எண்ணித்தான் பாசம் காட்டினார் தனம்மாள். லோகநாதராஜனுக்கு மூத்த மகனை விட இளைய மகன் ரகுவின் மீது அலாதிப் பிரியம்!

தியாகுவின் அடிவயிற்றில் பொறாமை கனன்று கொண்டே இருந்தது. அவன் வளர வளர அந்தப் பொறாமை உணர்வும் பன்மடங்காகப் பெருகியது. நயவஞ்சகமும் நரியின் சூழ்ச்சியும் அவனிடம் குடி கொண்டிருந்தன.

வேடிக்கையும் விளையாட்டும் குதூகலமும் நிறைந்த இளைஞனாக ரகு இருந்த போதும் அவனிடம் பொறுப்புணர்ச்சி நிறையவே இருந்ததாலும் மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து நடக்கக் கூடிய நல்ல இளைஞனாக இருந்ததாலும் லோகநாதராஜன் அவன் மீது உயிரையே வைத்திருந்தார்.

எம்.பி.ஏ. படிக்க வெளிநாட்டுக்குச் சென்ற தியாகு தாயகத்திற்கு திரும்புகையில் - அவன் வந்து நின்ற கோலத்தைப் பார்த்து அனைவருக்கும் தூக்கி வாரிப் போட்டது.

கவலை மனதை ஆட்டிப் படைக்க... கற்பகம் மூலையில் முடங்கிப் போய் விட்டார்.

காவி உடையுடன் தியாகு செய்த அடாத காரியங்களால், குடும்பத்தின் ஒட்டு மொத்த நிம்மதியும் தொலைந்து போனது நிஜம்!

''அம்மா... கஞ்சி ஆறிடப் போகுது. சாப்பிடறீங்களா?'' - வேலைக்காரி



மீண்டும் குரல் கொடுத்ததும் தனம்மாளின் நினைவுச் சங்கிலி பட்டென்று அறுந்தது.

பாத்திரத்தை மேஜை மீது வைத்த வேலைக்காரி அதை வாகாய் கட்டில் பக்கம் நகர்த்தினாள்.

''பரிமாறட்டுமாம்மா?''

''என்னத்த பரிமாறப் போறே? பூரியும், பொங்கலுமா எடுத்து வந்திருக்கே? இந்த ராகிக் கஞ்சியை அப்படியே குடிக்க வேண்டியது தானே? ப்ச்... எனக்கு எதுவும் பிடிக்கல... ரகுவை நான் கூப்பிட்டேன்னு சொல்லு... போ''

கிளம்ப எத்தனித்த வேலைக்காரி, ''அம்மா! ராஜன் சாரே வந்துட்டு இருக்காரு'' - கூறிவிட்டு அவசரமாக அறையை விட்டு வெளியேறினாள்.

வீட்டு வேலைக்காரர்களும் சரி... எஸ்டேட் தொழிலாளர்களும் சரி... தியாகு மற்றும் ரகுவை 'ராஜன் சார்' என்று மரியாதை நிமித்தமாக பொத்தாம் பொதுவாக அழைப்பது தான் வழக்கம்.

''வாப்பா ரகு! உட்காரு'' என்றவாறே மகனை ஏற இறங்கப் பார்வையால் வருடினார் தனம்மாள்.

உடைத்த கோதுமை நிறத்தில் ஆஜானுபாகுவான தோற்றத்தில் கண்களை நிறைத்தான் ரகு.

''அப்பாகிட்டே ஒரு சைன் வாங்க வேண்டியிருக்கும்மா... ரூம் கதவு இன்னமும் சாத்தியிருக்கு... அவரை டிஸ்டர்ப் பண்ண விரும்பலை. வந்துட்டேன்.''

''நைட்லே ரொம்ப நேரமா இந்த தியாகு பயலைப் பத்தியே பேசிட்டு லேட்டா தான் படுக்கப் போனாரு... அன்னிக்கு அவன் பேசிய பேச்சு இன்னமும் ரம்பமா என் மனசை அறுக்குது ரகு.''

''விட்டுத்தள்ளுங்கம்மா... சதா கவலைப்பட்டுக்கிட்டே இருந்தா உடம்பு என்னத்துக்கு ஆகும்?'' - ஒப்புக்கு சமாதானம் செய்தானே தவிர... அவனது மனதையும் கவலை செல்லாக அரித்துக் கொண்டிருந்தது.

எம்.பி.ஏ. படிக்க வெளிநாட்டுக்குச் சென்ற தியாகு, ஜீவானந்தா சுவாமிகளின் உரையைக் கேட்டு ஈர்ப்படைந்து ஆன்மீகம், யோகா, தியானம் ஆகியவற்றில் நாட்டம் ஏற்பட்டு... அதில் அப்படியே தான் ஐக்கியமாகி விட்டதாகக் கூறியது - இன்னமும் செவிகளில் எதிரொலித்துக் கொண்டுதான் இருந்தது.

''அவன் இப்படியொரு கோலத்துல வந்து நிப்பான்னு கனவு கூட காணலியே? 'எம்பா இந்தக் கோலத்துல வந்து நிக்கிறே?'ன்னு கேட்டா... 'அதுக்கு காரணமே அப்பாதான்'னு... பழியை போட்டுட்டானே.

**'அப்பா ரகுவை தலையில் தூக்கி வச்சுக் கொண்டாடி... என் நெஞ்சுல நெருப்பள்ளி போட்டாரு... சின்ன வயசுலேர்ந்து எதுலேயும் ஒட்டாம - பட்டுக்காம... மனசளவில துறவி மாதிரிதானே**

வாழ்ந்தேன்? அதான் இப்போ இந்த முடிவுக்கு வந்துட்டேன் அப்படின்னு அவன் சொன்னப்போ... நானும் அப்பாவும் ரொம்பவே இடிஞ்சு போயிட்டோம்.

நானும் அப்பாவுமாவது வாய் விட்டு புலம்பிட்டு கிடக்கிறோம். ஆனா கற்பகம் ஒரு வார்த்தை கூட பேசாம... அப்படியே இறுகிப் போய் கிடக்கிறதை நெனச்சா... இன்னமும் வேதனையா இருக்கே ரகு''

''அவங்க எப்பவுமே ரிசர்வ்ட் டைப் தானேம்மா? ஆனா விடிஞ்சதும் விடியாததுமா அண்ணனைப் போய் பாத்துட்டு வர்றாங்களே?''

''அது தாம்ப்பா ரொம்பவும் கஷ்டமா இருக்கு. அவ இல்லாம நான் மட்டும் தனியா எங்கேயாவது போயிருக்கேனா? எங்க போனாலும் சேர்ந்தாப்பல தானே போவோம்? இப்போ சமீப காலமா அதுவும் தியாகு துறவியாகி... காட்டுக்குள்ளே பர்ணசாலை போட்டு தங்கினானே - அன்னிக்கு இருந்தே கற்பகம் என்னை விட்டுட்டுத் தனியா போக ஆரம்பிச்சுட்டா.

அவளோட மனசுல எந்த விகல்பமும் வந்துடக் கூடாதுன்னு... சரி சமமா நடத்திவேனே ரகு?

என் கூடப் பிறந்த ரத்தம்... அவனே என்னை சரியாப் புரிஞ்சுக்கலையோன்னு... மனசு கிடந்து அடிச்சுக்குது.

சரி! தியாகுவோட ஆசிரமத்துக்கு நிறைய இளம் பக்தைகள் வடநாட்டிலிருந்து வந்தாங்களாமே? கேள்விப் பட்டியா?''

தவம்மாள் கேள்விக்கணையைத் தொடுத்து விட்டு ஆர்வமாக மகனின் முகத்தை உற்றுப் பார்த்தார்.

ரகுவின் முகம் கூம்பிப் போனது. தாயை ஏறிட்டுப் பார்க்கத் தெம்பின்றி... பார்வையைத் தழைத்துக் கொண்டான்.

''ஆ... ஆமாமா! பக்கத்துல தேக்கடி, சுருளி, மூணாறுக்கு வர்ற சுற்றுலா பயணிகளுக்கு எப்படியோ நம்ம தியாகுவோட ஆசிரமத்தைப் பத்தி தெரிஞ்சு போயிடுது. கடந்த எட்டு மாசத்துல... சுத்து வட்டாரத்துல இருந்து நிறைய பேர் அண்ணாவைப் பார்க்க வர்றாங்கல்ல?

ஆசிரமத்தோட பேர் ரொம்பவே பிரபலமாயிட்டதால... வடநாட்டுல இருந்து வர்ற பயணிகள் மட்டுமில்லாம... வெளிநாட்டுல இருந்து வர்ற சுற்றுலா பயணிகளும் ஆர்வமா யோகா, தியானம் கத்துக்க வர்றாங்க...

மனசுக்கு நிம்மதியும் இனம் புரியாத பரவசமும் சந்தோஷமும் கிடைக்கிறதால... சில இளம் பெண்கள் சிஷ்யைகளா சேரவும் துணிஞ்சுட்டாங்களாம்.

ஆனா... தியாகு அண்ணா இதை சாதகமா எடுத்துக்கிட்டு அவங்க நம்பிக்கையில் மண்ணள்ளிப் போட்டுட்டு... அவன் செய்யற காரியம் எதுல போய் முடியும் தெரியுமாம்மா?'' - தழுதழுத்தபடி தாயை ஏறிட்டான்.

''ஐயோ! அதுக்கு மேல எதுவும் சொல்லாதே ரகு! வம்சம் தழைக்க வந்த



தலைப் பிள்ளைன்னு அவனை... தலையில் தூக்கி வச்சுக் கொண்டாடினோமே? குடும்பத்து கௌரவத்தையே குழி தோண்டிப் புதைச்சுட்டிருக்கானே?''

''விஷயம் கை மீறிப் போயிட்டிருக்கு அம்மா! நம்ம யாரையும் அவன் சட்டை பண்றதே இல்ல. இதனால... நம்ப குடும்ப கௌரவம் பாதிக்கப்படறதோட... அண்ணனோட எதிர்காலமே இருண்டு போயிடுமோன்னு பயமா இருக்கு.''

அண்ணனின் எதிர்காலம் இருண்டு சூனியமாகி விடக் கூடாதே என்று பாசத்தில் துடித்தான் ரகு.

ஆனால்... அந்த அண்ணன், ரகுவின் இல்லற வாழ்க்கையைச் சிதைத்து இருளில் மூழ்கடிக்க தருணம் பார்த்துக் கொண்டிருந்தான் என்பதை - அவன் எவ்விதம் அறிவான்?

## 3

அன்று ஞாயிற்றுக்கிழமை! வீணா, சுரேஷுடன் சேர்ந்து ஷாப்பிங் செய்யக் கிளம்பி விட்டிருந்தாள்.

தங்கமும் பொன்னுரங்கமும் ஒரு திருமணத்திற்குச் சென்றிருந்தார்கள்.

''விட்டுலே சும்மா தானே இருக்கப் போறே! வா... ஃப்ரீயா வெளியில போயிட்டு வரலாம்'' என்று வீணா பலமுறை கெஞ்சியும் சம்யுக்தா பிடிவாதமாக மறுத்து விட்டிருந்தாள்.

''தலை வலிக்குது வீணா... மாத்திரை போட்டுக்கிட்டு கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கிறேன். ப்ளீஸ்''

இவளது முகம் சுரத்தில்லாமல் இருந்ததைப் பார்த்துவிட்டு... மேற்கொண்டு வற்புறுத்தாமல் அரைமனதுடன் அவர்கள் கிளம்பினார்கள்.

தனிமையில் அமர்ந்ததும்... அன்று திருமண மண்டபத்தில் சந்தித்த இளைஞனைப் பற்றிய நினைவு எழுந்து அவளை வதைத்தது.

தலையைச் சிலுப்பி நினைவை அழிக்க முயன்று தோற்றாள்.

ஏக்கம் ததும்பும் விழிகளையும் முகத்தில் தவழும் பரிதவிப்பையும் கூர்ந்து கவனித்த வீணாவுக்குள் சிறு சந்தேகம் முளைவிட்டது போலும்!

நேற்றிரவு தூங்கும் போது இவளிடம் வெளிப்படையாக கேட்டே விட்டாள்.

''சம்யு! வான்மதியோட மேரேஜுக்குப் போயிட்டு வந்ததிலேர்ந்து... நானும் கவனிச்சுட்டு வரேன். உன் முகமே சரியில்ல... சதா ரெஸ்ட்லெஸ்ஸா இருக்கியே? எனி பிராப்ளம்? என் கிட்ட சொன்னா... உனக்கு கொஞ்சமாவது ரிலீஃபா இருக்குமேடா?'' - வாத்சல்யத்துடன் அவளது கரத்தை இறுகப் பற்றிக் கொண்டாள்.

வீணாவின் விழிகளை ஒருகணம் ஊடுருவியவள்... தயக்கம் தடுக்க மெல்லப் பார்வையைத் தழைத்தாள்.

**மகிழ்ச்சியைப் பிறருடன் பகிர அது இரட்டிப்பாகும். துயரங்களைப் பகிர்ந்தால் அவை பாதியாகப் போகும்** என்ற முதுமொழியில் சம்யுக்தாவுக்கும் உடன்பாடு உண்டு.

ஆனால் சில துயரங்கள், இன்பங்கள் நமக்கே நமக்கானவை. அவற்றைப் பிறருடன் பகிர மனம் வராது. இதுவும் அப்படித்தான்.

''அப்படியெல்லாம் எதுவுமில்ல வீணா... நீங்க எல்லாரும் இருக்கும் போது எனக்கென்ன குறை? கம்பத்துக்கு போனதிலேர்ந்து இலேசா ஜலதோஷம்... தண்ணி மாறுச்சு இல்லையா? அதான்... மத்தபடி ஒண்ணுமில்ல.''

வலிய வரவழைத்துக் கொண்ட புன்னகையுடன் ஏறிட்டவளை நம்ப மாட்டாமல் பார்த்த வீணா... அதிர்ச்சி ரேகை முகத்தில் பரவ ஒருக்களித்துப் படுத்து போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பார்கள்.

சுகம், துக்கம், கோபம், ஏக்கம், ஏமாற்றம் என்று அத்தனை உணர்வுகளையும் கண்ணாடி போல் இந்த முகமே காட்டிக் கொடுத்து விடுகின்றதே?

இதே ரீதியில் போனால்... பெரியம்மா, பெரியப்பா கூட என்ன ஏது என்று கிளற ஆரம்பித்து விடுவார்கள்.

'வான்மதியின் திருமணத்திற்குச் சென்று வந்ததையும் அங்கு சந்தித்த அந்த இளைஞனையும் சுத்தமாக மறந்துவிட வேண்டியது தான்' என்று உள்ளூர சங்கல்பம் செய்து கொண்டாள் சம்யுக்தா.

ஆனால் அவளது மனமோ முரண்டியது. சண்டிக் குதிரையைப் போல் எம்பிக் குதித்து மீண்டும் அந்த வசீகரமான இளைஞனின் உருவத்தைக் கண் முன் நிறுத்தியது.

உள்ளூர எரிச்சல் மண்டிக் கொண்டு வர 'ஹிண்டு' பேப்பரை எடுத்துப் புரட்ட ஆரம்பித்தாள்.

அருகில் நிழலாடவே - நிமிர்ந்து பார்த்தவளுக்கு 'பகீர்' என்றது. தன்னையும் அறியாமல் சட்டென்று எழுந்து நின்றாள்.

வழக்கம் போல் அதே கோணல் சிரிப்பு... அதே சல்லித்தனமான பார்வையுடன் உரசி விடும் நெருக்கத்தில் வந்து நின்றான் கிரி.

கிரி... பொன்னுரங்கத்தின் தங்கை மகன்.

மாமனின் வீடு என்பதால் சகல உரிமையுடன் இவர்களது அறைக்குள் அடிக்கடி புகுந்து விடுவான்.

பாட்டி பேச்சியம்மாளுக்கு உள்ளூர ஒரு ஆசை! வீணாவையும் கிரியையும் ஒன்று சேர்த்து முடிச்சுப் போட்டுப் பார்த்து விட வேண்டும் என்று அடிக்கடி கூறிக் கொண்டிருப்பார்.



''முறைப் பையன் தான்... நான் இல்லேங்கல... ஆனா சின்ன வயசுல இந்தப் பயல் மாசத்துல முக்கா வாசி நாளு... இங்க தான கிடந்தான். வீணா இவனை... சுரேஷ் ஸ்தானத்துல வச்சுத்தான் பார்க்கிறா... அதனால இந்த நினைப்பை மூட்டை கட்டி வையிங்க.''

திட்டவட்டமாகக் கூறி முற்றுப்புள்ளி வைத்து விட்டார் பொன்னுரங்கம்.

ஆனால் கிரி இதைப்பற்றி எள்ளளவும் கவலைப் பட்டுக் கொண்டதாகவே தெரியவில்லை.

அப்சரஸ் போன்று அழகு தேவதையாக இருந்த சம்யுக்தாவின் மீது அவனுக்கொரு கண் இருந்தது.

வீணாவுடன் சகஜமாகப் பேசும் சாக்கில் இவர்களது அறைக்குள் புகுந்து விடுவான். அவளுடன் வாயடித்தாலும் - கண்கள் பருந்தாய் சம்யுக்தாவையே வட்டமிட்டுக் கொண்டிருக்கும்.

அவனைப் பார்த்தாலே... சம்யுக்தாவுக்கு உடம்பெல்லாம் அருவருப்பில் கூசிப் போகும்.

இனம் புரியாத பயத்தில் உடம்பு உதறிப் போடும். கூடுமான வரை பாத்ரூமில் அல்லது கிச்சனில் பதுங்கிக் கொள்வாள். அவன் தலை மறைந்ததும் தான் வெளியில் மெல்ல வருவாள்.

ஆனால் இன்று பாட்டியைத் தவிர வீட்டில் யாருமில்லாத தருணத்தில் வந்து நிற்கிறானே?

இரண்டடி பின்வாங்கிக் கொண்டு நின்ற சம்யுக்தா... முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க, ''வீணாவும் சுரேஷும் வெளியில போயிருக்காங்க... பெரியம்மாவும் பெரியப்பாவும் கல்யாண வீட்டுக்குப் போயிருக்காங்க... கொஞ்ச நேரத்துல வந்துடுவாங்க... பாட்டி மட்டும்தான் இருக்காங்க... அவங்க ரூம்லே போய் பாருங்க.'' என்று கூறினாள்.

''தெரியும்: தெரிஞ்சு தானே உன்னைப் பார்க்க வந்தேன். மாமாவோட செல்லுக்கு ஃபோன் பண்ணினேன். பேச்சு வாக்குல... நீ மட்டும் வீட்டுல இருக்கிற விவரத்தை மாமா சொன்னதுமே... இறக்கை கட்டிப் பறந்து வராத குறையா ஓடோடி வந்திருக்கேன் சம்யு! உன் மேல எனக்கு எவ்ளோ ஆசை தெரியுமா?

இந்த அத்தான் கிட்ட கொஞ்ச நேரம் நின்னு ஜாலியா ஆசையா பேசக் கூடாதா? இன்னுமா என் மனசு உனக்குப் புரியலை சம்யு? நீ புத்திசாலிப் பொண்ணாச்சே?''

''இந்த அத்தான் பொத்தான்கிற பேச்சை எடுக்காதீங்க... உங்க மனசுல என்ன இருக்குன்னு எனக்கு புரிஞ்சு போச்சு! சரி... என் படிப்பு தான் முடிஞ்சிருச்சே? உங்க அம்மா அப்பாகிட்ட சொல்லி முறையா வந்து பெரியப்பாகிட்ட... பொண்ணு கேளுங்களேன்'' - அழகிய விழிகளில் அனல் தெறிக்க ஏறிட்டாள்.

"அ... அது வந்து... அது எப்படி முடியும் சம்பு?" - திணறினாள்.

"ஏன் மேல ஆசை இருக்கு... ஆனா தாலி கட்டி மனைவியாக்கிக்கனும்கிற நோக்கம் இல்லை... அப்படித்தானே? அம்மாவையும் அப்பாவையும் ஒருசேரப் பறி கொடுத்துட்டு அனாதையா நிக்கிற பொண்ணு; நம்ம மாமா வீட்டுல வந்து அண்டி வாழுற பொண்ணுன்னு இளக்காரமா போச்சா உங்களுக்கு? நாதியத்து நிக்கிறவ நம்ம ஆசைக்கு இணங்கிடுவான்னு நினைச்சீங்களா?"

"அவசரப் படாதே சம்பு... ஆத்திரப்படும் போது கூட நீ எவ்வளோ அழகா இருக்கே தெரியுமா? நான் என்ன சொல்ல வர்றேன்னா..."

"போதும்! இனிமே ஒரு வார்த்தை கூட பேச வேணாம். உங்க வக்ர புத்திதான் வெட்ட வெளிச்சமா தெரிஞ்சு போச்சே. பெரியப்பாவோட தங்கை மகனாச்சேன்னு மரியாதை கொடுத்துப் பேசிட்டிருக்கேன்.

இதே மாதிரி வேற யாராச்சும் என்கிட்ட பேசியிருந்தா... கால்லே கிடக்கிறதைக் கழட்டி முகத்துலேயே அடிச்சிருப்பேன்" - பேசிக்கொண்டே பின்வாங்கி விருட்டென்று தன் அறைக்குள் புகுந்து கதவை அறைந்து சாத்திக் கொண்டாள் சம்யுக்தா.

முகத்தில் அறைபட்டாற் போன்று அவமானமாக இருந்தது. அவள் பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் கிரியின் கோபக் கனலைக் கிளறி விசிறி விட்டன.

அவமானத்தில் அவனது உடம்பெல்லாம் திகுதிகுவென்று எரிந்தது போலிருந்தது.

"ஏய்... சம்யுக்தா! செருப்பைக் கழட்டி என் முகத்துல அடிப்பேன்னு சொன்னே இல்லா? இதுக்கான பலனை நீ நல்லா அனுபவிப்பே!

உன்னைக் கதறி அழ வைக்கிறேன் பாரு... என்னை அவமானப்படுத்தினதுக்கு உன்னைப் புழு மாதிரி துடிக்க வைக்கிறேன்... பாரு"

இறுகச் சாத்திய கதவில் சாய்ந்து நின்றிருந்த சம்யுக்தாவுக்கு இதயத் துடிப்பு எகிற ஆரம்பித்தது.

அப்படியே சரிந்து தரையில் அமர்ந்தவள் முழங்காலில் முகம் புதைத்து விம்மினாள்.

'என்ன பாவம் செய்தேன் நான்? என்னை மட்டும் ஏன் விதி இப்படி துரத்தி துரத்தி அடிக்கிறது?'

'அனாதையாகி இங்கு அண்டி வாழ்பவள் நான். கிரியைப் பற்றி வெளியில் சொன்னால்... குடும்பத்தில் பிளவு தான் ஏற்படும். கிரியின் உண்மையான சொரூபத்தை வெளியில் சொன்னால்... பெரியம்மா கொதித்து விடுவார். ஏன்... பெரியப்பாவும் இதைத் தான மாட்டாரோ? கூடப் பிறந்த தங்கையின் மகனென்றும் கூடப் பார்க்க மாட்டாரோ? இதனால் அண்ணன் - தங்கை உறவில் விரிசல் கூட ஏற்பட்டு விடும்... விஷயத்தைக் கேள்விப்பட்டால் பாட்டி பேச்சியம்மாள் சும்மா இருப்பாரா?

'அண்டி வாழ வந்த பிடை... கடைசியில அண்ணன் தங்கச்சி உறவையே வெட்டி விட்டுட்டியா? பந்தபாசத்துக்கு தீப்பந்தம் வச்சுட்டியா?

ஒண்ட வந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டுன கதையாயிருக்கே?' என்று அபாண்டம் சுமத்தவும் தயங்கமாட்டாரே?

'இந்த கசப்பான உண்மையை - நெருப்பை விழுங்குவது போல் விழுங்கித் தொலைக்க வேண்டியது தான்!'

'சே! அழகாய் பிறந்தது என் குற்றமா? இந்த உலகத்தில் கண்ணியமான ஆண்களே கிடையாதா?'

'ஏன் இல்லை? அன்று... வான்மதியின் திருமணத்தின் போது சந்தித்த இளைஞன் கண்ணியமானவன் தானே?'

முந்திரிக் கொட்டையாய் கேள்வி முளைத்து... மீண்டும் அந்த வாலிபனின் ஞாபகத்தை வரவழைத்தது.

சட்டென்று அழுகை நின்றது. அவளது சிந்தனை அசைபோட ஆரம்பித்தது.

கிரி ஒரு அடிபட்ட பாம்பு! அவளது இனிய இல்லறத்திற்கு அவன் வேட்டு வைக்கத் துணியப் போகின்றான் என்பதை - அவள் எவ்விதம் அறிவாள்?

## 4

"ஏ... புள்ளே! எம்புட்டு நேரமாகஞ்சி காய்ச்சிட்டு கிடக்கே? நா வேலைக்கி வெரசா போவேணாமா?" - திண்ணையில் இருப்புக் கொள்ளாமல் அமர்ந்திருந்த முனியன்... குடிசைக்குள் எட்டிப் பார்த்துக் குரல் கொடுத்தார்.

"வெறகு ஈரமா கெடக்கு தாத்தா! அடுப்பு சரியா எரியவே மாட்டேங்குது... அதான் தாமசமாயிடுச்சு... இதோ அஞ்சே நிமிஷம் பொறு தாத்தா" - கூறிய செவ்வந்தி, ஒரு வறட்டியை எடுத்து அதில் தகர டின்னிலிருந்த மண்ணெண்ணெயை வாகாய் சரித்து, அடுப்புக்குள் திணித்ததும்... ஜுவாலை கொழுந்து விட்டு எரிந்தது.

அடுப்பு புகை பட்டு எரிந்த கண்களைக் கசக்கிக் கொண்டு எழுந்த செவ்வந்தி... அலுமினியத் தட்டையும், குவளையையும் தயாராக எடுத்து வைத்தாள்.

செவ்வந்தி... தோட்டக்கார முனியனின் பேத்தி... பதினெட்டு வயது பருவச்சிட்டு! சிறு வயதிலிருந்தே அவளை முனியன் தன் மார்பிலும் தோளிலும் போட்டு வளர்த்து ஆளாக்கினார்.

பெற்றவர்களை இழந்த அந்த சிறு பெண்ணின் மீது அளவு கடந்த பாசம் வைத்திருந்தார் முனியன். செவ்வந்திக்கு படிப்பு அவ்வளவாக மண்டையில் ஏறவில்லை.

பூப்பெய்தியதும் படிப்புக்கு முழுக்கு போட்டு விட்டு வீட்டோடு தங்கி விட்டாள். 'எஸ்டேட் பங்களா'வின் முன்னும் பின்னும் பரந்து விரிந்த தோட்டத்தை முனியன்தான் கவனித்துக் கொண்டார்.

உதிரிப் பூக்களைப் பறித்து மாலையாகத் தொடுத்துக் கொண்டு வந்து தினமும் எஸ்டேட் பங்களாவுக்குச் சென்று கொடுத்து விட்டு வருவாள் செல்வந்தி.

சில சமயங்களில்... தன் வயதையொத்த பெண்களுடன் காட்டிற்குச் சென்று சுள்ளி பொறுக்கிக் கொண்டும் வருவாள்.

குடிசை வீட்டில் பிறந்து ஏழ்மையில் வாடினாலும்... கடவுள் அவளுக்கு எல்லையில்லா சவுந்தர்யத்தை வாரி வழங்கியிருந்தார்.

கண்ணைக் கட்டிப் போடும் அழகுடன் திகழ்ந்த பேத்தி செல்வந்தியைக் காணும் போதெல்லாம்... முனியனுக்கு அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு இருப்பதைப் போன்று அவஸ்தையாக இருந்தது.

'அய்யனாரப்பா! நல்ல கொணமுள்ள இளந்தாரி கையில இந்த செல்வந்தியைப் புடிச்சுக் குடுக்கற வரைக்கும்... எனக்கு ஆயுசை கொடப்பா... இந்தக் கண்ணால கண்ணாலத்தை பாத்துப்புட்டு மறு நிமிசமே.... உன்கிட்டே வந்து சேந்திடுறேன்.' என்று அடிக்கடி வாய்விட்டு வேண்டிக் கொள்வார் முனியன்.

கடந்த, சில மாதங்களாக செல்வந்தி ஆசிரமத்திற்குச் சென்று பூச்சரங்களையும் மாலைகளையும் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

''தாத்தா! இந்தா... கஞ்சியைக்குடி'' என்று கூறி விட்டு திண்ணையில் வைத்திருந்த மூங்கில் கூடையை இழுத்தாள்.

கூடையை மூடியிருந்த ஈரத்துணியை எடுத்ததும்... முல்லை, மல்லிகை, சாமந்தி, சம்பங்கி, ஜாதிப்பூ, ரோஜா, மரிக்கொழுந்து போன்ற பூக்களின் கதம்ப மணம்... கும்மென்று காற்றில் கலந்து நாசியை நிறைத்தது.

''தோ பாரு தாத்தா பூக் கிரீடம்!'' மல்லிகை மொட்டுக்களாலும் சிவப்பு ரோஜாக்களாலும் அலங்கரிக்கப்பட்ட மலர் கிரீடத்தை... மிக மிருதுவாய் தூக்கி காண்பித்தாள்.

''அட ஜோரா பண்ணியிருக்கியே புள்ள... யாருக்கு இது? நம்ம ராஜன் சாருக்கா?''

முனியனின் முதிய விழிகள் பளபளத்தன.

''ராஜன் சாருன்னு சொல்றதை விட ராஜன் சாமின்னு சொல்லலாம் தாத்தா! அவரைப் பார்க்கிறதுக்கு எம்புட்டு சனங்க தவம் கிடக்கிறாங்க தெரியுமா தாத்தா?

அவரோட தெரிசனம் கிடைச்சாலே... கஷ்டமெல்லாம் வெலகி ஓடிப் போயிருதாம்... தீராத வியாதியெல்லாம் தீர்ந்துடுதாம்''

விழிகள் விரியப் பேசிய பேத்தியை... ஆச்சரியமாய் ஏறிட்டார் முனியன்.



''ஒரு காலத்துல ராஜன் சாரை என் தோள்லே சுமந்துகிட்டுப் போயி... மாந்தோப்புக்குள்ளே அட்டகாசம் செஞ்ச குரங்குங்க, அணிலுங்க, மயிலுங்கன்னு வேடிக்கை காட்டியிருக்கேன்... புள்ளே''

''அப்பன்னா... நீ ரொம்பக் குடுத்து வச்சிருக்கே தாத்தா! ராஜன் சாரு காலு பட்ட மண்ணை எடுத்து சனங்க நெத்தியில பூசிக்குதுங்க... பொம்பளைங்க கூட்டம் முண்டியடிக்கிறாங்க...

வெள்ளக்கார குமரிப் பொண்ணுங்க... எத்தன பேரு வந்து குமிஞ்சிருக்காங்க தெரியுமா தாத்தா?

இத்தன மகத்துவம் வாய்ஞ்ச மனுசரா இருந்தும்... ரொம்ப நல்ல கொணம் அவருக்கு. பூவைக் கொண்டு போனாக்க... அத்தன கூட்டத்தையும் பொருப்படுத்தாம... என்னைக் கிட்டக்க வரச் சொல்லி அனுசரணையா ரெண்டு வார்த்தை பேசாம இருக்க மாட்டாரு.

அவருக்கு காவலா நிக்கிற எடுபிடிங்களுக்கு ரொம்ப மண்டை கனம்... ஆனா ராஜன் சாரு மனுசங்களை மதிக்கிறவரு... அவரு சாமிதான் தாத்தா.

சும்மாவா இத்தன சனங்களும் அவரை தெய்வமா தலையில தூக்கி வச்சு கொண்டாடறாங்க?''

''எங்க எசமான் ரொம்பக் குடுத்து வச்சவரு தான்... ரொம்ப வருஷமா புள்ள வரம் வேண்டி தவம் கிடந்தாரு... அவரு செஞ்ச புண்ணியம் சாமியே புள்ளையா பொறந்திருக்கு பாரேன்.''

நெகிழ்ந்து போன முனியனுக்கு கண்களில் நீர் துளிர்த்தது. ''ஏ... புள்ளே! தெனமும் காட்டுக்குள்ளே இருக்கற ஆசிரமத்துக்குப் போறியே... பயமா இல்லியா? தொணைக்கு யாரையாச்சும் கூட்டிட்டுப் போ... இத்தோட பலவாட்டி உனக்கு சொல்லிப்புட்டேன். நீ கேட்க மாட்டேங்கிறியே?''

''அட... போ தாத்தா! என்னை யாரு என்னா செய்ய முடியும்.? நானு சாமிக்கில்ல பூவு கொண்டு போறேன்! சாமி காரியம் செய்ய குடுத்துல்ல வச்சிருக்கணும்? ஆனா... ஆசிரமத்துல இருந்து - மாசமானா... கை நிறைய பணத்தை அள்ளிக் குடுத்துடறாங்களே?''

''உன்கிட்ட வாதாடி நா செயிக்க முடியுமா புள்ளே? பசுங்கொடியாட்டமா தளதளன்னு நிக்கிறே... உனக்கொரு நல்ல வரனு தகைஞ்சுட்டா... நா நிம்மதியா கண்ணை மூடிடுவேன்ல? அந்த சாமி கிட்ட நல்லா வேண்டிக்க புள்ள''

''போ... தாத்தா! கண்ணை மூடறதுலேயே குறியா கெடக்கிறியே? இந்தப் பசுங்கொடிக்கு எப்போ பந்தல் போடணும்னு அந்த சாமிக்குத் தெரியும்... அதது நடக்கிறப்போ நடக்கும்... கஞ்சியைக் குடிச்சிட்டு வொசா எஸ்டேட் பங்களாவுக்கு போ... சும்மா புலம்பிட்டுக் கெடக்கிறியே?''

உரிமையுடன் தாத்தாவை அதட்டினாள் செல்வந்தி.

குடிசைக்குள் நுழைந்து - உதிர்ந்து ரசம் போன பாதிக்கண்ணாடியை எடுத்து

முகத்தை இப்படியும் அப்படியுமாகத் திருப்பி... கன்னத்தில் ஈஷியிருந்த கரியைத் துடைத்துக் கொண்டு... கலைந்த கூந்தலைக் கோதி சீர் செய்து கொண்டாள்.

ஏ.ஸி. போட்டதைப் போன்று இருபத்திநான்கு மணி நேரமும் குளுகுளுவென்றிருந்த குமுளி எஸ்டேட்டில் பிறந்து வளர்ந்தவளிடம்... இயற்கையான அழகு மிளிர்ந்தது.

ஒரு காட்டு ரோஜாவின் ஈடில்லா வனப்புடனும், கள்ளம் கபடமில்லா வெள்ளை உள்ளத்துடனும், தேனீயைப் போன்ற சுறுசுறுப்புடனும் வலம் வரும் செல்வந்தியை... யாருக்கும் பார்த்த மாத்திரத்திலேயே பிடித்து விடும்.

புள்ளி மானைப் போன்று துள்ளிக் கொண்டு வெளியில் ஓடி வந்தாள். தாத்தா முண்டாசைக் கட்டிக் கொண்டு எஸ்டேட் பங்களா இருந்த மேட்டுப் பகுதியை நோக்கி விடு விடென்று நடக்க ஆரம்பித்தார்.

குடிசைக் கதவை இழுத்து கொண்டியிட்டு, முந்தானையை வரிந்து இடுப்பில் செருகிக் கொண்டு... மூங்கில் கூடையைத் தூக்கி தலையில் வைத்து ஓட்டமும் நடையுமாக நடந்தாள்.

ஏலக்காய் தோட்டத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த பெண்கள்... விரைந்து சென்ற செல்வந்தியை ஆர்வமாய் நோட்டமிட்டனர்.

''ஏ... செல்வந்தி... தெனமும் அம்புட்டு தூரமா நடந்து போயி பூவு குடுக்கறியே? ஆசிரமத்துல உனக்கு இதுக்கு எம்புட்டு காசு தர்றாக?''

கேள்விக் கணையைத் தொடுத்த குருவம்மாளை முறைத்துப் பார்த்தாள் செல்வந்தி.

''காசு பணத்துலேயே குறியா கெடக்கிறியே? உன் மவளுக்கு ரெண்டு வாட்டி கொழந்தை பொறந்து செத்து போச்சே? ராஜன் சாரைப் பாத்து கும்பிட்டுக்க... நம்பிக்கை வச்சு கண்ணீர் விட்டு கதறினா... நிச்சயமா விடிவு காலம் உண்டு... வர்றியா ஆத்தா?''

''நாளைக்கி எம் மவளும் நானும் சுத்தபத்தமா தலை முழுகிட்டு ஒங்கூடவே வர்றோம் புள்ள''

பெருமிதமாய் மீண்டும் நடக்க ஆரம்பித்தவளின் விழிகளில் சிக்கினான் ரகு.

மப்ளர், ஸ்வெட்டர் அணிந்து கொண்டு தினமும் வாக்கிங் செல்லும் சாக்கில் - மேற்பார்வையிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

பேண்ட் பாக்கெட்டுகளில் கைகளை நுழைத்துக் கொண்டு வந்தவன்... இவளைக் கண்டதும் சட்டென்று நின்றான்.

''கும்பிடறேன் ராஜன் சாரு''

''மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டின வனப்பகுதிக்கு வயசுப் பொண்ணு தனியாப் போறது நல்லதுக்கு இல்லைன்னு... ஏற்கனவே உனக்கு எச்சரிச்சேனே?'' - உரிமையாய் அதட்டினான் ரகு.



''அட... போ சாரு! ஆசிரமத்தைக் கட்டின பிற்பாடு எம்புட்டு சனங்க வர்றாங்க... எனக்கென்ன பயம்?''

''அது மிருகங்க நடமாடற வனப்பகுதி... விஷச் செடிங்க நிறைய இருக்கு... வயசுப் பொண்ணு தனியாப் போறே... அங்க இருக்கறவங்களாலேயே ஏதாச்சும் ஆபத்து வந்துட்டா? இனிமே நீ போகாதே... உனக்கு வேண்டிய பணத்தை நான் தந்துடறேன்.''

''அட... சும்மா இரு சாரு! நம்ம ராஜன் சாரு சாமியாவே ஆயிட்டாருல்ல? அவுகளுக்கு பூவு குடுக்க நான் புண்ணியம் செஞ்சிருக்க வேணாமா?

எனக்கொண்ணும் ஆவாது சாரு... பயப்படாதே! இந்த மண்ணுல பொறந்தவளுக்கு எல்லா வெஷச் செடியும் அத்துபடி சாரு...

பூசை ஆரம்பிக்கிறதுக்கு முன்ன... நான் பூவு குடுக்கணும்'' - வேக நடை போட்டாள்.

ரகு பயந்தது போலவே... ஒரு சில மாதங்களில் அந்த ஈடில்லா காட்டு ரோஜா கசக்கி முகரப்பட்டு சின்னா பின்னா ரக்கப் பட்டது.

## 5

''என்ன டாக்டர் சொல்றீங்க? அப்பாவுக்கு அடிக்கடி நெஞ்சு ட்ரபிள் வரும். இன்னிக்கும் அப்படித்தான் இருக்கும்னு சாதாரணமா நெனச்சேனே? ஆனா... நீங்க குண்டைத் தூக்கிப் போடறீங்க.''

ரகுவால் அந்த அதிர்ச்சியை உள்வாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

''பதட்டப் படாதீங்க ரகு! இது மைல்ட் அட்டாக்தான். அப்பா எந்தக் காரணத்தைக் கொண்டும் டென்ஷன் படக்கூடாது. அதிர்ச்சி தரக்கூடிய எந்த விஷயத்தையும் அவர்கிட்ட சொல்லாதீங்க... முக்கியமா கவலையே படக்கூடாது.

லோகநாதராஜன் சாருக்கு நிச்சயமா எந்தக் கவலையும் இருக்கப் போறதே இல்ல... எண்ணெய்ப் பலகாரங்கள், ஊறுகாய் எதையும் தொடாம டயட்டை மெயின்டெயின் பண்ணிட்டா... சரியாயிடும்.

கார்த்தால தியானம் பண்ணி மனசை இலேசா வச்சுக்கிட்டா பயப்படவே தேவையில்லை.''

- குடும்ப மருத்துவர் விஸ்வநாதன் உரிமையுடன் அவனது புஜத்தில் ஆறுதலாகத் தட்டினார்.

பய முலாம் பூசிய முகங்களோடு தனம்மாளும், ரகுவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பேயறைந்த முகத்துடன் வாசற் கதவருகே நின்று திருதிருத்துக் கொண்டிருந்தார் கற்பகம்.

டக்க... அப்பால் நகர்ந்து சென்றதும்... மெல்ல விசும்பத் தொடங்கினாள் தனம்மாள்.

"ரகுப்பத்திமா... மைல்ட் அட்டாக்கே வந்துடுச்சோ டாக்டர் கவலையே படக்கூடாதுன்னு சொல்லிட்டுப் போறாரு... ஆனா விதியைப் பாரு... நாமெல்லாம் கவலைப்படாம இருக்க முடியுமா?

பொறுப்பவே புத்தி இப்படியா போகணும்? இது எதுலே போயி முடியப் போகுதோன்னு பயந்து பயந்தே... அவருக்கு அட்டாக் வந்துடுச்சோ ... ப்பவே கடவுள்கிட்டே பூவோடும் பொட்டோடும் சீக்கிரமா போய் சேர்ந்துடணும்னு... நா வேண்டிக்க ஆரம்பிச்சுட்டேன்."

"ஏன் என்னம்மா இது? நம்பிக்கையைத் தளரவிடாதீங்க... எல்லாம் நல்லபடியா நடக்கும்" என்றபடி கற்பகத்தை ஏறிட்டான். சேலைத் தலைப்பால் வாயை இறுக மூடிக் குலுங்கிக் கொண்டிருந்த கற்பகம் விருட்டென்று நடந்து சென்றாள்.

நாலைந்து நாட்களாக வீடே துக்கத்தில் மூழ்கிக் கிடந்தது. வீட்டில் நிலவிய பயான அமைதி... இனம் புரியாத திகிலை வரவழைத்தது.

"இன்னிக்கு நீங்க வேலுசாமியைக் கூட்டிட்டு போகலாம். அவர் ரொம்ப ஸ்ட்ரெயின் பண்ணிக்காம பார்த்துக் கோங்க" - முறுவலித்து விட்டு டாக்டர் சென்றதும்... ரகுவும் தனம்மாளும் அவரது கால்மாட்டில் போய் அமர்ந்தனர்.

"ஆ... தனம்! ரகுவுக்கு சீக்கிரம் கல்யாணத்தைப் பண்ணிடணும். கல்யாண ஏற்பாட்டை ஆரம்பிச்சுடு... இவனையாவது நான் மாலையும் கழுத்துமா பார்க்கணும்.

எல்லா விஷயமும் சீக்கிரமே அம்பலத்துக்கு வந்துடும். நியாரு வசமா மாட்டிக்கிட்டான்னு... கோர்ட்டுன்னு நம்ம குடும்ப மானம் கப்பலேறும் முன்னாடி... நான் போய் சேர்ந்துடணும் தனம்."

அவரது விழியோரங்களில் வழிந்த கண்ணீர் கோடு போட்டுக் கொண்டு இறங்கி தலையணையை நனைத்தது.

"அபசகுனமா இருக்கு. அப்படியெல்லாம் எதுவும் ஆகாது. கவலைப் படாதீங்க... நீங்க ரிலாக்ஸ்டா மனசை வச்சிக்கணும். உங்க நல்ல மனசுக்கு எவ்விதக் குறையும் வராதுப்பா."

"என்னங்க நான் உங்க வார்த்தையை எப்பவும் மீறினதே இல்லை... சீக்கிரமாவே இவனுக்கு கல்யாணத்தைப் பண்ணிடலாம். ரகு! கிளம்புடா... நான் உடனே தாரகைக்கு போன் பண்ணி வரச் சொல்லணும்."

முட்டிக் கொண்டு வந்த அழுகையை அடக்கிக் கொண்டு நடந்தார் தனம்மாள்.

தயக்கத்துடன் தாயாரைப் பின் தொடர்ந்தான் ரகு.

டைரியைப் பார்த்து தாரகைக்கு டயல் செய்ய முற்பட்டவரின் கரத்தைப் பற்றிக் கொண்டான்.

"அம்மா! அவசரப் படாதீங்க... நான் நிதானமா நைட்லே உங்க ரூமுக்கு வந்து பேசிடறேன். என் மனசுல உள்ளதை வெளிப்படையா உங்க கிட்ட சொல்லணும்னு பிரியப்படறேன்... தாரகைக்கு போன் பண்ணாதீங்கம்மா... ப்ளீஸ்...!"

தனம்மாளின் முகத்தில் பீதியும் கலவரமும் போட்டி போட்டுக் கொண்டு படர்ந்தன.

"ஏம்பா தடுக்கறே? 'அண்ணன் கல்யாணமே பண்ணிக்காம துறவியா நிக்கிறானே? நாம எப்படி கல்யாணம் செய்துக்கிடறது?' அப்படின்னு யோசிக்கிறியாரு?"

ஏடாகூடமாக மறுத்துப் பேசி நெஞ்சில் நெருப்பள்ளிக் கொட்டி விடுவானோ என்று ஏகத்திற்கும் பயந்தார்.

"அ... அதில்லைம்மா... என்னோட காலேஜ்மேட் கார்த்தியோட கல்யாணம் கம்பத்துல நடந்துச்சு இல்லையா? அங்க மண்டபத்துல ஒரு பொண்ணைப் பார்த்தேன்.

அவளே எ... எனக்கு மனைவியா வந்தா... என் வாழ்க்கை சிறப்பா அமையும்னு நான் நம்பறேன்மா"

சங்கோஜத்துடன் தயங்கி நிறுத்தினான்.

"அப்பாடா... இதுக்கா இவ்வோ பீடிகை போட்டே? உன் மனசுக்குப் பிடிச்சிருக்குல்ல... அவளையே பேசி முடிச்சிருவோம்... அவ யாரு? எந்த ஊரு? அவ குடும்பத்தைப் பத்தி ஏதாச்சும் தெரியுமா?"

"கார்த்தியோட மிஸஸ் வானமதிக்கு தோழியாம். ஊரு சென்னை மத்த டீடெய்ல்லை இனிமே தான் கலெக்ட் பண்ணணும்."

"அடுத்த வாரமே நாம்ப பொண்ணு பார்க்கப் போகணும். அதுக்கான ஏற்பாட்டை ஆரிதுமா பண்ணு. உனக்கும் அந்தப் பொண்ணுக்கும் பகவான் முடிச்சுப் போட்டு வச்சிருந்தான்னா... அதை யாராலேயும் தடுக்க முடியாது."

"உங்களுக்கு ரொம்பப் பெரிய மனசும்மா... உங்களுக்கு மகனாகப் பிறக்க... நான் கொடுத்து வச்சிருக்கேன்" தழுதழுத்தபடி அவரது கையைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டான்.

"இதுக்குப் பயலே... மசமசன்னு நிக்காம எல்லா ஏற்பாட்டையும் சீக்கிரமா பண்ணு" - பெருமூச்செறிந்தபடி மெல்ல மாடியேறினார்.

இருண்ட வானில் சிறு மின்னல் வெட்டியதைப் போல... பெரிய கவலை மனதை ஆட்டிப் படைத்தாலும்... உள்ளம் கவர்ந்த அழகிய மனைவியாக வாய்க்கப் போகின்றாள் என்ற நிம்மதியில் சிறு மகிழ்ச்சி கீற்று ஒன்று குபுகுபுவென்று பொங்கியது நிஜம்!

ஆசைப்பட்டவளையே கைப்பிடித்து இனிய இல்லறத்தைத் தொடங்கப் போகின்றோம் என்று கனவு கண்டு கொண்டிருந்தான் ரகு.

ஆனால்... விதி சதி செய்து அவளது கனவை முற்றிலுமாகக் கலைக்கப் போகின்றது என்பதை... அவள் எப்படி அறிவாள்?

## 6

**த**ங்கம் அனைவருக்கும் பரிமாறிக் கொண்டிருந்தார்.

''இப்படி கொறிச்சுட்டிருந்தா உடம்பு என்னத்துக்கு ஆகும்? இந்தா... இன்னொரு சப்பாத்தியை நீ சாப்பிட்டுதான் ஆகணும்''

''ஐயோ! என்ன பெரியம்மா இது? ஏற்கனவே ரெண்டு சாப்பிட்டுட்டேன்.'' சிணுங்கினாள் சம்யுக்தா.

''நல்லா சாப்பிட்டாத்தானே தெம்பா இருக்க முடியும் குழந்தே? கூடிய சீக்கிரமே நம்ம வீட்டுலே கல்யாண மேளம் கொட்டப் போகுது'' - பொன்னுரங்கம் புன்னகை பூத்தார்.

''அப்பா! நம்ம சுரேஷுக்கு கல்யாணமா? சீக்கிரமா இவனுக்கு ஒரு கால்கட்டைப் போட்டு அடக்கி வையுங்க.''

வீணா கிண்டலடித்தாள்.

''அப்பா என்ன சொல்ல வர்றாருன்னு முழுசா கேட்டுட்டுப் பேசு..: அவரு கால் கட்டு போடப் போறாரா? இல்ல மூக்கணாங்கயிறு மாட்டிவிடப் போறாரான்னு... பொறுத்திருந்து பாரு... முந்திரிக் கொட்டை மாதிரி முந்தாதே''

சுரேஷ் வீணாவின் தலையில் 'நறுக்' என்று குட்டு வைத்தான்.

''என்னப்பா உளர்றான் இவன்?''

''உங்க ரெண்டு பேத்துக்கும் படிப்பு முடிஞ்சிருச்சு இல்லையா? தரகர்கிட்ட சொல்லி நல்ல வரனா பார்க்க சொன்னேன். பையன் மும்பையில என்ஜினீயரா வேலை பார்க்கிறாராம்... மாப்பிள்ளைக்கு அம்மா அப்பா இருக்காங்களாம்... ஆனா அவங்க கிராமத்தை விட்டு வர மாட்டாங்களாம்.

தேனிக்குப் பக்கத்துல இருக்கிற 'அல்லிநகரம்' கிராமம்தான் சொந்த ஊராம். கல்யாணமாகிட்டா பொண்ணும் மாப்பிள்ளையும் மும்பையில தனிக்குடித்தனம்தான்... பிக்கல் பிடுங்கல் இல்ல...

இந்த இடத்தையே நம்ம சம்யுவுக்கு முடிச்சுடலாம்னு இருக்கேன். கிராமத்துல நஞ்சைபுஞ்சை நிலங்களும் பெரிய பூர்வீக வீடும் இருக்காம்... வசதிக்கும் குறைச்சல் இல்லை.''

சப்பாத்தியைப் பிய்த்து குருமாவில் தோய்த்து வாய்க்குள் திணித்துக் கொண்ட சம்யுக்தாவுக்கு திக்கென்றிருந்தது.

சப்பாத்தி தொண்டைக்குள் இறங்க மறுத்துப் புரட்சி செய்தது.

''வீணாவையும் சீக்கிரமா தள்ளி விடுங்கப்பா'' என்ற சுரேஷை முறைத்தாள் வீணா.

''அவனுக்கு லைன் க்ளியராகணும்னு துடிக்கிறான் அப்பா''

''வீணாவுக்கும் ஒரு வரன் வந்திருக்கு... தங்கம்! என்னோட சிநேகிதர் பத்மநாபன் இருக்காரே? அவரு மூலமா நல்ல வரன் வந்திருக்கு.''

''லயன்ஸ் க்ளப்லே செகரட்டரியா இருக்காரே அந்த பத்மநாபன்தானே?''

''அவரேதான்! மாப்பிள்ளையோட அப்பா பரம்பரை பணக்காரரு... குமுளி, மூணாறு, கம்பம், சுருளி, தேக்கடி வட்டாரத்துல நிறைய எஸ்டேட் இருக்காம். ரெண்டே பிள்ளைங்க... ரெண்டாவது பிள்ளைக்கு நம்ம வீணாவைக் கேட்கறாங்க...

அவங்க வீட்டுலே எல்லாருமே ரொம்ப நல்லடைப்பாம். மாப்பிள்ளைக்கு நல்ல குணமாம்... வீணாவுக்கு இந்த இடத்தையே முடிச்சுடலாம்னு இருக்கேன்.''

''பெரியப்பா! என் கல்யாணத்துக்கு இப்போ என்ன அவசரம்? எ... எனக்கு மேலே படிக்கணும்னு ஆசையா இருக்கு'' - மிடறு விழுங்கினாள் சம்யுக்தா.

''எங்களுக்கும் வயசாகிட்டே போகுது. சுரேஷ் பயல்... உங்களுக்கு கல்யாணம் பண்ணி அனுப்பி வச்சுட்டுத்தான்... சம்சாரியாவேன்னு ஒத்தைக் கால்லே நிக்கிறான்.

எங்க கடமையை நாங்க முடிக்க வேணாமா குழந்தே?

உன் தங்கமான குணத்தைப் புரிஞ்சுகிட்டு... மாப்பிள்ளையே உன்னை மேலே படிக்க வைப்பாரு... படிக்கிறதுக்கு உனக்கு எந்தத் தடங்கலும் வராதுடா... எங்க மனசையும் புரிஞ்சு நடந்துக்கோடா''

தலைகுனிந்து மெளனமாக சாப்பிடத் தொடங்கினாள். மனதில் ஒருவனை நினைத்து விட்டு... இன்னொருவனுக்கு மாலையிட முடியுமா?

இந்த ஒருதலைக் காதலால் யாருக்கும் எந்த நன்மையும் விளையப் போவதில்லை...

வெளியில் இதைச் சொல்லக்கூட முடியாதே? ஊமை கண்ட கனவு போல்... மனதில் முகிழ்த்த காதலை அப்படியே புதைத்துவிட வேண்டியதுதான்.

மனதைக் கல்லாக்கிக் கொண்டு விதி விட்ட வழிப்படி நடக்க வேண்டியது தான்.

சுகமோ துக்கமோ வாழ்வின் நிதர்சனத்தை ஜீரணித்துக் கொண்டு வாழப் பழகிக்கொண்டவளாயிற்றே?

மனதில் பதிந்திருந்த அந்த வசீகரமான உருவத்தை நீர் ஊற்றிக் கலைத்து அழித்தாள்.

இதயத்தில் குத்திட்டியை செருகி இழுத்ததைப் போன்று இருந்தது. வேதனையில் மனம் வெம்பித் தவித்தது.

அடுத்த வாரமே... தன் மனம் கவர்ந்தவனைத் திரும்பவும் சந்திப்போம் என்று சம்யுக்தா கனவில் கூடக் கருதவில்லை.

''மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வர்ற நேரமாச்சு... சம்யு! வீணாவுக்கு இன்னுமா அலங்காரம் முடியலே?''

தங்கம் பரபரத்தார்.

''இதோ ஆச்சு பெரியம்மா... நெத்திச்சுட்டியை மாட்டிட்டா அலங்காரம் ஓவர்'' - சிரித்தாள்.

''அவங்க வந்ததும் காபி டிரேயை நீயே கொண்டு வந்துடு சம்யு. வீணாவை நான் அழைச்சுட்டு வந்துடறேன்.''

''சரி பெரியம்மா!''

''தங்கம்! அவங்க எல்லாரும் வந்துட்டாங்க'' - உரத்துக் குரல் கொடுத்துவிட்டு... ''வாங்க... வாங்க! நமஸ்காரம்... உட்காருங்க'' என்று பொன்னுரங்கம் உபசரித்தார்.

பரஸ்பரம் அறிமுகம் செய்து கொண்ட பின் தங்கம், ''சம்யு! எல்லாருக்கும் காபி கொண்டு வந்து குடும்மா'' என்றார்.

ஜரிகை பார்டர் போட்ட கத்தரிப்பூ வண்ணக் காட்டன் புடவையில் தேவதையாய் மிளிர்ந்தாள் சம்யுக்தா.

காபி ட்ரேயை ஏந்தியபடி நிதானமாய் நடந்து வந்தவள்... தயக்கத்துடன் பொன்னுரங்கத்தை ஏறிட்டாள்.

''அதோ... நடுநாயகமாக உட்கார்ந்திருக்காரே... அவர் தான் மாப்பிள்ளை... முதல்லே அவருக்கு குடும்மா'' என்றதும் தற்செயலாய் ஏறிட்டவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

அன்று... வான்மதியின் திருமணத்தின்போது சந்தித்த இளைஞர் அல்லவா?

வான்மதியின் கணவன் கார்த்தி பேசியது இன்றளவும் செவிகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது.

**''மதி! நீ உன்னோட ஃபிரண்ட்ஸை அறிமுகப் படுத்தி வச்சேயில்ல? இதோ இவன் ரகு... என்னோட டியரஸ்ட் ஃபிரண்ட்... ஆங் ரகு! இவங்க மதியோட ஃபிரண்ட்ஸ்... சென்னையிலிருந்து வந்திருக்காங்க''** என்றதும்... மரியாதை நிமித்தமாக சம்யுக்தாவும் வீணாவும் கைகளைக் குவித்தார்கள்.

ரகுவை முதன்முறையாக அவள் ஏறிட்டபோது... அவனை எங்கோ பார்த்த மாதிரியான உணர்வு ஏற்பட்டது.

ஜென்ம ஜென்மமாய் நெருங்கிப் பழகியதைப் போன்ற இனம் புரியாத இனிய உணர்வு தோன்றியது.

நான்கு விழிகளும் ஆர்வமாய் மோதிக் கொண்ட போது மின்னல் வெட்டியது.

அதுவரை வறண்டு கிடந்த இதயத்தில் லட்சோப லட்சம் வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கின.



இதயத்தில் ஓசையின்றி வண்ணத்துப் பூச்சிகள் சிறகடித்தன.

அவனுக்கும் அதே நூதன அனுபவம் ஏற்பட்டிருக்க வேண்டும். பந்தியில் எதிரெதிர் வரிசையில் அமர்ந்து சாப்பிடும் போது... இமை கொட்டாமல் தன்னையே பார்ப்பது புரிந்ததும், உடம்பிலுள்ள ரத்தம் முழுவதும் முகத்திற்கு வந்து விட்டதைப் போன்று குப்பென்று அவளது அழகு முகம் சிவந்து போனது.

மண மக்களிடம் சொல்லிக் கொண்டு அவன் விடை பெற்றபோது... உடலிலிருந்த பலம் முழுவதும் உறிஞ்சப் பட்டது போன்ற தளர்வு ஏற்பட்டது நிஜம்!

'பெரியப்பா கல்யாணப் பேச்சை ஆரம்பித்ததுமே... மனதில் மணம் வீசிய காதலைப் புதைத்து இதயத்தைப் பாறையாக்கிக் கொண்டு நடமாடும் நேரத்தில்... மீண்டும் வந்து விட்டாரே?

இவர்தான் மாப்பிள்ளையா? ஐயோ... வீணாவை இவர் பெண் பார்க்க வந்திருக்கிறாரா?'

ஆயிரம் தேள்கள் ஒரு சேரக் கொட்டியது போன்ற வேதனையில் துடித்துப் போனாள். கீழுதட்டை அழுந்தக் கடித்து அழுகையை அடக்கிக் கொண்டு காபிட் ட்ரேயை பவ்யமாய் நீட்டினாள்.

''தேங்க் யூ'' என்றபடி ரகு மந்தகாசமாய் புன்னகைத்துக் கொண்டிருந்ததைப் பார்த்ததும்... குழப்பம் அவளைப் பந்தாடியது.

'என்னது இது? இவரது முகத்தில் ஆசையும் ஆர்வமும் - எதையோ சாதித்துவிட்ட வெற்றிக் களிப்பும் பிரதிபலிக்கின்றனவே?'

''உன் பேரென்னம்மா?'' - தனம்மாளுக்கு சம்யுக்தாவை நிரம்பவே பிடித்து விட்டிருந்தது.

''சம்யுக்தா.''

''உன்னைப் போலவே உன் பேரும் ரொம்ப அழகா இருக்கு'' என்ற தனம்மாள் கற்பகத்தை சுட்டிக் காட்டினார்.

''இவ என்னோட தங்கை கற்பகம்... இவளும் உனக்கு மாமியார் தான்... கொஞ்ச நாளைக்கு அவர் நீண்ட தூரம் பிரயாணம் செய்யக் கூடாதுன்னு... டாக்டர் சொன்னதால நாங்க மட்டும் கிளம்பி வந்தோம்'' - உரிமையாய் பேசியவரைப் பார்த்து விதிர்த்தாள் சம்யுக்தா.

பொன்னு ரங்கத்திற்கு ஏதோ நெருடிவிட்டது போலும். ''தங்கம்! பொண்ணை அழைச்சுட்டு வாம்மா'' என்று குரல் கொடுத்தார்.

''உம்! வாம்மா வீணா! பெரியவங்களை நமஸ்காரம் பண்ணிக்கோ'' என்று அவர் கூறியதும்... வந்தவர்களின் முகங்கள் இருண்டு போயின. காபிட் ட்ரேயை எடுத்துக் கொண்டு கிச்சனுக்குள் அடைக்கலமான சம்யுக்தாவுக்கு குப்பென்று வியர்த்துக் கொட்டியது.

''இவ தான் எங்க சொந்த பேத்தி வீணா! காபி குடுத்தாளே... அவ என்

மருமகளோட தங்கச்சி பொண்ணு. பெத்தவங்க இல்லாம அனாதையா நிக்குதேன்னு... இங்க கூட்டிட்டு வந்து வளர்க்கிறோம்'' - பேச்சியம்மாள் பட்டென்று விஷயத்தைப் போட்டு உடைத்தார்.

சம்யுக்தாவின் விழிகளிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகி வழிந்தது. உள்ளே பதற்றம் பந்தாய் மோதியலைந்தது.

## 7

**வ**ந்தவர்கள் வாயடைத்துப் போய் விட்டனர். வீணா நமஸ்கரித்து எழுந்த போது தர்ம சங்கடத்துடன் தனம்மாளை ஏறிட்டான் ரகு.

தங்களுடன் வந்திருந்த லயன்ஸ் கிளப் செகரட்டரி பத்மநாபனிடம் பேசும் படி கண் ஜாடை காட்டினார் தனம்மாள்.

துணிவு கைவரப் பெற்ற ரகு, பத்மநாபனிடம் குனிந்து மெல்லிய குரலில் இக்கட்டான சூழ்நிலையைப் பற்றி விவரித்தான்.

தொண்டையை செருமிக் கொண்டு பத்மநாபன் பேச ஆரம்பித்தார்.

''பொன்னுரங்கம்! ஒரு சின்னக் குழப்பம் நடந்து போச்சுப்பா... மாப்பிள்ளை ரகு கம்பத்துல ஒரு கல்யாணத்துக்குப் போனாராம். உங்க வீட்டுப் பொண்ணுங்க கூட அந்த கல்யாணத்துக்குப் போனாங்கல்ல?

சம்யுக்தாவைப் பார்த்ததும் தம்பி ஆசைப் பட்டுட்டாரு போல... எப்படியோ விசாரிச்சு என்கிட்ட வந்து இந்த வீட்டுப் பொண்ணை நாங்க 'பெண்' கேட்டு வரோம்னு சொன்னதும்... நான்தான் தவறாப் புரிஞ்சுகிட்டேன். இது என் பிசகு தான்!

எதையும் மனசு விட்டு வெளிப்படையாப் பேசிடறது நல்லது இல்லையா? அவங்களுக்கு சம்யுக்தாவை ரொம்பவும் பிடிச்சிருக்கு... வீணாவைப் பார்க்க வந்துட்டு... சம்யுக்தாவை கேட்கிறாங்களேன்னு தப்பா நெனச்சுடாதேப்பா...

அவங்க சம்யுக்தாவைத்தான் பெண் கேட்க வந்திருக்காங்க... இதுக்கு மேல நீதான் முடிவெடுக்கணும் பொன்னுரங்கம்!''

பத்மநாபன் தெள்ளத் தெளிவாக... மனம் நோகாதபடி பக்குவமாகப் பேசியதைக் கேட்ட பொன்னுரங்கம் தம்பதியினர் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''தர்மசங்கடத்துக்கு மன்னிக்கணும்... உங்களுக்குள்ளே பேசி முடிவு பண்ணிட்டு சொல்லி அனுப்புங்க'' - தனம்மாள் எழுந்து நின்று கை கூப்பினார்.

''ஐயோ! இதுலே பேசி முடிவெடுக்கிறதுக்கு ஒண்ணுமே இல்ல... எங்களுக்கு எந்த வருத்தமும் இல்ல... சம்யுக்தாவும் எங்க பொண்ணு தானே?



உட்காருங்கம்மா... தங்கம்! உள்ளே போயி குழந்தையை அழைச்சுட்டு வா'' என்று மலர்ந்த முகத்துடன் பொன்னுரங்கம் பேசியதும்... சூழ்நிலையின் இறுக்கம் சற்றே தளர்ந்தது.

**கா**ரியங்கள் யாவும் மளமளவென்று நடந்தேறின.

காதலுக்கு சமாதி கட்டி விட்ட நேரத்தில்... திடீர் திருப்பம் ஏற்பட்டு ரகுவையே மணந்து கொள்ளும் சந்தர்ப்பம் வாய்த்ததும்... சம்யுக்தாவுக்கு உள்ளூர மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டது.

''அவ்ளோ பெரிய இடத்துல என் பேத்தி வாழ்க்கைப் படப் போறாளேன்னு சந்தோஷமா இருந்தேன்! பார்த்தியா உன் தங்கச்சி பொண்ணு செஞ்ச காரியத்தை?

வீணாவோட வாழ்க்கையையே வீணடிச்சுட்டாளே? பாவி! இவ நல்லா இருப்பாளா? அவ காபி கொண்டு போயி குடுக்கும் போதே நெனச்சேன்... அழகைக் காட்டி மயக்கி வந்தவங்களை இப்படி வளைச்சுப் போட்டுட்டாளே?

உண்ட வீட்டுக்கு ரெண்டகம் பண்ணினவ உருப்படுவாளா? கிராதகி''

பேச்சியம்மாள் பேசியதைக் கேட்டதும்... சம்யுக்தாவின் நெஞ்சே வெடித்து விடும் போலிருந்தது.

கட்டிலில் குப்புற விழுந்து முதுகு குலுங்க குமுறி அழுதாள்.

''என்ன பேச்சு பேசறேம்மா? வந்தவங்க பேசினதை எல்லாத்தையும் காது குடுத்து கேட்டே இல்ல?

அவங்க சம்யுக்தாவைப் பெண் கேட்கத்தான் அவ்ளோ தூரத்துல இருந்து வந்திருக்காங்க... எல்லாம் தெரிஞ்சிருந்தும் ஏன் இப்படி அந்தக் குழந்தையோட மனசைப் புண் படுத்தறே?

வீணாவோட வாழ்க்கை எந்த விதத்துலே வீணாப் போச்சு? தரகர் கொண்டு வந்த மும்பை வரனை நம்ப வீணாவுக்கு முடிச்சுடலாம்னு இருக்கேன். அதுவும் நல்ல வசதியான குடும்பம்தான்! தேனிக்குப் பக்கத்துல நிறைய நிலபுலன்கள் இருக்கு... அந்தஸ்தான பெரிய இடம்தான்!

ஒரே மாசத்துல ரெண்டு கல்யாணத்தையும் முடிச்சுடலாம்னு இருக்கேன். முதல்லே உன் பேத்தியோட கல்யாணம்தான். தேனியில வச்சு ஜாம் ஜாம்னு நடத்திடலாம். சரியா? திருப்தி தானே?

சம்யுக்தாவைப் பொண்ணு பாத்துட்டுப் போனவங்க... கல்யாணத்தை சிம்ப்பிளா அவங்க எஸ்டேட்டுக்குப் பக்கத்துல இருக்கற... சுருளி ஆண்டவர் கோவில்லே வச்சு நடத்திடலாம்னு சொல்றாங்க...

சம்யுக்தா இன்னும் கொஞ்ச நாளைக்குத் தான் இங்க இருப்பா... சும்மா அவளைத் திட்டி சபிச்சு... அவ வயித்தெரிச்சலை வாரிக்கொட்டிக்காதே... அந்தப் பாவம் சும்மா விடாதும்மா...''

''உக்கும்'' - முகவாய் கட்டையை தோளில் இடித்து விட்டு தனது அறைக்குள் புகுந்து கொண்ட பேச்சியம்மாளைப் பார்த்த பொன்னுரங்கத்தின் விழிகள் வெறுப்பை உமிழ்ந்தன.

''சம்யு ரொம்ப பாவம்ங்க'' - தங்கத்தின் கண்கள் ஏகத்திற்கும் கலங்கின.

''குழந்தையை சமாதானப் படுத்தறதை விட்டுட்டு... கண் கலங்கிட்டு இருந்தா என்ன அர்த்தம்? வா!'' என்றபடி அறைக்குள் நுழைந்த பொன்னுரங்கம் சம்யுக்தாவின் தலையை ஆதுரமாக வருடினார்.

சட்டென்று எழுந்து அமர்ந்தவளின் கண்ணீரை வாத்சல்யத்துடன் துடைத்து விட்டார் தங்கம்.

''அவங்க குணம்தான் உனக்குத் தெரியுமே... எதையும் காதுல வாங்கிக்காதே சம்யு''

''இல்ல... பெரியம்மா! வீணாவோட வாழ்க்கையை நான் தட்டிப் பறிச்சுட்டதா சொல்லிட்டாங்களே? என்னால அதைத்தான்...'' - அவள் பேசி முடிக்கும்முன் இடைமறித்தார் பொன்னுரங்கம்.

''கிழவிக்கு நட்டு கழண்டு போச்சு! படிச்ச பொண்ணு நீ... நாலும் தெரிஞ்சவ... பாட்டி ஏதோ உளறினதைப் போயி பெரிசா எடுத்துக்காதே... உன்னை யாரும் தப்பா நெனைக்கவே இல்லையே...'' என்றார்.

''இதுநா வரைக்கும் நகமும் சதையுமா இருந்தீங்க... கல்யாணமாகி அவங்கவங்க தனியா போகப் போறீங்க... சம்யுக்தா கெட்டிக்காரி. லீவு நாட்கள்லே அம்மாகிட்டயே நின்னு சமைக்க நல்லா கத்துக்கிட்டா... ஆனா வீணா கிச்சன் பக்கமே தலை வச்சுப் படுக்கலை... ஹூம்! அவ மாப்பிள்ளையை நினைச்சா பாவமா இருக்கு... அவர் பாடு திண்டாட்டம் தான்.''

சுரேஷ் வேண்டுமென்றே பேச்சை திசை திருப்பினான்.

''ரொம்ப மட்டம் தட்டாதே... எனக்கு இட்லி அவிக்கத் தெரியும். டீ போடத் தெரியும்... சட்னி கூட செய்யத் தெரியும்'' - பெருமிதமாய் கூறினாள் வீணா

''உக்கும்! வெந்நீர் போடத் தெரியும். அடுப்பைப் பத்த வைக்கத் தெரியும்னு சொல்லேன்... உனக்கு 'கிச்சன் குவீன்'னு பட்டத்தை இப்பவே குடுத்துடறேன்.''

சுரேஷ் கூறியதைக் கேட்டதும் கவலையை மறந்து கலகலவென்று சிரித்து விட்டாள் சம்யுக்தா.

அவர்கள் அனைவரும் சிரித்த சிரிப்பொலியில் அந்த வீடே அதிர்ந்தது.

• **நா**ட்கள் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தன. ஒரே மாதத்தில் இரு பெண்களின் திருமணத்தையும் நடத்திவிட வேண்டும் என்று முடிவெடுத்தபடியே... பத்திரிகைகளை அச்சடித்து, கால்களில் சக்கரத்தைக் கட்டிக் கொண்டாற் குறையாக... மிகவும் பரபரப்பாக செயல்பட்டனர்



பொன்னுரங்கம் தம்பதியினர்.

வீணாவின் திருமணம் தேனியில் மிக விமரிசையாக நடந்தது. லோகநாதராஜன் உடல் நலம் தேறி விட்டதால் குடும்பத்துடன் காரில் வந்து இறங்கினார்.

மணப்பெண்ணின் தோழியாய் அலங்கரித்துக் கொண்டு நின்றிருந்த சம்யுக்தாவைப் பார்வையாலேயே அளவெடுத்தான் ரகு.

அவனது விழிகள் அவளுடைய நெஞ்சுக்கூட்டைத் துளைத்து இதயத்தைத் தீண்ட... மனதிற்குள் சுகமான நேச மழைச் சாரல்!

''நல்லாயிருக்கியா சம்யுக்தா?'' - அவளுக்கு மட்டும் கேட்கும் படி பேசினான். அவனது குரல் சுகமாக மனதில் சாமரம் வீசியது.

''உம்... நீங்க?'' - பதிலுக்கு அவள் உதிர்த்த ஒற்றை வார்த்தை மெல்லிய பூஞ்சிறகால் இதமாய் வருடியதைப் போன்றிருந்தது.

''எங்கே... இன்னும் ரெண்டு வாரங்களை எப்படி கடத்தப் போறோம்னு மலைப்பா இருக்கு'' - கிசுகிசுப்பாய் பேசிய ரகுவின் விழிகளை நேருக்கு நேர் பார்க்கத் தெம்பின்றி... பார்வையைத் தழைத்துக் கொண்டிருந்தாள்.

நெஞ்சுக்குள் ஜிலு ஜிலுவென்று ஐஸ் க்ரீம் மழை வழிந்தோடியது.

பொன்னுரங்கத்தின் கைகளைப் பிடித்தபடி பேசிக் கொண்டிருந்த லோகநாதராஜன் இவர்களை நாடி வந்தார்.

முக ஜாடையைப் பார்த்ததுமே புரிந்து கொண்ட சம்யுக்தா சட்டென்று அவரது கால்களைத் தொட்டுப் பணிந்தாள்.

''சௌபாக்கியவதியா இரும்மா'' - இருவரையும் ஜோடியாய் சேர்த்து வைத்துப் பார்த்த லோகநாதராஜனுக்கு உள்ளூர பரம திருப்தியாக இருந்தது.

விருந்து உபசாரம் முடிந்து ரகுவின் குடும்பம் விடை பெற்றுச் சென்றதும் மண்டபத்திலிருந்து பெண்ணும் மாப்பிள்ளையும் மணமகன் வீட்டிற்குச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர்.

'மணமகள் அறை' வாசலின் அருகே நின்ற சம்யுக்தாவின் கரத்தைத் தொட்டாள் பத்து - பதினொரு வயது கொண்ட சிறுமி.

''மயில் கழுத்து கலர்லே பட்டுப்புடவை கட்டியிருக்கீங்களே? நீங்க தானே சம்யுக்தா?'' - அவளை மேலும் கீழும் ஆராய்ந்து கொண்டே கேட்டாள் அந்த சிறுமி.

வீணா முகம் கழுவி விட்டு வேறு பட்டுப்புடவைக்கு மாறிக் கொண்டிருந்தாள். கதவை சாத்திவிட்டு வந்திருந்ததால்... இவர்களது சம்பாஷணையை வீணா கேட்க முடியாது.

''ஆமா... நீ யாரு பாப்பா? என் பேர் உனக்கெப்படி தெரியும்?''

அந்த சிறுமி திரு திருவென்று விழித்தபடி சுற்றும் முற்றும் பார்த்தாள்.

''நான் யாருங்கிறது முக்கியமில்லை... இந்தாங்க லெட்டர்! தனியாப் போயி படிச்சுப் பாருங்க... ரொம்ப முக்கியமான சமாச்சாரம் அதுல இருக்கு... நல்ல

யோசிக்க ஒரு முடிவை எடுக்க'' என்றபடி கடிதத்தை அவளது கையில் திணித்து விட்டு சிட்டாகப் பறந்தாள் சிறுமி.

கடிதத்தைத் தனிமையில் வாசித்தவளுக்கு... தலையில் இடி இறங்கியதைப் போலிருந்தது. உலகமே தட்டாமாலையாகச் சுழன்றது.

## 8

செவ்வந்தியின் கன்னங்களில் செம்மை படர்ந்திருந்தது. இரு தினங்களுக்கு முன் நடந்த சம்பவத்தை... மனதில் ரீவைண்ட் பண்ணிப் பார்த்தாள்.

அன்று... கொட்டிய மழையைக் கூடப் பொருட்படுத்தாமல்... பூச்சரங்களை கருட்டி மூங்கில் கூடையில் வைத்து பிளாஸ்டிக் பேப்பரால் மூடிக்கட்டி தலையில் வைத்துக் கொண்டு கிளம்பி விட்டிருந்தாள்.

தாத்தா முனியன் தோட்ட வேலைக்கு வெகு சீக்கிரமாகவே கிளம்பியிருந்தார்.

மழையில் சொத சொதத்த செம்மண் பாதையில் நடப்பது பிரமப் பிரயத்தனமாக இருந்தது.

சேலை தொப்பலாக நனைந்து குளிரில் வெட வெடத்தபடி நடந்து செல்வது மிகவும் சிரமமாகவே இருந்தது.

'மழை பெய்ஞ்சிடுச்சு சாமி... அதனால நா வர முடியல' என்று ஒற்றை வரியில் சொல்லிவிடலாம்தான்.

'நீ வந்த பின்னாடிதான்... நான் பூஜையைத் துவங்குவேன். நீ பூ கொண்டு வரலைன்னா... ஆசிரமத்துல அன்னிக்கு பூஜையே கிடையாது தெரிஞ்சுக்கோ செவ்வந்தி' என்று தியாகராஜன் கூறியிருக்காரே?

தன்னால் ஆசிரமத்தில் நடக்கும் பூஜை தடை பட்டு விடக்கூடாது என்ற வைராக்கியத்துடன் சென்று விட்டாள்.

ஆசிரம வாசலில் சற்று நிதானித்தவள்... கூடையை இறக்கி வைத்து விட்டு சேலையின் அடி முனையை ஒன்று சேர்த்து ஒட்டப் பிழிந்தாள்.

வழக்கத்திற்கு மாறாக... ஆசிரமத்தில் ஒருவரையும் காணவில்லை.

''சாமி... சாமி!'' என்றழைத்தபடி பார்வையாலேயே ஆசிரமத்தை வலம் வந்தாள்.

தியாகராஜன் உள்ளறையிலிருந்து நிதானமாக வெளியில் வந்தான்.

மழையில் நனைந்திருந்த கரும்பச்சை வண்ணப் புடவை... செவ்வந்தியின் தாழம்பூ நிறத்தை தூக்கலாகக் காட்டியது. ஈரத்தில் பளபளத்த பளிங்கு தேகம்... 'அவள் ஒரு பேரழகி' என்று பறை சாற்றியது.

''இந்தாங்க சாமி பூவு...'' - மூங்கில் கூடையை அவனது காலடி அருகே வைத்து விட்டு நிமிர்ந்தாள்.

''அடாத மழையிலும் விடாத காரியம் செய்திருக்கியே! உன்னோட கடமை உணர்ச்சியைப் பாராட்டறேன். தொப்பலா நனைஞ்சுட்டியே... உன் உடம்புக்கு ஏதாச்சும் வந்துட்டா என்ன பண்றது?'' - குரலில் கரிசனம் வழிந்தோட பேசியபடி அவளை நெருங்கி வந்து உச்சந் தலையில் கை வைத்தான்.

தீயைத் தொட்டு விட்டாற் போல் திடுக்கிட்டு பதறி விலகி சற்று எட்டவே நின்று கொண்டாள்.

''என் உடம்புக்கு ஒண்ணும் ஆகாது. என்னால ஒங்க பூசைக்கு எந்தத் தடங்கலும் வந்துரக் கூடாது. அதான் ஓடியாந்தேன். நா கிளம்பறேன் சாமி.''

தியாகு... அவன் ஒரு பசுத்தோல் போர்த்திய புலி! அவனுக்குள் இருந்த மிருகம் அவளை வேட்கையுடன் பார்த்தது.

இவள் ஒரு காட்டு ரோஜாதான்! ஆனால் கவரிமான் ஜாதியைச் சேர்ந்தவள்... இவளை அவ்வளவு சுலபத்தில் அடைந்து விட முடியாது.

'இவளை எந்த வகையில் வேட்டையாடலாம்?' என்று தீவிரமாக மூளையைக் கசக்கியது.

''இரு செவ்வந்தி! ஓடறதிலேயே குறியா இருக்கியே? எனக்காக ஒரு காரியம் செய்வியா? செய்வேன்னு முதல்லே எனக்கு சத்தியம் பண்ணித் தா.''

வழுவழுவென்று ஷேவிங் செய்யப் பட்டிருந்த தாடையை தீவி விட்டுக் கொண்டே கேட்டான்.

''என்ன செய்யணும்னு சொல்லுங்க ராஜன் சாமி. செய்யக் காத்திருக்கேன். அந்த காளி ஆத்தா மேல ஆணை சாமி... என்ன சாமி செய்யணும்?''

''நான் அந்த பைரவியை வேண்டிக்கிட்டு ஹோமம் பண்ணலாம்னு இருக்கேன். அந்த ஹோமம் மட்டும் சரியா பூர்த்தி அடைஞ்சுட்டா... எனக்கு பெரிய சக்தி கிடைச்சுடும்.''

''இப்பவே நீங்க பெரிய சக்தி படைச்சவர்னு... எல்லாரும் சொல்றாங்களே சாமி?'' - மலங்க மலங்க விழித்தபடி பேசினாள் செவ்வந்தி

''அந்த ஹோமத்தை மட்டும் பண்ணி முடிச்சுட்டா... எனக்கு இப்ப இருக்கறதை விட நூறு மடங்கு சக்தி கிடைச்சுடும். அதை வச்சு என்னை நாடி நம்பி வர்ற பக்தர்களுக்கு நிறைய நன்மை செய்யலாம்... ஏவல், பில்லி, சூனியம், செய்வினை முதலிய தீய சக்திகளை அடியோடு அழிச்சுடலாம்.

எல்லாரும் எந்தக் குறையும் இல்லாம சுபிட்சமா வாழ வழி வகை செய்யலாம். நான் செய்வேன். இதோ இந்த லிங்கத்தின் மீது ஆணை!'' என்றபடியே தனது வாய்க்குள் இருந்து அந்த ஸ்படிக லிங்கத்தை எடுத்துக் காண்பித்தான்.

''சிவ சிவா... சிவ சிவா'' என்றபடி கைகளால் கன்னத்தில் போட்டுக் கொண்டாள் செவ்வந்தி. மனம் பக்தியில் உருகியது.

'எவ்வளவு பெரிய அதிசயத்தைக் கண்ணால் பார்த்து விட்டோம்!' என்ற பரவசத்திலும் சந்தோஷத்திலும் அப்படியே அந்தரத்தில் மிதப்பது போலிருந்தது.

''நான் என்ன செய்யணும்னு சொல்லுங்க சாமி'' - பரபரத்தாள்.

''அந்த ஹோமத்தை... ஒரு பிரமச்சாரி செய்ய முடியாது. பௌர்ணமி அன்னிக்கு நடுநிசி நேரத்துல ஒரு கன்னிப்பொண்ணு கழுத்துல நான் தாலி கட்டணும். அந்தப் பொண்ணு சாமுத்ரிகா லட்சணம் கொண்டவளா இருக்கணும். அதான் முக்கியம்! மலையில இருக்கற காளி கோவிலுக்கு முன்னாடி அந்தப் பொண்ணு, என் கழுத்துல செண்பக மாலையை சூட்டணும்.

கழுத்துல சூட்டப்பட்ட செண்பக மாலையோட நான் புலித்தோல்ல உட்கார்ந்து ஹோமத்தை செய்யணும். அப்பத்தான் அது பூர்த்தியாகும்''

அலங்க மலங்க விழித்தாள் செவ்வந்தி.

''இதுல நான் என்ன செய்யணும் சாமி? பௌர்ணமி அன்னிக்கு செண்பக மாலை வேணுமா சாமி? எப்படியாச்சும் கொண்டாந்து குடுத்துடறேன் சாமி''

''இல்ல... எனக்கு முதல்லே சாமுத்ரிகா லட்சணம் கொண்ட கன்னிப் பொண்ணு வேணுமே? அவ கழுத்துல தாலி கட்டணும். அதுக்கு அவ சம்மதிக்கணுமே?''

''அது என்னா லட்சணம் சாமி? எனக்கு வாய்க்குள்ளேயே நுழைய மாட்டேங்குதே?... இந்த அழகுல அந்த மாதிரிப் பொண்ணை நான் எங்கேன்னு போய் தேடுவேன்?'' - வெகுளித்தனமாய் கன்னத்தில் கைவைத்து கவலையாய் அவனை ஏறிட்டாள்.

''நீ எங்கேயும் தேட வேணாம். அந்த சாமுத்ரிகா லட்சணம் கொண்ட கன்னிப் பொண்ணு நீதான்... அந்த ஹோமம் பூர்த்தி அடைஞ்சு எனக்கு நூறு மடங்கு சக்தி கிடைக்கிறதும் கிடைக்காததும்... உன் கையில தான் இருக்கு செவ்வந்தி... அந்த சக்தியாலே நிறைய பேரு பலனடைவாங்க'' - அழுத்தம் திருத்தமாகப் பேசினான் தியாகு.

''அ... அதெப்படி? நீங்க சாமி... எ... என்னைப் போய்... ஐயோ... இது சரிப்பட்டு வராதே?'' - திக்கித் திணறிய செவ்வந்திக்கு தலை 'கிர்'ரென்று சுற்றியது.

''நீ எனக்கு சத்தியம் பண்ணிக் குடுத்திருக்கே செவ்வந்தி! எல்லாரும் எந்தக் குறையுமில்லாம நல்லாயிருக்கணும்னு நெனைக்கிற விசாலமான குணம் கொண்டவ நீ...

நான் இல்லற சுகத்தை வெறுத்தவன். லௌகீக வாழ்க்கையில நாட்டமில்லாமல் தான் துறவறம் பூண்டிருக்கேன். எனக்கு கோடிக் கணக்குல சொத்து இருக்கு... நான் நெனச்சிருந்தா பெரிய இடத்துப் பெண்ணைக் கட்டிக்கிட்டு சொத்து சுகத்தை ஆண்டு அனுபவிச்சுக்கிட்டு இருந்திருக்கலாமே?

லோக நன்மையைக் கருதி என்னோட சுகத்தைத் தூக்கியெறிஞ்சுட்டு துறவியாயிட்டேன். அதை முதல்லே நீ புரிஞ்சுக்கணும்.

இந்த ஹோமத்தால அநேக பக்த கோடிகள் பயனடைவாங்க... அதைத் தவிர எனக்கு வேற எந்த உள் நோக்கமும் இல்ல... பொது நன்மையைக் கருதி நீ இதுக்கு உடன்பட்டா... தெய்வத்தோட அருளுக்குப் பாத்திரமாகலாம்.

நாளைக்கு வந்து நல்ல பதிலை சொல்றியா, செவ்வந்தி? நாளன்னிக்கு பௌர்ணமி. நாளைக்குப் பூஜைக்கு பூ கொண்டு வர்றப்போ... உன் சம்மதத்தையும் தெரிவிப்பியா? என் கண்ணை நல்லாப் பாரேன்!''

அவளது மான் போன்று மருண்ட விழிகளை... செவ்வரி ஓடிய விழிகளால் ஊடுருவினான். சில விநாடிகள் கரைந்தன. மந்திரத்திற்கு கட்டுண்டவளைப் போன்று ''சரிங்க சாமி'' என்று வார்த்தைகளை உதிர்த்தாள் செவ்வந்தி.

'எனக்கு அவ்வளவு கொடுப்பினையா? இந்த ஆசிரமத்தை நாடி எத்தனை பக்தர்கள் வருகின்றார்கள்? படை படையாகத் திரண்டு வரும் ஜனங்கள் தெய்வமாகப் போற்றிக் கொண்டாடும் ராஜன் சாமிக்கு நான் மாலையிடப் போகின்றேனா?

அவரது கையால் தாலி வாங்கிக் கொள்ளப் போகிறேனா? யாருக்கு கிடைக்கும் இந்த பாக்கியம்? என் மூலமாக அவரது ஹோமம் பூர்த்தியாகி... நூறு மடங்கு சக்தி கிட்டப் போகின்றதா? அதன் மூலம் எண்ணற்ற பக்தர்கள் பயனடையப் போகின்றார்களா?

எப்போதும் நல்லதையே நினைக்க வேண்டும். நல்லதையே செய்ய வேண்டும் என்று தாத்தா அடிக்கடி கூறுவாரே?

ஹோமம் பூர்த்தியான பின்பு ராஜன் சார் கட்டிய தாலியுடன் வீட்டிற்குச் செல்ல வேண்டுமே? தாத்தாவின் கண்களில் தாலி பட்டு விட்டால் என்ன பதில் சொல்வது?

தாத்தா கொதித்து கொந்தளிப்பாரே? எப்படி சமாளிப்பேன்? ராஜன் சாரின் கையால் தாலி வாங்கி அவரது மனைவியாகி விட்டால்... என் எதிர் காலம் என்னவாகும்?

என்னை ஒரு நல்ல இளைஞனுக்கு கட்டிக் கொடுத்து விட்டு... நிம்மதியாக கண்ணை மூட வேண்டும் என்று ஏங்கிக் கொண்டிருக்கும் தாத்தா... இதைத் தாங்குவாரா?

'ஒரு நாள் கூத்துக்கு ஒரு துறவிக்கு மாலை போட்டு தாலி வாங்கி காலமெல்லாம் பட்ட மரமாநிக்கிறியே?' என்று கேட்டு விட்டு... அதிர்ச்சியில் உயிர் துறந்து விட்டால் என்ன செய்வது?'

கேள்விகளைச் சுமந்த வண்ணம் எண்ண அலைகள் எழும்பி அவளது இதயத்தை மோதின.

'ஊகூம்! நான் வாக்கு கொடுத்து விட்டேன். அதை நான் மீற முடியாது.

அடுத்தவர்களின் நன்மையை உத்தேசித்து சொத்து சுகத்தைத் துறந்து துறவியாகி இருக்கிறார் ராஜன் சாமி. எப்பேர்ப்பட்ட உத்தமர் அவர்?

அவரைப் போல் நானும் என் எதிர்கால வாழ்க்கையைத் தியாகம் செய்யப் போகிறேன். என் மூலமாக அவருக்கு அரிய சக்தி கிட்டும். அதன் மூலமாக அவர் நிறைய சேவை செய்வார். எனக்கும் அதில் பாதி புண்ணியம் கிட்டுமே? தாத்தாவிடம் ஆற அமர இந்த விஷயத்தை எடுத்துச் சொன்னால் நிச்சயம் புரிந்து கொள்வார்.

மெழுகுவர்த்தி தன்னை உருக்கிக் கொண்டு தான் வெளிச்சம் தருகின்றது. நானும் அப்படித்தான்'

செல்வந்தி முடிவெடுத்து விட்டாள். செண்பகமாலையிடுவதற்கு தயாராகி விட்டாள்.

பௌர்ணமியன்று நடுநிசியில்... அந்த அழகிய பொன்மானை வேட்டையாட வேட்கையுடன் காத்திருந்தது... அந்த பசுத்தோல் போர்த்திய புலி.

கண்மூடித்தனமான மூட நம்பிக்கையில் மூழ்கிக் கிடக்கும் செல்வந்தியைப் போன்ற பெண்கள் இருக்கும் வரை... தியாகுவைப் போன்ற போலிச் சாமியார்களின் அராஜகம் தொடர்ந்து கொண்டு தானிருக்கும்.

## 9

மலைக்காட்டில் உள்ள அடர்ந்த மரங்கள் பௌர்ணமி நிலவின் வெளிச்ச மழையில் நனைந்து திளைத்துக் கொண்டிருந்தன.

வட்ட நிலா மோகனமாய் சிரித்துக் கொண்டிருந்தது.

ராத்திரி சில்வண்டின் 'டுர் டுர்'... 'டுர் டுர்' சப்தம் காதைப் பிளப்பதாக இருந்தது.

தாத்தா முனியன் கம்பளிப் போர்வையைப் போர்த்திக் கொண்டு திண்ணையில் குறட்டை விட்டு தூங்கிப் போனதும்... செல்வந்தி தனது கால் கொலுசுகள் சப்தம் எழுப்பாத வண்ணம் பூனைப்பாதம் வைத்து நடந்து துணிவுடன் இங்கு வந்து விட்டாள்.

திறந்த வெளியில் இருந்த அந்த காளியம்மன் சிலையை நடுநிசியில் பார்ப்பதற்கே பயமாக இருந்தது.

சிலையின் பாதத்தில் வைத்த தாலியை எடுத்து அவளது கழுத்தில் கட்டினான் தியாகு. குளிரினாலோ, பயத்தினாலோ செல்வந்தியின் மேனி புல்லரித்து சிலிர்த்தது.

அவளது கைவிரல்கள் பனிக்கட்டியாய் சில்லிட்டுப் போய் இருந்தன.

தளிர்க்கரங்கள் இலேசாய் நடுங்க... செண்பக மாலையை அவனது கழுத்தில் சூட்டினாள்.



காளி அம்மனின் பாதத்தின் அருகே இருந்த குங்குமத்தை எடுத்து தனது நெற்றியில் இட்டுக் கொண்டான். செல்வந்தியின் அழகிய நெற்றியில் குங்குமத்தை திலகமாக இட்டான்.

அங்கு இருந்த மண் குடுவையைப் போன்ற பாத்திரத்தை எடுத்து அதிலிருந்த பானத்தைப் பருகினான்.

''இந்தா... நீயும் குடி.'' - நீட்டினான்.

''வேணாம் சாமி!''

''வேணாம்னு சொல்லக் கூடாது. இது மூலிகை தீர்த்தம். பானகம் மாதிரி இருக்கும். அம்மனுக்கு நிவேதனமா படைச்சதை மறுக்கக் கூடாது.'' - உரிமையுடன் அதட்டினான்.

அதற்கு மேல் அவளுக்கு மறுக்க மனம் வரவில்லை. குடுவையில் இருந்த பானத்தை கடகடவென்று பருகி விட்டாள்.

அந்த நிலா வெளிச்சத்தில் அவனது விழிகள் கூர்மையுடன் பளபளத்தன.

இதழ்களில் வெற்றிப் புன்னகை தவழ... செண்பக மாலையுடன் புலித்தோலில் அமர்ந்து ஹோமத்தைத் தொடங்கினான்.

பத்தடி தூரத்திலிருந்த பருத்த ஆலமரத்தின் அடிவேரில் அமர்ந்த செல்வந்தி, விழிகள் தெறிக்காத குறையாக ஆர்வத்துடன் வேடிக்கை பார்க்கத் தொடங்கினாள்.

'என்னது இது? இன்னிக்குப் பார்த்து இப்படி தூக்கம் அசத்துதே?' தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

அதற்கு மேல் அவளுக்கு சிந்திக்கத் திராணி இருக்கவில்லை. தூக்கம் அவளை ஆரத் தழுவியது.

அப்படியே சரிந்து சாய்ந்து உறங்கத் தொடங்கினாள்.

மீண்டும் அவள் கண் விழித்த போது தலை பாரமாக கனத்தது. இமைகள் பாறாங்கல்லாய் கனத்தன.

'எங்கிருக்கிறேன் நான்? ராஜன் சாமியின் ஹோமம் பூர்த்தியாகி விட்டதா என்னது? மலைக் காட்டு காளி அம்மன் சிலையின் முன்பு அல்லவா இருந்தேன்? இது எந்த இடம்? இது... இது ஆசிரமத்தைப் போல் இருக்கிறதே? இங்கு எப்படி வந்தேன் நான்?'

உள்ளுக்குள் கேள்விகள் அரும்பு விட்டன.

ஆசிரமத்தின் உள்ளறையிலிருந்த செல்வந்தி வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். அவளது தலையிலிருந்த பூச்சரம் உதிர்ந்து சிதறியிருந்ததைப் பார்த்ததும்... அவளுக்குள் திகில் பரவியது.

கலைந்த கூந்தலும் ஆடையும்... இழக்கக் கூடாததை அவள் இழந்து விட்டாள் என்று சொல்லாமல் சொல்லின.

அருவருப்பில் உடம்பே கூசிப் போனது.

'யார் இந்தக் கொடுமையைச் செய்தது? ராஜன் சாமியா?' - இன்னமும் நம்ப

ஆனால் இன்று...?

"தாத்தா... ஆ..."

இறந்தாள் செல்வந்தி.

10

இன்னொவாட்டமா இருக்கு... கண்ணெல்லாம் கலங்கியிருக்கு?"

தங்கம் அவளது முகத்தை ஊன்றி கவனித்தார்.

விஷயத்தைக் கூறிவிடத் துடித்த நாவைக் கடித்து அடக்கியபடி பெரியம்மாவை ஏறிட்டாள்.

"ஒ... ஒன்னுமில்ல பெரியம்மா... உங்களை எல்லாம் விட்டுப் பிரிஞ்சு போகப் போறோமேன்னு கவலையா இருக்கு... நாள் நெருங்கிட்டே வருதேன்னு சங்கடமா இருக்கு பெரியம்மா"

சமயோசிதமாக பதிலைச் சொல்லி சமாளித்தாள் சம்யுக்தா.

"பொண்ணா பொறந்துட்டா பிரிஞ்சு போயித்தானே ஆகணும்? இதுக்குப் போயி கவலைப்படுவாங்களா? மாப்பிள்ளை வீட்டுக்காரங்க நல்ல மாதிரியா இருக்காங்க... ரகு தங்கமானவரு... உன்னை ரொம்பவும் விரும்புறாரு... உன்னை உள்ளங்கையில வச்சுத் தாங்கப் போறாரு... அவரோட அன்புல திக்குமுக்காடிப் போயி... எங்களை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமா மறந்துடுவே பாரேன்" - சிரித்தபடியே அவளது கன்னங்களை வருடி விரல்களால் தனது நெற்றியில் நெட்டி முறித்து திருஷ்டி கழித்தார் தங்கம்.

"என்ன பெரியம்மா இப்படி சொல்லிட்டீங்க?" - குப்பென்று முகம் சிவந்து போனாள் சம்யுக்தா.

"போம்மா... முகத்தை அலம்பிட்டு வா... உனக்குத் தலை பின்னி பூ வச்சு விடறேன்."

ரகு பெண் பார்த்து விட்டுப் போனதும்... நாளாக ஆக அவன் மீதிருந்த காதலும் ஏகத்திற்கு பெருக்கெடுத்திருந்தது.

'இந்தக் கடிதத்தில் எழுதப்பட்ட விஷயம் பொய்யாக இருக்கக் கூடாதா?' பாத்ரூமுக்குச் சென்று கதவை சாத்திக் கொண்டவளின் விழிகள் பொங்கிப் பொங்கி [illegible].

## 11

இயற்கை எழில் கொஞ்சும் சுருளி மலையில்... எளிய முறையில் ரகு - சம்யுக்தாவின் திருமணம் கோவிலில் நடந்தேறியது.

ஓரக்கண்ணால் அடிக்கடி கணவனை நோட்டமிட்டாள். சிவந்த நிறமும், நல்ல உயரமுமாய் கம்பீரமாய் இருந்தான்.

திரண்ட தோள்களும் புஜங்களையும் அவனை 'பேரழகன்' என்று அடித்துச் சொல்லின.

சமுத்திரம் போல் திரண்ட சொத்து வேறு இருக்கிறது.

'அபரிமிதமான அழகு, அளவற்ற செல்வம் இரண்டும் சேர்ந்து அவனைத் தடம் புரள வைத்து விட்டதோ?'

சதா அவளது மனம் குறுக்குக் கேள்விகளைக் கேட்டுக் குடைந்து கொண்டே இருந்தது.

வீணா தனது கணவனுடன் இரு தினங்களுக்கு முன்பே வந்து விட்டிருந்தாள். தோழி வான்மதியும் அவளது கணவன் கார்த்திக்கும் வந்து சேர... கும்மாளமும் கேலியுமாக எந்த நேரமும் சிரிப்பலை எழுந்து எழுந்து அடங்கியது.

சம்யுக்தாவை சந்தேகம் ஆட்டிப் படைத்தது. கண்ணில் விழுந்த மணலாய் உறுத்திக் கொண்டே இருந்ததால்... முகத்தில் செயற்கையாய் புன்னகையை ஒட்ட வைத்துக் கொண்டிருந்தாள்.

மாலையும் கழுத்துமாக கோவிலைச் சுற்றி வந்து வணங்கி பெரியவர்களிடம் ஆசிர்வாதம் வாங்கி முடித்த தருணத்தில்... 'சரக்' என்று அந்த டாக்ஸி கோவில் வாசலில் வந்து நின்றது.

ஐந்தாறு இளம் பெண்கள் கலகலவென்று நகைத்தபடி காரிலிருந்து உதிர்ந்தார்கள்.

"ஹாய் ராஜன்! சாரிப்பா... லேட்டாயிடுச்சு"

"விஷ் யூ ஆல் தி பெஸ்ட் ராஜன்"

"சூப்பர் செலக்ஷன் ராஜன்"

"விஷ் யூ ஹேப்பி மேரீட் லைஃப் ராஜன்"

ஆளாளுக்குப் பேசியபடி அவனது கைகளைப் பற்றிக் குலுக்கி, பெரிய கிஃப்ட் பார்சலை சேர்ந்தாற் போல் கொடுத்தார்கள். அவர்களைப் பார்த்ததுமே ரகுவுக்கு குஷி பிடித்துக் கொண்டது.

"நீரஜா! நீ ரொம்ப மோசம் போ... தாலி கட்டி முடிச்சப்புறம் வந்து இறங்கறே? கவி! இது உனக்கே நல்லாயிருக்கா?

மேரி! என்ன எல்லாரும் சொல்லி வச்ச மாதிரி இப்படி லேட்டா வந்து இறங்கறீங்களே? பேசிக்கொண்டு நான் உன்கிட்ட பேசவே போறதில்லை... போ!

டேய் கார்த்தி! பார்த்தியா? இவங்களை நீயே கேளேன்டா"

"ஸாரி ஸாரி ராஜன்... நீரஜா தான் 'எல்லாரும் சேர்ந்தே போகலாம்'னு சொன்னா... எல்லாரும் தேனிக்கு வந்து சேர... முன்னே பின்னே ஆயிடுச்சு. அதான்... கோவிச்சுக்காதே" என்றபடி பந்தயக்குதிரை போன்று மதர்த்த உடம்புடன் இருந்தவள் உரிமையாய் அவனது தோளில் தட்டினாள்.

"என்ன நீரஜா? எல்லாம் உன் வேலைதானா?" என்றபடி அவளது தலையில் செல்லமாய் ஒரு குட்டு வைத்தான்.

"அவளை குத்தம் சொல்லாதே ராஜன்... நாங்கதான் லேட் பண்ணிட்டோம்பா... ஸாரி! கடைசில எங்களை எல்லாம் விட்டுட்டு இவங்களுக்குத் தாலி கட்டிட்டே இல்ல? ஆனாலும் நீ கில்லாடிப்பா! வலை வீசித் தேடி ஒரு தேவதையைப் புடிச்சிட்டே! [illegible]

ரியலி ஷி இஸ் வெரி ப்யூட்டி ஃபுல்''

''உம்! பேச்சை மாத்தாதே மேரி.. நைஸா அப்படியே கூல் பண்ணிடுவியே?... மதுரைக்கு வர்றப்போ உன்னை நான் கவனிச்சுக்கிறேன்.''

அவன் கூறியது தான் தாமதம்... ஒல்லியும் வெளுப்புமான அந்த அழகி மேரி 'க்ளுக்' என்று சிரித்தாள்.

வெகுஜாலியாய் - உரிமையாய் ரகு அவர்களிடம் பேசிப் பழகிய விதத்தைப் பார்த்துமே... சம்யுக்தா அரண்டுதான் போய் விட்டாள்.

'இவர் லேடீஸ் விஷயத்தில் வீக்காக இருப்பார் போலிருக்கிறதே? அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது உண்மையாக இருக்குமோ?' - உள்ளூர பயம் நம நம வென்று பூரான் போல் ஊர்ந்தது.

''சம்யுக்தா! இவங்க எல்லாரும் என்னோட காலேஜ் மேட்ஸ். திருவனந்தபுரத்துல லாஸ்ட் இயர் 'ராஜன் சாஃப்ட் வேர் கம்பெனி' ஒண்ணு ஆரம்பிச்சோம்.

அமோகமான லாபத்தோட நல்லா போயிட்டிருக்கு! ஃபுல் அண்ட் ஃபுல்லா அங்க லேடீஸ்தான் வேலை பார்க்கிறாங்க... கம்பெனியோட முழு பொறுப்பையும் இந்த நீரஜாவும் சுமிதாவும் தான் பார்த்துக்கிறாங்க...

இவ மேரி! மதுரையில இருக்கா... இவ சகிலா! கோயம்புத்தூர்லே இருக்கா... சுப்ரியாவும், ரேவதியும் திண்டுக்கல்லே இருக்காங்க. எல்லாருமே சூரப்புலிங்க தான்... நல்ல போஸ்ட்லே இருக்காங்க'' - பெருமிதமாய் அறிமுகப்படுத்தி வைத்தான் ரகு.

''க்ளாட் டூ மீட் யூ'' - சிரித்தபடி கைகளைக் குவித்தாள் சம்யுக்தா.

''இனிமே நீங்களும் எங்களுக்கு ஃபிரண்ட் தான்'' - சிரித்தாள் சுப்ரியா.

''ரெண்டு மூணு நாளாவது இருப்பீங்கல்ல? பேசிப் பழகி குளோஸ் ஆயிடுங்க''

''இல்ல ராஜன்! நாங்க எல்லாரும் இன்னிக்கு சாயந்தரமே போக வேண்டியிருக்கு''

''என்னது இது? சகி! கோயம்புத்தூர்லே இருந்து வந்திருக்கே! கால்லே வெந்நீரை ஊத்திக்காத குறையா நீயும் ஓடறியா?''

''சாரிப்பா... அப்பாவுக்கு உடம்பு சரியில்லை... அம்மாவுக்கும் வயசாகுது... தலையைக் காட்டிட்டு சீக்கிரமா வந்துடுன்னு சொல்லி அனுப்பிச்சாங்க''

''ராஜன்! கோவிச்சுக்காதேப்பா! நாங்க எல்லாரும் ரெண்டு மூணு மாசம் கழிச்சு மறுபடியும் வரோம். போன வாட்டி பண்ணை வீட்டுலே ஜாலியா கொட்டமடிச்சோமே? அந்த ஜாலியை அனுபவிக்கவாவது நாங்க கிளம்பி வரோம்.

சம்யுக்தா! ராஜனுக்கு சொந்தமான பண்ணை வீடு ஒண்ணு இருக்கு...



திராட்சைதோட்டத்துக்குப் பக்கத்துல ஏகாந்தமா இருக்கும். ராஜனோட ஆபீஸ்
ரும் அங்க தானிருக்கு... ரொம்ப ஸ்டைலா கட்டி வச்சிருக்கான்.
வீடு கலையம்சமா பார்க்கவே ரம்யமா இருக்கும். பெரிய ஓடை ஒண்ணு
பக்கத்துல போகுது. அதைத் தாண்டி தோட்டத்துக்குப் போக கயித்துப் பாலம்
கட்டி வச்சிருக்கான் பாருங்க... ரியலி சூப்பர்ப்!''

அந்த மேரி சிரித்தபடி இவளது கரத்தைப் பற்றிக் கொண்டாள்.
மேற்கொண்டு அவள் பேசியது எதுவும் இவளது காதுகளில் விழவே இல்லை.

'திருவனந்தபுரத்து ஆபீஸில் முழுக்க முழுக்கப் பெண்கள் வேலை பார்க்கிறார்களா? அவர்கள் கண்ணுக்கு லட்சணமாக இருப்பார்களோ?

பண்ணை வீட்டில் ஜாலியாக கொட்டமடித்தார்களாமே? இவரது ஆபீஸ்
ரும் பண்ணை வீட்டில் இருக்கிறதாமே? எஸ்டேட் பங்களாவை விட்டு விட்டு பண்ணை வீட்டிற்குப் போய் உட்கார்ந்து தான் இவர் ஃபைல்களை சரி பார்க்க வேண்டுமா? ஏன்?

இவரது ராஜலீலைகளுக்கு அந்தப் பண்ணை வீடு தோதாக ஏகாந்தமாக இருக்கிறது போலும். அப்படித்தானிருக்கும்.'

சந்தேகம் புகுந்து விட்டதால்... எதைப் பார்த்தாலும் குதர்க்கமாகவே மனம் யோசித்தது.

## 12

**கூ**ட்டத்தைப் பிளந்து கொண்டு பரபரப்பாய் அந்த வேலைக்காரன் ஓடி வந்தான்.

''ராஜன் சாரு வர்றாரு'' என்று அவன் கூறியதும் ரகுவின் முகம் சிறுத்து கறுத்தது.

''வா சம்யுக்தா!'' என்றபடி நடந்தவனைப் பின் தொடர்ந்தாள். தனம்மாள், லோகநாதராஜன், கற்பகம் ஆகியோர் இருந்த இடத்தை அடைந்தான்.

அர்த்த புஷ்டியுடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டதைக் கண்ட சம்யுக்தா சற்றே திகைத்தாள்.

அவர்களது பார்வை சென்ற திக்கிலேயே பயணித்தவளுக்கு ஆச்சரியம் காத்திருந்தது.

''சம்யு! இதோ வர்றாரே... இவர் தான் தியாகராஜன். எம்.பி.ஏ. படிக்க யு.எஸ்ஸுக்கு போனவரு வர்றப்போ... சுவாமிஜியா இறங்கினாராம். ஜீவானந்தா சுவாமிஜியோட ஸ்பீச்சை கேட்டுட்டு ஆன்மீகத்துல நாட்டம் ஏற்பட்டுச்சாம்.

அவர் கிட்டேயே சிஷ்யரா சேர்ந்து நிறைய விஷயங்கள் கத்துக்கிட்டு... அவரோட கட்டளைப்படி தாயகத்துக்கு திரும்பி இருக்காராம். இவரோட

தரிசனத்துக்காக ஏகப்பட்ட ஜனங்கள் தூர தூர தேசத்துல இருந்தெல்லாம் வர ஆரம்பிச்சுட்டாங்களாம்...

இவரைப் பார்த்தாலே கஷ்டங்களும் வியாதிகளும் பறந்துடுதாம்.

ஜனங்க இவரை தெய்வமாகவே போற்றித் தலையில தூக்கி வச்சுக் கொண்டாடுறாங்களாம்... என் ஹஸ்பெண்ட் தான் இதை எனக்கு சொன்னாரு. இவரோட தம்பிக்கு நீ மனைவியாயிட்டே! ரியலி யூ ஆர் வெரி லக்கி''

தோழி வான்மதி அவளது காதருகே வந்து நின்று கிசுகிசுத்தாள்.

விஷயத்தைக் கேள்விப்பட்டதும் ஆச்சரியத்தில் மூழ்கிப் போனாள் சம்யுக்தா.

ஆறடி உயரம், அதற்கேற்ற பருமன், சிவந்த நிறம், களையான தோற்றம்... தம்பி ரகுவின் ஜாடை அவனது முகத்தில் கொஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்தது.

ரகுவைப் போன்று இவனது முகத்தில் குதூகலமும் கலகலப்பும் தென்படவில்லை.

அதற்கு நேர் மாறாக அமைதியும், சாந்தமும் தாண்டவமாடிக் கொண்டிருந்தன.

'திரண்ட சொத்துக்கு முதல் வாரிசாகப் பிறந்து விட்டு... அனைத்தையும் ஆண்டு அனுபவிக்காமல் உதறித் தள்ளிவிட்டு துறவறத்தை மேற்கொண்டு விட்டாரா?

இவ்வளவு இளம் வயதில் ஆன்மீகத்தில் நாட்டம் ஏற்பட்டு 'சுவாமிஜி'யாக ஆகிவிட்டாரா?'

நம்ப மாட்டாமல் விழிகள் விரிய காவி உடையில் வந்து நின்ற தியாகுவையே பார்த்தாள் சம்யுக்தா.

பார்த்த மாத்திரத்திலேயே அவன் மீது மதிப்பும் மரியாதையும் பிரமிப்பும் ஏற்பட்டு விட்டன.

'அண்ணனைப் பார்த்தவுடனே இவரது முகம் ஏன் இப்படி சிறுத்துப் போக வேண்டும்?

வாழ்த்த வந்திருக்கிறார் சுவாமிஜி. முகத்தில் எந்த சலனமும் இல்லாமல் தாடை இறுக மௌனமாக நிற்கிறாரே இவர்?'

கணவனையும், தியாகுவையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''ரகு! நீயும் சம்யுக்தாவும் அண்ணன் கால்லே விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக்கோங்க'' - உத்தரவிட்ட தனம்மாளை ஒருகணம் விழித்துப் பார்த்தான் ரகு.

சிரமப்பட்டு முகத்தை சகஜ நிலைக்குக் கொண்டு வந்த ரகு, ''சம்யுக்தா! இ... இவர் என்னோட அண்ணா... தியாகராஜன்! வா... சேர்ந்து நமஸ்காரம் பண்ணிக்கலாம்'' - பேசிக் கொண்டே அவளது கரத்தை இறுகப் பற்றிக் கொண்டான்.



நமஸ்கரித்து எழுந்த போது... அட்சதையைத் தூவி இரு கரங்களையும் உயர்த்தி ''அமோகமா இருக்கணும்'' என்று ஆசீர்வதித்தான் தியாகு.

அவனது பார்வை முழுவதும் சம்யுக்தாவின் மீதே படிந்திருந்ததைப் புரிந்து கொண்டதாலோ என்னவோ... ரகு அவளது கரத்தை விடாமல் இறுகப் பற்றி இருந்தான்.

''தியானம் பண்ணுவியாமா?'' - அவளது விழிகளை ஊடுருவியபடி கேட்டான்.

''ஓ... தினமும் காலையில...'' - பவ்யமாக பதிலளித்தாள்.

''அதான் முகத்துல தனி தேஜஸ் தெரியுது. குட்! கீப் இட் அப்'' - தியாகு பாராட்டியதும்... சம்யுக்தாவிற்கு பெருமை பொங்கி வழிந்தது.

''நன்றி சுவாமிஜி'' - மீண்டும் கை கூப்பினாள்.

''சௌபாக்கியவதியா இருக்கணும்'' அவளது உச்சந்தலையில் கை வைத்து ஆசிர்வதித்தான். அரை மனதுடன் சிஷ்யர்கள் புடை சூழ சென்று விட்டான்.

''சம்யு! நீ ரொம்பக் குடுத்து வச்சவடி... இவரோட தரிசனத்துக்கு ஜனங்க மணிக்கணக்கா கால் கடுக்க நின்னு காத்திருப்பாங்களாம். இவரோட முகத்தை ஒரு நிமிஷம் பார்க்க முண்டியடிப் பாங்களாம்...

அப்பேர்ப்பட்டவரு நேர்ல வந்தோட உன்னை ஸ்பெஷலா ஆசிர்வாதம் பண்ணியிருக்காரே...? உன் கல்யாணத்துக்கு வந்ததால எங்களுக்கும் அவரோட தரிசனம் கிடைச்சுதே! இது பெரிய விஷயம்டி''

ஆர்வம் தாளாமல் வான்மதி மீண்டும் அவளது காதுகளில் முணுமுணுத்தாள்.

சந்தோஷத்தில் சம்யுக்தாவின் விழிகள் பளபளத்தன. ஆனால் ரகுவின் முகத்திலோ எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தன.

'திடு திப்பென்று இவரது முகம் ஏன் இப்படி கடுமையாக இருக்கிறது? திருமணத்திற்கு வந்திருந்த உறவினர்களும், எஸ்டேட்டில் வேலை செய்யும் தொழிலாளர்களும்... தியாகு நடந்து சென்றபோது வழி நெடுக கால்களைத் தொட்டுப் பணிவதை... இவர் ஏன் இப்படி வெறுப்புடன் பார்க்கின்றார்?

இவரது கோபத்திற்கும் வெறுப்புக்கும் என்ன காரணமாக இருக்கும்?

அண்ணன் உத்தமர், நல்லவர், இளம் துறவி... ஜனங்கள் போற்றும் சுவாமிஜி!

ஆனால் தம்பியான இவருக்கோ பல பெண்களுடன் தொடர்பு இருக்கிறது. பணமும் செல்வாக்கும் இருப்பதால் ஆட்டம் போடுகிறார்.

அண்ணனுக்கு இருக்கும் மதிப்பும் மரியாதையும் புகழும் தனக்கில்லையே என்று உள்ளூர புழுங்குகின்றாரோ?

அப்படித்தான் இருக்க வேண்டும். பொறாமையில் மனம் பொசுங்குகிறது போலும்.

அண்ணன் ஆன்மீகத்தில் நாட்டம் ஏற்பட்டு... இல்லற வாழ்க்கையைத்

துச்சமாகக் கருதி உதறிவிட்டு துறவியாகவே ஆகி விட்டார்.

ஆனால்... இப்பேர்ப்பட்டவருக்கு தம்பியாகப் பிறந்து விட்டு இவர் இப்படி மனசாட்சி இல்லாமல்... மலருக்கு மலர்தாவிக் கொண்டிருக்கிறாரே?'

நினைக்க நினைக்க... சுறுசுறுவென்று கோபம் தலைக்கேறியது சம்யுக்தாவிற்கு.

வெறுப்பும் ஆத்திரமும் போட்டா போட்டி போட்டுக் கொண்டு அவளை ஆட்டிப்படைத்தன.

தொண்டைக் குழிக்குள் கசப்பாய் ஏதோ ஊர்வதைப் போன்றிருந்தது.

## 13

கற்பகத்தின் மனம் வேதனையில் வெந்து கொண்டிருந்தது. மனசாட்சி ரம்பமாய் இதயத்தை அறுத்துக் கொண்டிருந்தது. லோகநாதராஜனையும், தனம்மாளையும், ரகுவையும் ஏறிட்டுப் பார்க்கவே சங்கடமாக இருந்தது.

எஸ்டேட் பங்களாவில்... புது மாப்பிள்ளைக்கும், பெண்ணிற்கும் உறவினர்கள் பாலும் பழமும் கொடுத்துவிட்டு விருந்துண்ணச் சென்று விட்டிருந்தனர்.

மாலையும் கழுத்துமாக மணமக்கள் இவரது கால்களில் பணிந்த போது... வேதனையை மென்று விழுங்கி விட்டு மனதார ஆசீர்வதித்தார்.

''தீர்க்காயுசா இருப்பா ரகு! தீர்க்க சுமங்கலியா சௌபாக்கியவதியா இரும்மா...! ர... ரகு! சொந்தக்காரங்க கிட்டே எல்லாம் ஆசீர்வாதம் வாங்கிட்டு... அப்புறமா என்னோட ரூமுக்கு... நீ தனியா வாப்பா... நான்... நான் உன்கிட்டே கொஞ்சம் பேச வேண்டியிருக்கு. வர்றியாப்பா?''

தயங்கியபடி கேட்டார் கற்பகம்.

''ஏன் சித்தி இப்படி தயங்கறீங்க? நான் என்னிக்கும் உங்க பிள்ளைதானே? வாடான்னா ஓடி வந்துட்டுப் போறேன். வர்றேன் சித்தி''

உரிமையுடன் பாசமாய் பேசிய பிள்ளையின் தலையை வருடி விட்டு மௌனமாகச் சென்று விட்டார்.

அன்று அந்த சம்பவம் நடந்ததிலிருந்து... கற்பகம் தனம்மாளிடமும் ரகுவிடமும் கணவரிடமும் பேசுவதையே நிறுத்தி விட்டிருந்தார்.

கீழே உறவினர்களின் பேச்சு சப்தத்தாலும், சிரிப்பு சப்தத்தாலும் வீடே ரெண்டு பட்டுக் கொண்டிருந்தது.

மனம் இரும்பு குண்டாய் கனத்துக் கொண்டிருந்ததால்... கற்பகத்தால் எதிலும் ஒட்ட முடியவில்லை. மாடியில் தனது அறைக்குள் புகுந்து கட்டிலில் சுருண்டு படுத்து விட்டார்.



ஆனால் அவரது மனமோ அன்று நடந்த சம்பவத்தை அசை போட ஆரம்பித்தது.

அன்று... பௌர்ணமிக்கு மறுநாள்...

தோட்டத்திலிருந்த அலங்கார ஊஞ்சலில் லோகநாதராஜன் அமர்ந்து இருந்தார்.

''கற்பகம்! இன்னிக்குத் தானே பௌர்ணமி?''

''இல்லைங்க... நேத்துதான் பௌர்ணமி... எதுக்கு கேட்கறீங்க?''

''சும்மா கேட்டேன். எல்லாப் பொறுப்பையும் ரகுவே தோள்ல சுமக்க ஆரம்பிச்சுட்டான். நான் சும்மா வீட்டை சுத்தி சுத்தி வர்றேன். நாள் எது கிழமை எதுன்னு கூட... சமயத்துல மறந்துடுது... தியாகு மட்டும் இந்தக் கோலத்துல வராம இருந்திருந்தா... பொறுப்பை சமமா பங்கிட்டு அவனுக்கு குடுத்திருக்கலாம்.

நமக்கும் எவ்வளவு நிம்மதியா இருந்திருக்கும்?'' என்று அவர் கேட்டதும் கற்பகத்தால் வாயைத் திறக்க முடியவில்லை.

சுண்டக் காய்ச்சிய பாதாம் பாலை வெள்ளித் தம்ளரில் நிறைத்துக் கொண்டு வந்த தனம்மாளுக்கு துக்கம் தொண்டையை அடைத்தது.

''என்னங்க நீங்க? சதா அதைப்பத்தி புலம்பிட்டே இருந்தா உடம்பு என்னத்துக்கு ஆகும்? இந்தாங்க பி.பி. மாத்திரை. போட்டுக்கிட்டு நிம்மதியா படுங்க'' - உரிமையுடன் அதட்டினார்.

''உத்தரவு போட்டுட்டே... சரி! போறேன்'' என்று பாலை அருந்தி விட்டு அவர் உள்ளே செல்வதற்கும்... பண்ணை வீட்டில் ஃபைல்களை சரி பார்த்து விட்டு ரகு காரில் வந்து இறங்குவதற்கும் சரியாக இருந்தது.

''இரண்டு அம்மாக்களும் நிலா வெளிச்சத்துல உட்கார்ந்திருக்கீங்களா?'' - சிரித்தபடி கேட்டுக் கொண்டே வந்து ரகு ஊஞ்சலில் அமர்ந்ததுதான் தாமதம்...

''ராஜன் சாரு... ராஜன் சாரு... இந்த அநியாயத்தைக் கேட்டீங்களா?'' என்று தேயிலை தோட்டத்துத் தொழிலாளி காசி கேட்டருகே வந்து நின்று அலறினான்.

''ஏய்! இங்க வந்து கலாட்டாவா பண்றே?... ஓடு!'' - வாட்ச்மேன் அவனைப் பிடித்துத் தள்ளி அதட்டினான்.

''வாட்ச்மேன்! காசியை உள்ளே அனுப்பு... ஏன் பிடிச்சு தள்ளறே? காசி உள்ளே வாங்க... இங்க வந்து பதறாம பேசுங்க''

''எம் மவ தாமரை, காட்டுக்குள்ள சுள்ளி பொறுக்கப் போவும் சாரு... நேத்தைக்கு சுள்ளி பொறுக்கப் போனவ ரொம்ப நேரம் கழிச்சுத்தான் வந்துச்சு... ஆசிரமத்துல யாகம் வளர்க்கத் தேவையான... பதமான

கன்னிக்களை தாமரை அடிக்கடி குடுத்துட்டு வந்தா சாரு...

நேத்து தாமசமா ஓடி வந்த பொண்ணு அரளி விதையை அரைச்சு குடிச்சுப் போட்டா... கொஞ்ச நேரத்துல வாந்தி எடுத்து துடிச்சப்போ... வெவரம் தெரிஞ்ச வைத்தியரைக் கூப்பிட்டு வைத்தியம் பாத்தோம். மாத்து மருந்து குடுத்தும் கண்ணைத் தொறந்து பாக்கலை.

கொஞ்ச நேரத்துக்கு முன்ன கண்ணு முழிச்சவ. ''அப்பாரு... ஆசிரமத்துக்குப் போயி நான் மோசம் போயிட்டேன். ராஜன் சாரு என்னை அழிச்சுப்புட்டாரு' அப்படின்னு கண்ணை மூடிட்டா... பேச்சு மூச்சைக் காணோம்.

வைத்தியர் கையை விரிச்சுட்டார். எங்களுக்குப் படியளக்கிற தெய்வம் நீங்க... எம் பொண்ணு உசுரு ஊசலாடுது சாரு... நான் என்னா செய்வேன்? உங்க அண்ணன் என் குடியைக் கெடுத்துட்டாரே சாரு?''

காசி முகத்தில் அறைந்து கொண்டு கதறினான்.

''எனக்கு இன்னும் ரெண்டு பொண்ணுங்க இருக்கு சாரு... விஷயம் வெளியில கசிஞ்சா... அதுங்க வாழ்க்கையும் பாதிக்குமே சாரு''

''காசி! கொஞ்சம் நிதானமா இருங்க... உங்க கால்லே நாங்க எல்லாரும் விழுந்து கதறினாக் கூட எங்க பாவம் தீராது. அண்ணனால தீராத பழி பாவத்துக்கு ஆளாயிட்டோம். மன்னிச்சுடுங்க...

தாமரையை முதல்லே ஹாஸ்பிடல்ல சேர்த்து ட்ரீட்மெண்ட் குடுக்கலாம் வாங்க...'' - கையெடுத்து கும்பிட்ட ரகு, காசியின் கரத்தை ஆறுதலாகப் பற்றி அப்படியே தோளில் சாய்த்துக் கொண்டான்.

நெகிழ்ந்து போய் விட்டான் காசி. தனம்மாளும் கற்பகமும் கரங்களைக் குவித்து கண்ணீர் உகுத்ததைக் கண்டதும்... மனம் சற்று இளகியது.

''இந்த விஷயம் வெளியில் தெரிஞ்சா... நம்ம ரெண்டு குடும்பத்துக்கும் தான் அசிங்கம்... தியாகுவுக்கு தகுந்த தண்டனை நிச்சயம் கிடைக்கும்... தாமரை குணமான உடனே நல்ல பையனாப் பார்த்து நானே கட்டி வைக்கிறேன்... மத்த ரெண்டு பொண்ணுங்களையும் சீக்கிரமா கரையேத்திடலாம்... எவ்வளவு கொட்டிக் குடுத்தாலும் இந்த இழப்புக்கு ஈடுகட்ட முடியாதுதான்... மன்னிச்சுடுங்க''

''எவ்வோ பெரிய இடத்துப் புள்ளை... பெரிய படிப்பு படிச்சவரு... என்னை அணைச்சு ஆறுதல் சொல்லி கண் கலங்கறீங்களே? உங்க அத்தன பேத்தோட முகதாட்சணியத்துக்கு... அந்தப் பாவியை மன்னிச்சு விடறேன் சாரு... இதுவே வேற யாராச்சும் செஞ்சு இருந்தா... அரிவாளால ரெண்டு துண்டாக்கி இருப்பேன் சாரு''

ரகு தாமரைக்கு நல்ல மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்தான். காசிக்கு பணத்தைக் கொடுத்து விஷயத்தை மூடி மறைத்தான். தாமரைக்கு கூடிய விரைவில் திருமணம் செய்து வைக்கவும் ஆயத்தமாக இருந்தான்.



''சித்தி! சித்தி'' - ரகுவின் குரலைக் கேட்டதும்... பழைய நினைவு கலைந்து, படுக்கையிலிருந்து எழுந்து அமர்ந்தாள் கற்பகம்.

''வரச் சொன்னீங்களே சித்தி?''

''ஆமாப்பா! தியாகு பயல் அந்த காசியோட பொண்ணைக் கெடுத்ததிலிருந்து எனக்கு குற்ற உணர்ச்சி அதிகமாயிடுச்சு... இப்படியொரு பிள்ளையைப் பெத்து வம்சத்தோட பேரைக் கெடுத்துட்டோமேன்னு... மனசாட்சி அறுக்குது. அதான்... அன்னிக்கு இருந்து உங்க முகத்துல முழிக்கவே எனக்கு சங்கோஜமாயிடுச்சு... விலகி விலகிப் போனேன்.

தினமும் காலையில தியாகுவைப் போயி பாத்து 'குடும்ப மானத்தைக் குலைச்சுடாதே... திருந்தி நடந்துக்கோ'ன்னு மன்றாடிப் பாத்துட்டேன். அவன் எதையும் காதுல போட்டுக்கலை. அக்காதனம் 'இப்படியொரு விஷப்பாம்பை பெத்துட்டாளே'ன்னு என்னை வெறுப்பாளோன்னு பயந்து செத்துட்டிருக்கேன். ஆனா அவ தியாகுவை பெத்த புள்ளைக்கும் மேலாதான் பாசம் காட்டிட்டு இருக்கா...

உனக்குப் பொண்ணு பார்க்கப் போற விவரத்துல இருந்து... சம்யுக்தாவோட அக்கா வீணாவின் கல்யாணம் தேனியில நடந்ததிலேர்ந்து... இன்னிக்கு நடந்த கல்யாணம் வரைக்கும்... அத்தனை விஷயங்களையும் ஒண்ணு விடாம தியாகு கிட்ட சொல்லியிருக்கா...

அவன் பண்ற அட்டூழியத்தை மறந்துட்டு... அவனைப் பெத்த புள்ளையா மதிச்சு குடும்ப விவரங்கள் அத்தனையையும் சொல்லிட்டு இருக்காளே? அவ கூடப் பிறந்ததுக்கு நான் ரொம்பவே குடுத்து வச்சிருக்கணும். ரகு! சம்யுக்தா நம்ம வீட்டு மருமகள் தான்! இந்த வீட்டுப் பொண்ணு தான்... ஆனா அவகிட்ட தியாகுவைப் பத்தின விஷயத்தை மட்டும் சொல்லாதேப்பா...

கடவுள் புண்ணியத்துல அவன் கூடிய சீக்கிரமே திருந்தினாலும் திருந்திடுவான்... இந்த விஷயம் தெரிஞ்சா... சம்பந்தி வீட்டுக்காரங்க நம்மை மதிக்க மாட்டாங்கப்பா''

கற்பகத்தைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

பாசத்தில் ரகுவின் மனம் பாகாய் கரைந்தது. ''அண்ணன் மேல எனக்கு வெறுப்பும் கோபமும் இருக்கறது வாஸ்தவம் தான்! அதே சமயத்துல அவர்மேல் பாசமும் அன்பும் இன்னமும் இருக்குங்கறதை நீங்க நல்லாப் புரிஞ்சுக்கணும்... அம்மாவோட குணம் தானே எனக்கும் இருக்கும்?

சம்யுக்தா என் மனைவி தான். ஆனா அவ இன்னிக்கு வந்தவ... எந்தக் காரணத்தைக் கொண்டும் நம்ம குடும்ப கவுரவத்தை நான் விட்டுக் கொடுக்கவே மாட்டேன். அண்ணனைப் பத்தி நான் எதுவும் சொல்ல மாட்டேன். சத்தியம்! போதுமா சித்தி?''

சித்திக்கு அவன் செய்து கொடுத்த சத்தியம்... அவன் வாயைக் கட்டிப் போட்டு விட்டது... அதுவே மிகப் பெரிய விபரீதத்திற்கும் வித்திட்டு விடும் என்று ரகு எவ்விதம் அறிவான்?

## 14

முதலிரவு! தலை நிறைய பூச்சூடி வெள்ளிச் சொம்பை கைகளில் ஏந்தி மெல்ல நடந்து வந்தாள் சம்யுக்தா

கம்பி சரிகை போட்ட பட்டுப்புடவை... கழுத்திலும் கைகளிலும் சொற்ப நகைகள் பூட்டி எளிய அலங்காரத்தில் இருந்தாலும்... தேவதையாக ஜொலித்தாள். பால் சொம்பை மோடாவில் வைத்து விட்டு அவனது கால்களில் விழுந்து பணிந்தாள்.

''மரியாதை மனசுல இருந்தாப் போறும் சம்யுக்தா! உன்னோட பேரண்ட்ஸ் உனக்கு ரொம்ப அழகான - பொருத்தமான பேரை வச்சிருக்காங்க... 'சம்யுக்தா'ன்னு தான் கூப்பிடுவேன்'' - பேசிக் கொண்டே அவளை அருகே அமர்த்திக் கொண்டான்.

அவளது கையை எடுத்து தன் கைக்குள் பொதிந்து கொண்டான். ''ஐ லவ் யூ ஸோ மச் சம்யுக்தா! நான் ஆசைப் பட்ட பொண்ணே எனக்கு மனைவியா வாய்ச்சுட்டா... ரியலி அயாம் லக்கி சம்யுக்தா'' - பேசிய படி மிக மிருதுவாக அவளது புறங்கையில் தன் இதழ்களால் ஒற்றினான் ரகு.

சரக்கென்று கையை உருவிக் கொண்டாள்.

அந்த மொட்டைக் கடிதம் வருவதற்கு முன்பு... எத்தனை மனக் கோட்டைகளை அவள் கட்டி வைத்திருந்தாள்? ரகு அவளை நெருங்கி ஆசையாக 'ஐ லவ் யூ' என்று கூறும் தருணத்தில்... 'நானும் உங்களைப் பார்த்த மாத்திரத்திலேயே மனதைப் பறி கொடுத்து விட்டேன். நானும் உங்களை மனதார நேசிக்கிறேன்' என்ற உண்மையை அவனிடம் சொல்ல வேண்டும் என்று ஆசை ஆசையாகக் காத்திருந்தாள்.

அதைச் சொல்லும் போது ரகுவின் முகம் ஆச்சரியத்தில் மலர்வதைக் கண்டு ரசிக்க வேண்டும். பிரேமை பொங்க அவன் நெருங்கி வரும் போது நாணத்துடன் 'ஐ டூ லவ் யூ' என்று முணு முணுக்க வேண்டும் என்று கற்பனை செய்து வைத்திருந்தாள் சம்யுக்தா.

ஆசை ஆசையாக அவள் கட்டி வைத்த மனக்கோட்டை உடைந்து தூள்தூளாகி விட்டதே?

துக்கம் தாளாமல் விசும்பி விசும்பி அழுதாள்.

''மைகாட்! என்னாச்சு சம்யுக்தா?... ஏன் அழறே? எனி பிராப்ளம்?'' - பதறியபடி அவளது நெற்றியில் கை வைத்துப் பார்த்தான். சில்லென்றிருந்தது.

மௌனமாக கண்ணீர் உகுத்தவளைக் கண்டு அவனது அடிவயிறு கருண்டது. ''சம்யுக்தா! எதுவா இருந்தாலும் என்கிட்ட ஓபனா நீ பேசலாம். என்ன பிராப்ளம்னு சொல்லு. என்னால முடிஞ்சதை செய்றேன்.''

''நா... நான் மேலே படிக்கணும்னு ரொம்ப ஆசைப்பட்டேன்.



பெரியம்மாவும் பெரியப்பாவும் வற்புறுத்திக் கட்டி வச்சுட்டாங்க... அவங்க கடமையை சீக்கிரமா முடிக்கணும்னு அவசரம்! என் மனசைப் புரிஞ்சுக்கவே இல்ல... என்னைப் பெத்தவங்க இருந்திருந்தா கட்டாயம் என் ஆசைக்கு செவி சாய்ச்சிருப்பாங்க... பெத்தவங்களைப் பறி கொடுத்த அனாதை நான்... அதான் நரக வேதனை அனுபவிச்சுட்டிருக்கேன்.''

ரகுவின் நெஞ்சில் 'சுருக்' என்று நெருஞ்சி முள் தைத்தது. ''உனக்கு மேல படிக்கணும். அவ்வளவு தானே? உன் ஆசைப்படியே படி! தடையேதுமில்லை... நீ நல்லாப் படிச்சு முடிக்கிற வரைக்கும் நான் காத்திட்டிருப்பேன். இன்னொரு வாட்டி 'அனாதை'ங்கிற வார்த்தை... உன் வாய்லே இருந்து வரவே கூடாது. உனக்கு எல்லாமுமா நான் இருக்கேங்கிறதை நீ புரிஞ்சுக்கணும்.

நீ என் அன்பு தேவதை... உன் கண்ணுல இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் வந்தாக் கூட... அதை என்னால தாள முடியாதுடா... நீ படிச்சு முடிக்கற வரைக்கும் என் சுண்டு விரல் கூட உன் மேல படாது. போதுமா? திருப்தி தானே? இன்னமும் நரக வேதனையா இருக்கா? இல்லேல்ல?''

ஸ்தம்பித்துப் போய் விட்டாள் சம்யுக்தா.

''இ... இல்ல''

''அப்பாடா... அது போதும்! இது உன் வீடு... நீ ஃப்ரீயா ரிலாக்ஸ்டா இருக்கலாம். கொஞ்சம் எழுந்துக்கறியா? கட்டிலைப் பிரிச்சுப் போட்டுடலாம். கார்த்தால எழுந்ததும் மறக்காம சேர்த்துப் போடணும். இல்லேன்னா... வேலைக்காரி பார்த்துட்டுப் போயி எல்லார்கிட்டேயும் தம்பட்டம் அடிச்சுடுவா... சரியா சம்யுக்தா?''

பலமாக தலையாட்டினாள்.

''உன்னோட ரிசல்ட் வந்தவுடனே காமராஜ் யுனிவர்சிடியில அப்ளிகேஷன் ஃபார்ம் வாங்கிக் குடுத்துடறேன். நிம்மதியா தூங்கு. குட்நைட்'' - கட்டிலைப் பிரித்துப் போட்ட கையோடு மறுபுறம் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

'என்னது இது? உண்மையிலேயே இவர் பெண்கள் விஷயத்தில் மோசமானவராக இருந்திருந்தால்... கணவர் என்ற உரிமையைக் கையிலெடுத்துக் கொண்டு, என்னுடைய விருப்பு வெறுப்புகளுக்கு கொஞ்சம் கூட மதிப்பளிக்காமல்... தன்னிஷ்டப்படி நடந்து கொண்டிருக்கலாமே?

எனக்கு விருப்பமில்லை என்று தெரிந்ததும் சட்டென்று விலகி 'சுண்டு விரல் கூட உன்மேல் படாது. படித்து முடிக்கும் வரை நான் காத்திருக்கிறேன்' என்று கண்ணியமாகப் பேசுகிறாரே?

இந்த ஒற்றை வரியிலேயே இவரது ஒட்டு மொத்த குணமும் வெளிப்பட்டு விட்டதே? இவர் நல்லவர், நேர்மையானவர்தான்... நான் தான் அவசரப்பட்டு தவறாக இவரை எண்ணி விட்டேனா?'

இரவு முழுவதும் தூங்காமல் கொட்டக் கொட்ட விழித்திருந்தாள். குற்ற உணர்ச்சி மனதை செல்லாக அரித்துக் கொண்டிருந்தது.

மறுநாள் மதியம் அனைவரும் டைனிங் டேபிளின் முன் வந்து அமர்ந்தனர்.

"என்னங்க! நம்ம மருமக இன்னிக்கு சமைச்சிருக்கா... யார் யாருக்கு என்னென்ன பிடிக்கும் - உப்பு, புளி, காரம் எந்த அளவில இருக்கணும்னு எல்லாத்தையும் கேட்டு தெரிஞ்சுகிட்டு... சமையல்கார அம்மாவை ஓரங்கட்டிட்டு சமைச்சிருக்கா" - தனம்மாள் பெருமிதமாய் சிரித்தார்.

"காலிஃப்ளவர் சாம்பார், மணத்தக்காளி வத்தக் குழம்பு, எலுமிச்சை ரசம், பருப்பு உசிலி, சேனைக் கிழங்கு கறி, பயத்தம் பருப்பு பாயசம் எல்லாமே வெகு ஜோரா இருக்கும்மா... என்னோட டயட்டை தெரிஞ்சுகிட்டு அதிக எண்ணெய், காரம், தேங்காய் சேர்க்காமலேயே பிரமாதமா சமைச்சிருக்கியேம்மா?... குட்... வெரிகுட்!"

- லோகநாதராஜன் பரிமாறிக் கொண்டிருந்த மருமகளைப் பார்த்து மனதாரப் பாராட்டினார்.

"இந்தக் காலத்துப் பொண்ணா இருந்தும் அருமையா சமைக்கிறியே? ரகு கொடுத்து வச்சவன் தான்" - கற்பகம் முறுவலித்தார்.

வழக்கத்திற்கு மாறாக... ரகு சாப்பாட்டை ஒரு பிடி பிடித்தான். சந்தோஷமும் பெருமிதமும் பொங்க அவளை ஏறிட்டான். நான்கு விழிகளும் கலந்தன. அவனுக்கு குற்றாலச் சாரலில் நனைந்தாற் போலிருந்தது.

'என்னது இது? படிப்பின் மீது உள்ள அதீத ஆர்வத்தால்... இல்லற வாழ்வில் அடியெடுத்துவைக்க... அவளுக்கு விருப்பமில்லை என்று எண்ணியிருந்தேனே?

வந்த மறுநாளே மருமகளுக்குரிய கடமையை செவ்வனே செய்து 'நல்ல மருமகள்' என்று பெயரெடுத்து அனைவரது மனதிலும் இடம் பிடித்து விட்டாளே?

அவளது விழிகளில் ஆசையும் காதலும் ததும்புகின்றனவே? என்னிடம் நெருங்குவதற்கு... ஏதுவோ ஒன்று அவளைத் தடை செய்கின்றது போலும்.

ஏதோ ஒரு வகையில் அவளது மனம் குட்டையாக குழம்பியிருக்கிறது. நன்கு தெளிந்த பின்... என்னை நன்றாகப் புரிந்து கொண்ட பின்... அவளாக வரட்டும்.'

முடிவெடுத்துக் கொண்ட ரகு... சர்வ ஜாக்கிரதையாய் அவளிடமிருந்து எட்டியே இருந்தான்.

**நா**ட்கள் ஜெட் வேகத்தில் பறந்தன.

இடையில் அவளை அழைத்துக் கொண்டு... அவனது பெரியம்மா வீட்டிற்கும் சென்று வந்தான்.

அதே சமயத்தில் வீணாவும் தனது கணவனுடன் அங்கு வந்திருந்தாள்.

பொன்னுரங்கம், தங்கம், வீணா, மாப்பிள்ளை, சுரேஷ் ஆகியோருடன்



சகஜமாக உரிமையாகப் பேசி பழகினான் ரகு.

"சம்யு! நீ ரொம்பக் குடுத்து வச்சவ... இப்பேர்ப்பட்ட மாப்பிள்ளை கிடைக்க நீ ரொம்ப புண்ணியம் பண்ணியிருக்கணும்" - பெரியப்பா, பெரியம்மா, சுரேஷ், வீணா ஆகியோர்... சொல்லி வைத்தாற் போல் ரகுவைப் பாராட்டிய போது... சம்யுக்தாவிற்கு 'சுருக்' 'சுருக்' என்று உள்ளுக்குள் முள் குத்தியது.

எஸ்டேட் பங்களாவிற்கு வந்ததும்... சமையல்காரம்மாவின் உதவியுடன் அவளே சமைத்தாள். தனம்மாளுக்கும், மாமனாருக்கும் வேளா வேளைக்கு மருந்து மாத்திரைகளைத் தவறாமல் கொடுத்து பரிவுடன் கவனித்துக் கொண்டாள்.

திருவனந்தபுரத்தில் உள்ள சாஃப்ட் வேர் கம்பெனியை கவனிக்கச் சென்ற ரகு... ஒரு வாரமாக வேலை மும்முரத்தில் அங்கேயே தங்கி விட்டிருந்தான்.

அவனை நேரில் பார்க்காமலிருந்த ஒரு வாரத்தில்... தவித்துத் தத்தளித்துத் தான் போனாள். ஒவ்வொரு முறையும் டெலிஃபோன் மணி ஒலிக்கும் போது ஓடிச் சென்று எடுத்து ஏமாந்தாள்.

அன்றும் டெலிஃபோன் கிணுகிணுத்தது.

ஆர்வமாய் எடுத்து 'ஹலோ' என்றாள்.

"நான் நீரஜா பேசறேன். உங்க கல்யாணத்துக்கு வந்திருந்தேனே ஞாபகம் இருக்கா? கொஞ்சம் மனசை விட்டு ராஜனைப் பத்தி உங்ககிட்ட பேசணும்னு இருக்கேன்." என்று அவள் கூறியதும் மீண்டும் சந்தேகம் எட்டிப் பார்த்தது.

'ஏதோ தப்பு இருக்கு... அதான் என்கிட்ட என்னமோ சொல்ல ட்ரை பண்றா'

மனம் அவசர அவசரமாய் தப்புக் கணக்கு போட்டது.

## 15

"**ச**ம்யுக்தா உங்களுக்கும் ராஜனுக்கும் ஏதாவது பிரச்சினையா?" மறுமுனையில் நீரஜா கேட்டதும் பக்கென்றிருந்தது.

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லையே..." - தயங்கி பதிலளித்தாள்.

"கலகலப்புக்கும், குதூகலத்துக்கும் மறுபேர் இருக்குன்னா... அது ராஜனாகத்தானிருக்கும். இப்போ ராஜன் முகத்துல அதெல்லாம் மிஸ்ஸிங்! அவர் திருவனந்தபுரத்துக்கு வர்றேன்னு சொன்னதும்... நாங்க எல்லாரும் சேர்ந்து... ஒரு சின்ன பார்ட்டிக்கு ஏற்பாடு பண்ணினோம்.

ஆனா ராஜன் மட்டும் தனியா வந்தாரு... முகத்துல சார்ஜே இல்லை... நான் ஃபர்ஸ்ட் இயர் படிக்கும் போதே எங்கப்பா இறந்துட்டாரு... மேற்கொண்டு படிக்க முடியாத நிலைமை! அந்த சமயத்துல ராஜன்தான் பண உதவி பண்ணி... படிப்பை முடிக்க உதவினாரு... எனக்கு மட்டுமில்ல... சுமித்ரா, மேரிக்கு... நிறைய பேருக்கு அவர் பல விதத்துல ஹெல்ப் பண்ணியிருக்காரு...

அவர் ஒரு நல்ல நண்பர், நல்ல வழிகாட்டி மட்டுமில்ல... அதுக்கும் மேல! இத்தன பேரோட பழகினாலும்... தப்பான கண்ணோட்டத்துல எங்களை ஒரு பார்வை பார்த்ததில்ல... அவரைச் சுத்தி சதா லேடீஸ் கூட்டம் இருக்கும் தான்...

ஆனா அது அவரோட குணத்துக்கும் கண்ணியத்துக்கும் நேர்மைக்குமான எடுத்துக்காட்டா எடுத்துக்கலாம். உங்களுக்குள்ள என்ன பிரச்சினைன்னு நான் துருவி துருவி கேட்டா... அது நல்லா இருக்காது.

ஆனா... ஒண்ணு! ராஜன் சார் மாதிரி ஒரு கணவர் கிடைக்க நீங்க ஏதோ புண்ணியம் பண்ணியிருக்கணும். ஸீ... சம்யுக்தா! அவர் உங்களை அளவு கடந்து நேசிச்சுதான் கல்யாணம் பண்ணியிருக்காரு. ராஜன் திறமைசாலி! அவர் இன்னமும் பல சிகரங்களைத் தொடணும்.

அவரோட வெற்றிக்குப் பின்னாடி நீங்க இருக்கணும்னு நாபிரியப்படறேன். ராஜனை... பழைய ராஜனா.... சந்தோஷமா நடமாட வைக்கிறது உங்க கையில தான் இருக்கு! ஒரு ஃபிரண்டுங்கிற உரிமையில என் மனகலபட்டதை நா சொல்லிட்டேன். என் மேல எந்த வருத்தமும் இல்லையே சம்யுக்தா?''

கர கர வென்று கண்ணீர் வழிந்தது சம்யுக்தாவிற்கு.

''இல்ல... தேங்க் யூ நீரஜா! தேங்க் யூ'' - தழுதழுத்தாள்.

'அவரை இப்போ நல்லா நான் புரிஞ்சுகிட்டேன். அவரோட அன்புக்கும் அரவணைப்புக்கும் ஏங்கித் தவிக்கிறேன். வெட்கத்தை விட்டு இதை வெளியில் சொல்ல என் பெண்மை தடுக்குதே?'

அவளது உள்மனம் ஓசையின்றி அழுது புலம்பியது. அவன் விலகிச்செல்லச் செல்ல... இவளது மனம் காந்தமாய் அவன் பால் ஈர்க்கப்பட்டது நிஜம்!

அடுத்து வந்த மூன்று தினங்களும் நத்தையாக நகர்ந்தன. பொழுது போகாமல் சும்மா இருந்த வேளையில்... சதா தோட்டத்தை வலம் வந்தாள் சம்யுக்தா.

விதவிதமான வண்ணங்களில் ரோஜாச் செடிகள் செழிப்புடன் வளர்ந்து கண்ணையும் கருத்தையும் கட்டிப் போட்டன. பற்பல வண்ணங்களில் டேலியாக்கள்...

அடுக்குமல்லி, பவளமல்லி, ஜாதி மல்லி, இருவாட்சி, சம்பங்கி, சாமந்தி என்று பூஜைக்கு உதவும் பூக்கள்... குரோட்டன்ஸ் போன்ற அழகுச் செடிகள்...

தென்னை, கொய்யா, மாதுளை, பலா, நெல்லி மரங்கள்... கால்கள் ஓயும் வரை தோட்டத்தைச் சுற்றி சுற்றி வந்தாள். தோட்டக்கார முனியனுடன் பேச்சுக் கொடுத்தால் அவளுக்கு நேரம் போவதே தெரியாது.

தோட்டத்தை அருமையாகப் பராமரித்த முனியனை அவளுக்கு நிரம்பவே பிடித்து விட்டது.



அன்று அந்தி சாயும் நேரத்தில் அவசரமாகக் கிளம்பினார் முனியன்.

''நா வரேன் தாயி! இருட்டிருச்சுன்னா... எனக்கு கஞ்சி காய்ச்ச முடியல தாயி... கண்ணு சரியாத் தெரியல...''

''இருங்க தாத்தா! மதியச் சாப்பாடு நிறைய இருக்கு. பாத்திரத்துல வச்சு தரேன். எடுத்துட்டுப் போங்க... வீட்டுல உங்களுக்கு யாருமில்லையா தாத்தா?''

''ஒரு பேத்தி இருக்கா தாயி! அவ சித்தம் கலங்கின பொண்ணு... எதுவும் செய்ய மாட்டா'' - தூசு விழுந்து விட்டதைப் போல் கண்ணைக் கசக்கினார் தாத்தா.

சம்யுக்தாவின் மனம் இளகியது. ''இருங்க தாத்தா! ரெண்டு பேத்துக்கும் சாப்பாடு எடுத்துட்டு வரேன். வயசான காலத்துல நீங்க போயி சமைச்சுக்கிட்டு... பாவம்!''

சாப்பாட்டு கேரியரை எடுத்துக் கொண்டு வந்தவள் - ''நாளையிலிருந்து காத்தால டிபன், மதியச்சாப்பாட்டை இங்கேயே சாப்பிட்டுக்கோங்க... உங்க பேத்திக்கும் எடுத்துட்டுப் போயி குடுத்துடுங்க... இனிமே நீங்க சமைக்கவே வேணாம்''

''எதுக்கு தாயி சிரமம்? வேணாம் தாயி'' - தயங்கினார் முனியன்.

''அம்மாகிட்டே நான் கேட்டுட்டேன். அவங்க சரின்னுட்டாங்க... பல வருஷங்களா இந்தக் குடும்பத்துக்காக பாடு படறீங்க... வயோதிக காலத்துல வயசுக்கு வந்த பேத்தியை வச்சுக்கிட்டு திண்டாடறீங்க... நானும் உங்க பேத்தி மாதிரி தானே?

என் திருப்திக்காக சரின்னு சொல்லுங்க... டிரைவர்ஸ், வேலைக்காரங்க, சமையல்காரம்மா இவங்க எல்லாரும் இங்கதானே சாப்பிடுறாங்க... உங்களுக்குன்னு தனியாவா சமைக்கப் போறோம்? பிடிங்க தாத்தா''

''ராஜன் சாருக்கு எத்த குணவதியா வாய்ச்சிருக்கே தாயி! நீ நல்லாயிருக்கணும்'' - கேரியரைப் பெற்றுக் கொண்டு நடந்தார் முனியன்.

அன்றிரவு எட்டு மணிக்கு வந்த ரகு, களைப்புத் தீர வெந்நீரில் குளித்து விட்டு இரவு டிபனை சாப்பிட்டு விட்டு மாடிக்கு வந்தான்.

இன்றாவது தன் மனதில் உள்ளதை வெளிப்படையாகப் பேசிவிட வேண்டும் என்ற ஆவலுடன் அவன் எதிரில் வந்து நின்றாள். ஆனால் அவனோ வெகு சிரத்தையாய் ஒன்றாக இணைந்திருந்த கட்டிலைப் பிரித்துப் போட்ட போது... ஏமாற்றம் வந்து இதயத்தை அழுத்தியது.

மறுநாள் அவன் பண்ணை வீட்டிற்குக் கிளம்ப எத்தனிக்கும் போது, ''நானும் உங்க கூட பண்ணை வீட்டுக்கு வரட்டுமா? அதைப் பார்க்கணும்னு ஆசையா இருக்கு'' என்றாள்.

''ஓ... எஸ்! தாராளமா வாயேன்'' என்றதும் குதூகலமாய் காரில் அவனருகே அமர்ந்து கொண்டாள். பஞ்சுப் பொதியாய் மேகங்கள் தவழ்ந்து வந்து மலையுச்சியை அணைத்து முத்தமிட்டுப் பின் விலகிச் செல்வதுமாக இருந்ததைப் பார்க்கவே... கொள்ளை அழகாய் இருந்தது.

சாலையின் இருமருங்கும் ஏலச்செடிகள் ஆளுயரத்திற்கு மேல் வளர்ந்திருந்தன. வானம் இலேசாய் பன்னீர் தெளிக்க ஆரம்பித்தது. குளிர் காற்று அவளை இதமாய் ஸ்பரிசித்து காதோரத்து முடிக்கற்றைகளுடன் செல்லமாய் கிச்சு கிச்சு மூட்டியது.

சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு இரு கைகளையும் பரபரவென்று தேய்த்து கன்னங்களில் ஒத்தடம் கொடுத்தபடி... ஆர்வமாய் இயற்கையை ரசித்தவளை ஓரக்கண்ணால் பார்த்தபடி காரை ஓட்டிய ரகுவின் இதழ்களில் குட்டி முறுவல் பூத்தது. சிறிது தூரம் சென்றதும் சாலையோரமிருந்த பல மரங்களில் கொடிகள் படர்ந்து மரத்தின் பாதியை மறைத்துக் கொண்டிருந்தன.

''ரகு! இது என்ன செடி?'' - அவள் உரிமையாய் ரகு என்றழைத்தது அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. செவிகளில் பாகுக் கரைசலை ஊற்றியது போலிருந்தது.

''அது செடி இல்லை... மிளகுக் கொடிங்க... கொத்து கொத்தா காய்ச்சிருக்கு பாரு... அதான் பச்சை மிளகுங்க''

''இன்னிக்குத்தான் முத முதல்லா இதையெல்லாம் நான் பார்க்கிறேன்.'' - விழிகள் விரியப் பேசியவளை ஆர்வமாய் ஊன்றிப் பார்த்தான்.

திராட்சைத் தோட்டத்திற்குப் பக்கத்தில் அமைந்திருந்த பண்ணை வீடு அம்சமாக இருந்தது. காரை விட்டு இறங்கியதும் உள்ளே செல்லமனமின்றி சுற்றும் முற்றும் வேடிக்கை பார்த்தாள்.

திராட்சைத் தோட்டத்திற்குச் சென்று கொடிகள் நிறைந்த பந்தலுக்கு அடியில் தலையைத் தாழ்த்தியபடி நடந்து... திராட்சைக் கொத்துக்களை ஆசையுடன் தடவிப் பார்த்தாள்.

''ரகு! இந்த இடமே ரொம்ப ரம்யமா இருக்கு... நீங்க வரும் போதெல்லாம் என்னையும் கூட்டிட்டு வர்றீங்களா? ப்ளீஸ்'' - அவன் அதற்கு பதில் சொல்ல யத்தனிக்கும் முன்... 'சரக்' என்று வேகமாக வந்து நின்றது அந்த டாக்ஸி.

சிக்கென்று வெளுப்பாய் இருந்த வெள்ளைக்கார இளம்பெண் சற்று கோபமாய் அதிலிருந்து இறங்கினாள்.

''சம்யுக்தா! நீ உள்ளே போ... மாடி ரூம்லே வெயிட் பண்ணு. இவங்க கிட்ட பேசி அனுப்பிட்டு வந்துடறேன்'' - தாடை இறுக உத்தரவிட்டவனையும் அந்த இளம் பெண்ணையும் மாறி மாறிப் பார்த்து விட்டு உள்ளே சென்றாள்.

மாடியிலிருந்த விஸ்தாரமான அறைக்குள் நுழைந்த சம்யுக்தா... இன்டீரியர் டெகரேஷனைப் பார்த்து ஆச்சரியத்தில் மூழ்கினாள். அறையின் சுவர்களில் எதிரும் புதிருமாக ரவிவர்மாவின் இரண்டு ஓவியங்கள்... அங்கிருந்த ஒவ்வொரு பொருளும் ரகுவின் கலாரசனையைப் பறை சாற்றுவதாகவே இருந்தன.

மெல்ல அமர்ந்து ஆங்கில மேகஸினைப் புரட்டியவளுக்கு இருப்பே கொள்ளவில்லை. எழுந்து ஜன்னலருகே சென்றாள். தூரத்திலிருந்த மலைத்தொடர்கள், பசிய தோட்டங்கள் கண்களை ஈர்த்ததை சட்டை செய்யாமல்... கீழே நின்றிருந்த கணவனும் அந்த இளம் பெண்ணும் தென்படுகிறார்களா என்று பார்த்தாள்.

ஜன்னல் கம்பிகளை முட்டுவது போல் முகத்தை ஒட்டி வைத்தும் அந்தப் பெண்ணின் முதுகுப்புறம் தான் தெரிந்தது. ஆனால் ரகுவை நன்கு கவனிக்க முடிந்தது.

ரகு தழைந்த குரலில் பரிதாபமாக அவளிடம் கெஞ்சிப் பேசுவதைப் புரிந்து கொள்ள முடிந்தது. முகம் தெரியாவிட்டாலும் அவள் கையை ஆட்டி ஆட்டிப் பேசியதிலிருந்து அவள் கோபமாக இருப்பதையும்... நியாயம் கேட்டு வந்தவளைப் போன்றும் தெரிந்தது.

ரகு அவளது கைகளைப் பிடித்து கெஞ்சி மன்றாடியதைப் பார்த்தவளுக்கு... அவர்கள் பேசியது எதுவும் காதில் விழவில்லை. மலைக்காற்று 'விர்... விர்' என்று சுழன்றடித்ததால்... அவர்களது சம்பாஷணையைக் கேட்கும் வாய்ப்பு கிட்டவில்லை.

'இவருக்கும் அவளுக்கும் ஏதோ தொடர்பு இருக்கிறது. இவரால் அந்தப் பெண் பாதிக்கப்பட்டிருக்கிறாள். இப்போது நியாயம் கேட்டு குதிக்கிறாள். இவர் கெஞ்சிக் கொஞ்சி சமாதானப் படுத்தி விஷயத்தை அமுக்கப் பார்க்கிறார். இவர் நிச்சயமாக தவறு செய்து இருக்கிறார். இல்லையென்றால் எதற்கு இப்படி கெஞ்ச வேண்டும்?'

உள்ளுக்குள் மீண்டும் சந்தேகம் படையெடுத்தது. வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்ட கதையாக... ரகுவின் மீது எரிச்சலும், வெறுப்பும் மண்டிக் கொண்டு வந்தன.

## 16

அரைமணி நேரம் கழித்து மாடி அறைக்கு வந்த ரகு ''இன்னிக்கு நான் சீனையெல்லாம் பார்க்கிற மூடுல இல்லை... கிளம்பு போகலாம். இன்னொரு நாள் நிதானமா வந்து எல்லாத்தையும் சுத்திப் பார்க்கலாம்.'' என்றபோது மறுபேச்சு பேசாமல் அவனைப் பின்தொடர்ந்தாள்.

காரில் பயணித்த போது இருவரும் முகம் இறுகிப் போய் கிடந்தனர். மௌனம் கெட்டிச் சுவராக இருவரிடையே எழும்பி நின்றது. வீட்டிற்கு

வந்ததும் தங்களது படுக்கை அறைக்குச் செல்லப் பிடிக்காமல்... சமையலறைக்குள் புகுந்து கொண்டாள்.

அன்று மதியம் அனைவருக்கும் பரிமாறி முடித்ததும் தோட்டத்திற்குச் சென்றாள். சாப்பாட்டு கேரியருடன் அவள் நிற்பதைப் பார்த்ததும் வாட்ச்மேன்,

''இன்னிக்கு முனியன் வரலீங்கம்மா'' என்றான்.

''தாத்தா வீடு எங்கே இருக்கு? நானே நேர்ல போய் குடுத்துடலாம்னு இருக்கேன். பொழுதே போகலை. அதான்.''

''நேரா கொஞ்ச தூரம் நடந்து சரிவில இறங்கினா. அவரு குடிசை தெரியும்மா.''

மனம் கொந்தளித்துக் குமுறிக் கொண்டிருந்தது.

சரிவில் மெல்ல இறங்கி அந்தக் குடிசை வாசலில் போய் நின்றாள்.

''கட்டை அவுத்து வுடு தாத்தா.'' -அழுகைச் சத்தம் கேட்டு உள்ளே பார்த்தாள். 'அப்சரஸ் போன்று அழகு தேவதையாக இருந்த இளம்பெண்ணை கட்டிப் போட்டு வைத்திருக்கிறாரே தாத்தா?' - சாப்பாட்டு கேரியரை திண்ணையில் வைத்து விட்டு நிமிர்ந்தாள் சம்யுக்தா.

''அட... யாரு நீ? எதுக்கு இங்கே வந்தே?''

''நான் சம்யுக்தா... லோகநாதராஜனோட மருமகள்''

''நான் செல்வந்தி... நானும் அவரோட மருமகள்தான். ராஜன் சாருக்கும் எனக்கும் மலை உச்சியில இருக்கிற காளி கோவில்ல கல்யாணம் நடந்துச்சே. இதோ அவரு தாலி கட்டியிருக்காரு பாரேன். நான் அவரை எம்புட்டு நம்பினேன் தெரியுமா? தாலி கட்டி மோசம் பண்ணிட்டாரு... நீயும் ஜாக்கிரதையா இரு... என்ன?''

இதைக் கேட்டதும் சம்யுக்தாவுக்கு காலடியில் தரை நகர்ந்து செல்வதைப் போலிருந்தது.

மண்பானையில் தண்ணீர் பிடித்துக் கொண்டு வந்த முனியன்... சம்யுக்தாவிடம் பேத்தி செல்வந்தி கண்டபடி பிதற்றிக் கொண்டிருப்பதைக் கண்டு விதிர்த்தார். மண்பானையை வைத்துவிட்டு வேகமாய் நுழைந்த முனியன் பளார் பளார் என்று செல்வந்தியின் கன்னத்தில் அறைந்தார்.

''இனிமே பினாத்தினே... நான் சூடு வச்சுடுவேன் புள்ள...'' - அதட்டிவிட்டு திரும்பினார். ''தப்பா எடுத்துக்காதேம்மா... இவளுக்கு சித்தம் கலங்கிப் போச்சு தாயி... அதான் ஏதேதோ உளறுது'' என்றார்.

நடுங்கித் துடித்த கீழுதட்டை அழுந்தக் கடித்த சம்யுக்தா ''நீங்க வராததால நானே சாப்பாடு எடுத்துட்டு வந்தேன்'' என்றாள்.

''எனக்கு கொஞ்சம் உடம்பு சொகமில்லை. அதான் வரமுடியலை தாயி. நாளைக்கு வந்துடறேன் தாயி.''

வீட்டிற்கு வந்ததும் யார் முகத்தையும் பார்க்கப் பிடிக்காமல் அறைக்குள் நுழைந்தாள். 'சே! ஒரு ஏழைப் பெண்ணை நம்ப வைத்துக் கெடுத்து விட்டார். இந்த வெளிநாட்டு இளம் பெண்ணையும் மோசம் செய்திருக்கிறார். இன்னும் கண்ணுக்குத் தெரியாமல் எத்தனை பேர் பலியாகி இருக்கிறார்களோ? யார் கண்டார்கள்? ஆனால்... வாக்கு கொடுத்தபடி கட்டின மனைவி மீது சுண்டு விரல் கூட படாமல் தானே நடந்து கொள்கிறார்?

எல்லாமே வெளி வேஷம் போலும்... ஊருக்குள் ராஜ லீலைகள் புரிந்து விட்டு... என்னிடம் உத்தமன் போல் வேஷம் போடுகிறாரா?

அந்த மாசு மருவற்ற முகத்தைப் பார்த்தால்... கள்ளம் கபடம் ஏதும் அறியாதவரைப் போன்று இருக்கிறதே?'

குழப்பம் ஒரு பக்கமும் சந்தேகம் ஒரு பக்கமும் அவளைப் பிடுங்கித் தின்றன. கட்டிலில் குப்புறப்படுத்து தேம்பினாள்.

நினைக்க நினைக்க வேதனை அதிகரித்து இதயம் பாறாங்கல்லாய் கனக்க ஆரம்பித்தது.

''சம்யுக்தா... சம்யுக்தா... இங்க கொஞ்சம் வாயேன்'' - தனம்மாவின் குரலைக் கேட்டதும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். முகத்தை அலம்பி புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டே வேகமாகப் படிகளைக் கடந்து இறங்கினாள்.

''என்னம்மா?''

''மாமாவோட நெருங்கின நண்பரோட பொண்ணுக்கு மதுரையில இன்னிக்கு ரிசப்ஷன்.. நான், உங்க மாமா, கற்பகம் எல்லாருமா கிளம்பறோம். அப்படியே நாளைக்கு கல்யாணத்தைப் பாத்துட்டு தான் நாங்க வருவோம்.''

''சரிங்கம்மா... மதுரைக்குப் போனதும் போன் பண்ணுங்கம்மா.''

''என் மருமகளுக்கு அக்கறையைப் பாரேன். கண்டிப்பா பண்றேன். ரகு இங்க தான்... ஏதோ வேலையா போயிருக்கான். அவன்கிட்ட நாங்க சொல்லிட்டோம். அப்ப நாங்க வரோம்'' - மூவரும் காரிலேறிச் சென்று விட்டனர்.

வீட்டிலேயே அடைந்து கிடந்தால் பைத்தியமே பிடித்து விடும் போல் அவளது மனம் அலைபாய்ந்து கொண்டிருந்தது.

ரகுவின் செல்ஃபோனுக்கு முயற்சித்தாள்.

''ஹலோ...''

''ஹலோ! நான்... நான் தான் பேசறேன். எல்லாரும் கல்யாணத்துக்கு கிளம்பிப் போயிட்டாங்க. வீட்டிலேயே அடைஞ்சு கிடக்கேன். கொஞ்சம் காலாற வாக்கிங் போயிட்டு வரட்டுமா? சமையல்காரம்மாவை துணைக்கு அழைச்சுட்டுப் போறேன்.''

''உன் இஷ்டம்... ஜாக்கிரதையா போயிட்டு வா... நேரத்தோட திரும்பி வந்துடு சம்யுக்தா... சரியா?''

''சரிங்க!'' - ரிசீவரை வைத்தவள் அடுக்களைக்குச் சென்றாள்.

''தாயம்மா! எனக்கு ரொம்ப போரடிக்குது. சுவாமிஜியோட ஆசிரமத்துக்கு போயிட்டு வரலாமா?''

''ராஜன் சாரோட ஆசிரமத்துக்கா? ஓ... போகலாமே'' என்றதும் சம்யுக்தாவின் புருவங்கள் யோசனையுடன் மேலேறின.

அமைதி கோலோச்சும் இடத்தில்... அழகிய வனாந்தரத்தில் அமைந்த ஆசிரமத்தைப் பார்க்கும் போதே மனம் லயித்துப் போனது.

புலித்தோலில் அமர்ந்திருந்த தியாகராஜனை நெருங்கி மண்டியிட்டு நமஸ்கரித்தாள் சம்யுக்தா.

ஆசிரமத்தில் சொற்ப பக்தர்களே இருந்தனர்.

அவளது விழிகளை ஊடுருவிப் பார்த்தான் தியாகு.

''உன் மனசு நிலை கொள்ளாம தவிக்குது. சஞ்சலப்படுது. சீக்கிரமே உனக்கு ஒரு நல்ல வழி பிறக்கும். இது பகவான் சன்னிதானம். இதை நம்பி நாடி வந்துட்டா... எல்லா இடர்பாடுகளும் விலகி ஓடிடும். கொஞ்ச நேரம் உட்காரு. அலைபாயுற மனசு கட்டுக்குள்ளே வரும்.''

தியாகு கூறியதும் பவ்யமாய் தலையாட்டிய சம்யுக்தா சற்று நகர்ந்து சென்று சம்மணமிட்டு அமர்ந்தாள்.

சிறு வயதிலிருந்தே அவள் தியானம் செய்து பழக்கப்பட்டவளாதலால்... இன்றும் தியானத்தில் அமர்ந்ததும் அலைபாய்ந்த மனம்... அவள் வசப்பட்டது. கவலை மறைந்து மனதில் நிம்மதி ஜனித்தது.

அரைமணி நேரம் நழுவியதும் சட்டென்று எழுந்தாள்.

மீண்டும் சுவாமிஜியை வணங்கிவிட்டு விடைபெற எத்தனித்தாள்.

''தினமும் இங்கு வந்து போ! பகவானுடைய பரிபூரண அருள் கிட்டும். நாளைக்கு பௌர்ணமி! நடுநிசியில் மலை உச்சியில் இருக்கற காளி கோவில்லே சிறப்பு பூஜை நடத்தப்போறேன்.

பூஜையில கலந்துகிட்டா ரொம்ப விசேஷம்! நினைச்சது நிறைவேறும். காரியங்கள் யாவும் கைகூடும். தவறாம இந்த பூஜையில் கலந்துக்கிட்டு தெய்வத்தோட அருளை நீ பெறணும். சௌபாக்கியவதியா இருப்பே.'' அவளது உச்சந்தலையில் கை வைத்து ஆசீர்வதித்தான்.

அவனது விழிகளை நேருக்கு நேராகப் பார்த்தவளுக்கு ஏனோ மறுக்கவே மனம் வரவில்லை.

அவளையும் அறியாமல் வேகமாகத் தலையாட்டினாள்.

நடந்து வரும் வழியில், ''தாயம்மா! என்னமோ தெரியலை. இங்க வந்து தியானம் பண்ணினதும் மனசு இலேசாகிப் பறக்கற மாதிரி இருக்கு. நிம்மதியா இருக்கு.'' என்றாள்.

''ஆமா.... சின்னம்மா! நம்ம ராஜன் சாருகிட்டே ஏதோ சக்தி இருக்கும்மா... சும்மாவா இத்தன ஜனங்க தேடி வர்றாங்க? எனக்கும் அங்க போயி உட்கார்ந்ததும் உடம்பெல்லாம் அப்படியே புல்லரிச்சுப் போச்சு. கண்ணுல இருந்து தண்ணியா கொட்டுச்சு'' என்றாள்.

இருள் கவியும் முன் வீடு வந்து சேர்ந்து விட்டனர்.

கேட்டுக்கு பக்கத்தில் நிற்கும் வாட்ச்மேனை காணாததால்... 'ஒருவேளை பின்புறத் தோட்டத்தில் நின்று தம்மடிக்கிறானோ?' என்ற எண்ணத்தில்... தோட்டத்தைச் சுற்றிக் கொண்டு சென்றாள்.

அவள் நினைத்தது சரிதான். டிரைவரும் வாட்ச்மேனும் புகைத்துக் கொண்டே பேசினார்கள்.

''காசியோட பொண்ணை... அதான் தாமரையை ராஜன் சாரு கெடுத்துட்டாருல்ல? விஷயத்தை மூடி மறைக்க அஞ்சு லட்சம் கொட்டிக் குடுத்துருக்காங்களாம். தாமரைக்கு அடுத்த வாரம் கண்ணாலமாம். சம்பத்துல இருக்கற ராஜன் மில்லுலே மாப்பிள்ளை வேலை பார்க்கானாம். சீர்செனத்தி செஞ்சு கையில ரொக்கமும் தர்றாங்களாம்.

தாமரையோட தங்கச்சிகளையும் கரையேத்தறேன்னு அன்னிக்கு வாக்கு குடுத்துட்டாருல்ல? அன்னிக்கு நைட் ட்யூட்டியில் இருந்ததால எல்லாத்தையும் பார்க்க முடிஞ்சது'' - வாட்ச்மேன் வம்பு மூட்டையை அவிழ்த்து விட்டான்.

''குடும்ப கவுரவத்துக்கு பங்கம் வந்துடக்கூடாதுன்னு லட்சம் லட்சமா செலவு பண்றாங்க பாரேன்'' - டிரைவர் அங்கலாய்த்தான்.

''இதெல்லாம் பெரிய இடத்து சமாச்சாரம். நமக்கேன் பொல்லாப்பு. விஷயம் வெளியே கசிஞ்சா... நம்ம சீட்டு தான் கிழியும்... ஜாக்கிரதை.''

வந்த சுவடு தெரியாமல் திரும்பி விட்டாள் சம்யுக்தா.

'படித்தவர்... நாலும் தெரிந்தவர் ரகு. பிஸினஸிலும் சாதனை படைக்கக் கூடிய திறமைசாலிதான். ஆனால் கடைநிலை ஊழியர்கள் வம்பு பேசிசிரிக்கும் அளவுக்கு தரம் தாழ்ந்து நடந்து கொள்கிறாரே?

இதனால் அவரது மதிப்பும் மரியாதையும் தரைமட்டமாகிக் கொண்டே வருகின்றதே?

இது ஏன் அவருக்குப் புரியவில்லை? அவரைக் கைப்பிடித்த பாவத்திற்கு நான் வெட்கப்பட்டு... வேதனைப்பட்டு.... மனமுடைந்து சாகப் போகின்றேன்.

பெரியம்மாவும் பெரியப்பாவும்... நாங்கள் அன்னியோன்யமாக வாழ்வதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் நாங்கள்? ஊகூம்! கடைசி வரை இப்படியே தாமரை, இலையில் ஒட்டாத தண்ணீராய் வாழ்ந்து முடித்துவிட வேண்டியதுதான்.'

அன்றிரவு அவனுக்கு சப்பாத்தியும் சென்னா-மசாலாவையும் பரிமாறும் போது அவனாகவே பேச்செடுத்தான்.

"வாக்கிங் போயிட்டு வந்தியா சம்யுக்தா?"

மௌனமாகத் தலையாட்டினாள்.

"உம்! எங்க போனாலும் நேரத்தோட வந்துடு. அம்மா எனக்கு ஃபோன் பண்ணினாங்க. கல்யாணம் முடிஞ்சதும் அப்படியே பழமுதிர்ச்சோலை, திருப்பரங்குன்றம், அழகர் கோவில்னு மதுரையைச் சுத்தியுள்ள கோவில்களுக்குப் போயிட்டு வர்றாங்களாம். நாளைக்கு பௌர்ணமி பூஜைக்கு மீனாட்சி அம்மன் கோவிலுக்குப் போறாங்களாம். இன்னும் ஒரு நாள் தங்கிட்டு வரோம்னாங்க. 'நிதானமா நிம்மதியா சுத்திப் பார்த்து தரிசனம் பண்ணிட்டு வாங்க'ன்னு சொல்லிட்டேன்.

சென்னா மசாலா ரொம்ப அருமையா இருக்கு சம்யுக்தா" என்ற போது விரக்தியாக முறுவலித்தாள்.

'நாளைக்கு எப்படியாவது பௌர்ணமி பூஜையில கலந்துக்கணும்' அவளது உள்மனம் உறுதியாக முடிவெடுத்தது.

## 17

"மெனி மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் த டே" - கட்டிலில் ஒருக்களித்துப் படுத்திருந்தவள்... கண்களைக் கசக்கிக் கொண்டு விழித்துப் பார்த்தாள்.

"இது கனவல்ல. நிஜம்தான்" - புன்னகைத்த ரகுவின் கையில் ஒரு அழகிய சிறு வெல்வெட் பெட்டி இருந்தது. மறுகையில் பெரிய பிளாஸ்டிக் கவர்.

"இன்னிக்கு என்ன தேதி?" - நெற்றியைச் சுருக்கி ஒரு கணம் யோசித்தவளின் முகத்தில் ஆச்சரிய ரேகை படர்ந்தது.

"அட.... ஆமாம்! என்னோட பிறந்த தேதி உங்களுக்கு எப்படி தெரியும்?"

"நேத்து நைட்ல வீணா ஃபோன் பண்ணினாங்க. வாக்கிங் போயிட்டு வந்ததால என்னவோ... நீ அசந்து தூங்கிட்டே."

அவன் நீட்டிய பெட்டியைத் திறந்தவள்... திராட்சைக் கொத்து போன்று வடிவமைக்கப்பட்ட வைரக்கற்கள் பதிக்கப்பட்ட நெக்லஸைக் கண்டு சற்றே திகைத்தாள்.

"தேங்க்ஸ் ரகு! மணி ஒன்பதுதான் ஆகுது. எப்படி அதுக்குள்ளே நகையை வாங்கினீங்க?"

"நான் ஒரு ஃபோன் பண்ணினால் போதும். நடு ஜாமத்துல கூட நகை வீடு தேடி வருமாக்கும்."

'அன்பான கணவர்தான்.... இவர் மட்டும் திருந்தி விட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்?'

"ரகு! எங்க எங்க இருந்தோ ஜனங்க... உங்க அண்ணனை தரிசிக்க



வர்றாங்க... இன்னிக்கு நாம்ப ஜோடியா போயி ஆசீர்வாதம் வாங்கிட்டு வரலாமா?"

"பிறந்த நாளும் அதுவுமா கோவிலுக்குப் போகலாம்னு சொல்லு... சந்தோஷப்பட்டிருப்பேன். உன்னை வளர்த்த பெரியம்மாவுக்கு ஃபோன் பண்ணிப் பேசு. படிச்ச பொண்ணு தானே நீ?

இந்த விஷயத்துல படிச்சவங்க படிக்காதவங்கன்னு வித்தியாசமே இல்லாம... எல்லாரும் ஏன் இப்படி கண்மூடித்தனமா இருக்கீங்க? நான்சென்ஸ்."

கோபத்தில் கொந்தளித்து இரைந்து கத்தியவன்... கையிலிருந்த பிளாஸ்டிக் கவரை கட்டிலின் மீது வீசி விட்டுப் போய் விட்டான்.

'நான் என்ன கேட்டுட்டேன்னு இந்த குதி குதிச்சிட்டுப் போறாரு... இதுக்கே இப்படி கத்திட்டுப் போறாரே? நேத்து சுவாமிஜியோட ஆசிரமத்துக்குப் போயிட்டு வந்ததை சொன்னா... என்ன நடந்திருக்குமோ தெரியலை.

இவரைப் பத்தின அத்தனை விஷயங்களும் தெரிஞ்சும்... நான் வாய்மூடி மவுனமா போயிட்டிருக்கேன். ஆனா... சுவாமிஜிகிட்ட ஆசீர்வாதம் வாங்கணும்னு பிரியப்பட்டதுக்கே இவ்வளவு கோபப்படுறாரே? இதென்ன நியாயம்?'

தனக்குள் முணுமுணுத்தபடி நீர்த்திரையிட்ட விழிகளுடன் அந்த பிளாஸ்டிக் கவரைப் பிரித்துப் பார்த்தாள்.

ஆகாய நீல வண்ணக் காட்டன் புடவை சரிகை பார்டருடன் அம்சமாக இருந்தது. இதமாக அதை வருடிய போது விழிகளிலிருந்து வழிந்த கண்ணீர் புடவையில் சிந்தியது.

ரகு காலை டிபன் சாப்பிட வரவே இல்லை. மதியம் இரண்டு மணிக்கு மேல் அவனாக ஃபோன் செய்து "எனக்கு பண்ணை வீட்டுல வேலை நிறைய இருக்கு. எனக்காகக் காத்திருக்காம நீ சாப்பிட்டுரு" என்று கூறினான்.

"காலையில கூட நீங்க சாப்பிடலை. கோபத்தை இப்படித்தான் வெளிப்படுத்தணுமா? சாப்பாட்டை டிரைவர்கிட்டே கொடுத்தனுப்பவா?" சம்யுக்தாவின் குரல் ஏகத்திற்கும் தழுதழுத்தது.

"சரி."

இரவு வந்த போது கூட.... அவனது கோபம் சற்றும் தணியவில்லை. நிமிர்ந்து கூடப் பாராமல் ஒரு தோசையைப் பிய்த்து ஒப்புக்கு சாப்பிட்டு விட்டு விருட்டென்று மாடிக்குப் போய் விட்டான்.

நைட் லேம்ப் நீல ஒளியைக் கக்கிக் கொண்டிருந்தது. அவள் அந்த பிரம்மாண்டமான கடிகாரத்தின் மீதே பார்வையைப் பதித்திருந்தாள்.

பதினோரு மணி வாக்கில் மெல்லத் திரும்பி ரகுவை நோட்டமிட்டாள்.

குறட்டையொலி எழுப்பியபடி ஆழந்த நித்திரையிலிருந்தான். மாடியை விட்டு இறங்கினாள். தாயம்மாவும் மற்ற வேலைக்காரிகளும் படுத்திருந்த அறைக்குள் புகுந்தாள்.

''தாயம்மா'' மெல்லக் குரல் கொடுத்தாள்.

''தோ... வந்துட்டேன்மா... நான் முழிச்சுதானிருக்கேன்.'' - முந்தானையை வரிந்து சொருகிக் கொண்டு கிளம்பி விட்டாள். பெரிய டார்ச்சை கையிலெடுத்துக் கொண்டாள்.

''சின்னம்மா... எங்கே கிளம்பிட்டீங்க இந்த நேரத்துல?'' - வாட்ச்மேன் அக்கறையுடன் விசாரித்தான். நேற்று டிரைவரிடம் அவன் பேசிய பேச்சு ஞாபகத்திற்கு வந்தது.

''நீங்க உங்க வேலையை மட்டும் பாருங்க... அடுத்தவங்க விஷயத்துல மூக்கை நுழைக்காதீங்க. எல்லாம் அவருகிட்ட சொல்லிட்டுத்தான் போறோம்.'' - வெடுக்கென்று பதிலளித்தாள்.

கிட்டத்தட்ட அரை மணி நேரத்தில் ஆசிரமத்தை அடைந்து விட்டார்கள்.

''வா சம்யுக்தா! மலை உச்சிக்கு நான் கிளம்பிட்டிருக்கேன். அதோ என் சிஷ்யர்கள் எல்லாரும் மேலே போயிட்டிருக்காங்க பாரு'' - சுவாமிஜி சுட்டிக் காட்டிய திசையில் பார்த்தாள். சுளுந்து வெளிச்சத்தில் அவர்கள் மெல்ல மெல்ல மேலேறினர்.

''தாயம்மா! இதோ... இந்த யாகத்தீ அணைஞ்சிடாம நெய் ஊத்திக்கிட்டே இருங்க. நான் சம்யுக்தாவைக் கூட்டிக்கிட்டு மேலே போறேன். பௌர்ணமி பூஜையை நாங்க முடிச்சுட்டு வர்ற வரைக்கும் யாகத்தீ அணைஞ்சுடாம பாத்துக்கணும். சரியா?''

''சரிங்க சாமி. இதுக்கு நான் குடுத்துல்ல வச்சிருக்கணும்?''

''வா சம்யுக்தா!'' - மறுபேச்சு பேசாமல் அவள் பின் தொடர்ந்தாள்.

அரை மணி நேரத்தில் மலை உச்சியை அடைந்தார்கள்.

சுவர்க் கோழிகளின் ரீங்காரமும், ராத்திரி சில் வண்டின் 'டுர் டுர்' சப்தங்களும் சேர்ந்து ஒரு அமானுஷ்யமான பயத்தைத் தோற்றுவித்தன.

காளி சிலை அருகே ஒரேயொரு சுளுந்து சோகை வெளிச்சத்தை துப்பிக் கொண்டிருந்தது.

ஆளரவம் அற்று நிசப்தம் நிலவியதைப் பார்த்ததும் ''சுவாமிஜி! எங்கே உங்க சிஷ்யர்களைக் காணோம்?''

''அதெல்லாம் இருக்கட்டும். நானொரு தெய்வப் புருஷன்னு நீ நம்பறியா?''

''ஆமா... நம்பறேன்.''

''கிட்டத்தட்ட நான் சாமிதானே?''



''ஆ... ஆமா.''

''இந்த சாமிக்கு இப்போ நீ உன்னை நிவேதனம் பண்ணு! அர்ப்பணம் பண்ணு. நினைச்ச காரியம் ஈடேறும்.'' - பகபகவென்று சிரித்தான் தியாகு.

''அ... அடப்பாவி! ஏதேதோ சொல்லி என்னை இங்க வரவச்சுட்டியே? நான் உன் தம்பி மனைவி. ஞாபகமிருக்கட்டும்.''

''ப்ச்! சின்ன வயசுலேர்ந்து எனக்கு அவனைப் பிடிக்காது. கல்யாணத்துக்கு முன்ன ஒரு மொட்டைக் கடிதம் அனுப்பினேனே? அதையும் மீறி அவனைக் கட்டிக்கிட்டே இல்லையா? உன்னை விரும்பி கல்யாணம் செய்துகிட்டானாமே? கேள்விப்பட்டேன். இன்னிக்கு ஒரு நாள் மட்டும் எனக்கு இணக்கமா நடந்துக்கோ'' - நெருங்கி வந்தான்.

''அடப்பாவி! அது உன்னோட சதிதானா? வீணாக அவரை சந்தேகப்பட்டேனே?''

திகிலுடன் பத்தடி தூரம் ஓடியிருப்பாள். மறுகணமே வாகாய் அவனது கைக்குள் சிக்குண்டாள்.

''பாவி! மோசக்காரா... விடு என்னை... ஐயோ! யாராச்சும் வந்து என்னைக் காப்பாத்துங்களேன்'' - அவள் அலறிய அலறல்... அந்த மலை முழுவதும் மீண்டும் மீண்டும் எதிரொலித்தது.

திமிறிக் கொண்டு ஓடிய போது... புடவையைப் பற்றி பலங்கொண்ட மட்டும் இழுத்தான். புடவை கொத்தாக சுருண்டு அவனது கைக்குள் அடங்கியது.

மார்பின் குறுக்கே கைகளைக் கட்டிக் கொண்டு தபதபவென்று ஓடியவள், காளி சிலையின் மறுபக்கம் சென்று ஒண்டினாள்.

''பாவி! அம்மன் சிலைக்கு முன்னாடியே பயமில்லாம... பெண்மையை நாசப்படுத்த நினைக்கிறியே? நீ உருப்படுவியா?'' - தேம்பிக் கொண்டே சபித்தாள்.

''நான் சாமி! சர்வமும் நானே... நான் எதுக்கு பயப்படணும்?'' - அகங்காரமாய், அலட்சியமாய் சிரித்தான் தியாகு.

சருகுகள் பலமாய் நொறுங்கும் சப்தம் கேட்டு இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

''நீ சட்டத்துக்கு பயந்துதான் ஆகணும் தியாகு'' என்று கூறியபடி ரகு ஓடி வந்தான். டார்ச் லைட்டை ஏந்தியபடி வாட்ச்மேனும் ஓடி வந்து நின்றான்.

தியாகுவின் முகம் இருண்டது.

''ர... ரகு! பௌர்ணமி பூஜையில் கலந்துகிட்டா நினைச்சதெல்லாம் நிறைவேறும்னு இவன் சொன்னதை நம்பி வந்துட்டேன். எ... என்னை மன்னிச்சுடுங்க'' - அழுது கொண்டே கூறினாள் சம்யுக்தா.

அதே சமயத்தில்... பக்கவாட்டு பாதை வழியாக ஏறி வந்த செவ்வந்தி...

சம்யுக்தா, காளி சிலையின் பின்னால் ஒண்டியிருப்பதைப் பார்த்தாள். காளி சிலைக்கு சுற்றியிருந்த புடவையை உருவி சம்யுக்தாவின் மீது எறிந்தாள்.

அனைவரும் திகைத்துப் போய் பார்த்துக் கொண்டிருக்கும் போதே... காளி சிலைக்கு முன்னால் நடப்பட்டிருந்த சூலத்தை வெறியுடன் பிடுங்கினாள்.

புடவையை உடம்பில் சுற்றிக் கொண்ட சம்யுக்தா திகிலுடன் ஓடி வந்து ரகுவின் முதுகின் பின்னால் மறைந்து கொண்டாள்.

''வா... ராஜன் சாரு! வா... பௌர்ணமி அன்னிக்குத்தானே எனக்கு தாலி கட்டினே? உன் மேல எவ்வோ நம்பிக்கை வச்சிருந்தேன்? மோசம் பண்ணிட்டியே? வா... வா! பௌர்ணமி அன்னிக்குத்தானே தாலி கட்டினே? வா!''

திரும்பத் திரும்ப அதே வார்த்தைகளை உதிர்த்தபடி அவனை நெருங்கினாள். அக்னி துண்டங்களாய் அவளது விழிகள் கோபத்தில் சிவந்திருந்தன. நியாகு பின்வாங்கி மெல்ல ஓடத் தொடங்கினான்.

''செவ்வந்தி! அவசரப்படாதேம்மா... நான் சொல்றதைக் கொஞ்சம் கேளேன்'' - ரகு மன்றாடினான்.

''நீ சும்மாயிரு சாரு! இது எனக்கும் அவனுக்கும் உள்ள கணக்கு. இதை நாந்தேன் பைசல் பண்ணனும்'' - வெறி கொண்டவளைப் போல் சிரித்தபடி நியாகுவை விரட்டினாள்.

அடுக்கடுக்காய் அதிர்ச்சிகளை சந்தித்ததால்... சம்யுக்தா கண்கள் சொருக மயங்கிச் சரிந்தாள்.

''ச... சம்யுக்தா... இங்க பாரு'' - அவளது கன்னத்தில் தட்டியவன் பதற்றமாக அவளை வாரித் தோளில் சாய்த்துக் கொண்டான்.

''செவ்வந்தி... சொன்னாக் கேளு. கொஞ்சம் பொறும்மா... செவ்வந்தி'' தொண்டை கிழிய அலறினான்.

நியாகு தலைதெறிக்க ஓடினான். பின்னால் திரும்பிப் பார்த்து விட்டு ஓடும் போது... அந்த பருத்த ஆலமரத்தின் அடிவேரில் அவனது கால் தடுக்கியது.

தடுக்கிய வேகத்தில் தடாலென்று உருண்டான். கண் இமைக்கும் நேரம்தான்! சுதாரித்து எழுந்து கொள்ள அவகாசமே இல்லை. தடதடவென்று உருண்டு அதல பாதாளத்தில் விழுந்தான்.

''ஐயோ... அண்ணா... அண்ணா! நீ பண்ணின அராஜகமே உன்னை அழிச்சிடுச்சே?'' - கண் கலங்கினான் ரகு.

சூலத்தை ஏந்திக் கொண்டு வந்த செவ்வந்தி... அந்த ஆலமரத்தின் அடிவேரை உற்றுப் பார்த்தாள்.

''இந்த இடத்துல தானே... அன்னிக்கு உட்கார்ந்திருந்தேன்? ஆமா... இங்கதான்...'' - தனக்குள் பேசியபடி அந்த வேரில் அமர்ந்து கொண்டாள்.



''இந்தா ராஜன் சாரு! சூலத்தை பிடி... அடுத்த பௌர்ணமிக்கு அந்த ராஜன்பய வந்தாலும் வந்துடுவான். மறுபடி அவன் வந்தாக்க அவனைக் குத்தறதுக்கு இந்த சூலம் தேவைப்படும். காளி ஆத்தா முன்னாடி நல்லா நட்டு வையி'' - பிதற்றிய செவ்வந்தியைக் கண்டு மடை திறந்த வெள்ளமாய்... அவனது விழிகளிலிருந்து தண்ணீர் வழிந்தது.

''அன்னிக்கு இங்க உட்கார்ந்ததும் நல்லா தூக்கம் வந்துச்சே? இன்னிக்கு ஏன் வரலே? ராஜன் சாரு! அந்தப் பொண்ணு எங்க வூட்டுக்கு வந்துச்சே? அவ லோகநாதராஜனுக்கு மருமகளாமே? என்கிட்ட அவ சொன்னாளே?

அப்போ நான் யாரு? ராஜன் சாரு! நானும் அவரோட மருமகதானே? இதோ தாலி கிடக்கு பாரு. சொல்லு சாரு! நானும் மருமகதானே? பதில் சொல்லு ராஜன் சாரு.''

''ஆமா... செவ்வந்தி! நீயும் மருமகள் தான். மூத்த மருமகள்... அதுவே எந்த மாற்றமும் இல்லை.''

''இவனை முனியன் கட்டிப் போட்டு வச்சிருந்தாரு. எப்படியோ கட்டை அவுத்துக்கிட்டு இங்க வந்துட்டானே? காளி ஆத்தாளை சாட்சியா வச்சு தாலி கட்டி ஏமாத்துன பாவத்துக்கு சரியான கூலி கிடைச்சு போச்சு.

சின்னம்மா எனக்கு சரியா பதில் சொல்லாம போனப்ப... புரிஞ்சு போச்சு. தாயம்மா வேற கூடப் போச்சா? நல்ல வேளையா உடனே செக்யூரிட்டி ரூம்லே இருந்து உங்களுக்கு ஃபோன் போட்டு விஷயத்தைச் சொன்னேன்.

ரெண்டு பேருமா வேலைக்காரியை எழுப்பி விசாரிச்சது நல்லதா போச்சு. கொஞ்சம் தாமசமா வந்தாலும்... சின்னம்மாவை நாம்ப காப்பாத்தியிருக்க முடியாது...'' - ஆற்றாமை தாளாமல் வாட்ச்மேன் புலம்பினான்.

''செவ்வந்தியை ஜாக்கிரதையா கீழே கூட்டிட்டுப் போகணும்.'' - மனைவியை அள்ளித் தோளில் சாத்திக் கொண்டு... அந்த ஆலமரத்தை நோக்கி நிதானமாக நடந்தான் ரகு.

## 18

**லோ**கநாதராஜன் இடிந்து போய் விட்டார். தனம்மாவுடன் சேர்ந்து ஆரம்பத்தில் கதறினாலும்... சீக்கிரமாகவே நிதர்சனத்தைப் புரிந்து கொண்டார் கற்பகம்!

''அக்கா! சும்மா அழுதுட்டிருந்தா ஒரு பிரயோஜனமும் இல்ல. அவர் எவ்வளவோ தர்ம காரியங்கள் பண்ணியிருக்காரு. அவரு செஞ்ச புண்ணியம்தான் இப்போ நம்ப குடும்ப மானத்தைக் காப்பாத்தியிருக்கு.''

''என்ன சொல்றே கற்பகம்?''

''ஆமாங்க... எவ்வளவு கெஞ்சிப் பார்த்தும் இயாகு திருந்தப் போறதில்ல. இதே மாதிரி ஒவ்வொரு பொண்ணையா அழிச்சுகிட்டே இருப்பான். என்னிக்காவது ஒருநாள் போலீஸ் அரஸ்ட் பண்ணிரும். கோர்ட் தண்டனை குடுத்து ஜெயில்லே போடும். டி.வி. பத்திரிகைகள்லே நம்ம குடும்பத்துப் பேரு அடிபடும். அது எவ்ளோ பெரிய அவமானம்?

அவனோட எதிர்காலமே இருண்டு மானம் போயி ஜெயில்லே அவன் அடைபட்டுக் கிடக்கிறதை விட போய்ச் சேர்ந்தது... எவ்வளவோ மேல் தெரியுமாங்க? ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சு கடைசியில தம்பி மனைவியாச்சேன்னு கூடப் பார்க்காம... நம்ம சம்யுக்தாவுக்கு குறி வச்சான் பாருங்க.

இந்த மாதிரி மிருகங்க அழியத்தான் வேணும். அதர்மம் பண்ணினான்; அழிஞ்சு போயிட்டான் அவ்வளவுதான்.''

தனம்மாளும் லோகநாதனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

**தொ**டர்ந்து வந்த நாட்கள் சோகத்தை மெல்லத் தன்னுடன் எடுத்துச் செல்ல... வீடு மெல்ல இயல்பு நிலைக்குத் திரும்பியது. எவ்வளவு பெரிய காயமாக இருந்தாலும் அதை ஆற்றும் சக்தி காலத்திற்கு உண்டல்லவா?

அந்தி சாயும் பொழுது என்பதால் காற்று காதலுடன் ஜிலுஜிலுவென வந்து தழுவியது. பிறந்தநாள் பரிசாக ரகு வாங்கிக் கொடுத்திருந்த ஆகாய நீல வண்ணக் காட்டன் புடவையைக் கட்டியிருந்தாள் சம்யுக்தா.

தோட்டத்தில் பூத்திருந்த பன்னீர் ரோஜாவை இலையுடன் சேர்த்துக் கிள்ளி காதோரத்தில் செருகிக் கொண்டாள். ரகுவுக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தாள்.

இரவு ஒன்பது மணிக்கு மேல்தான் அவன் வந்து சேர்ந்தான். ''வழியிலேயே சாப்பிட்டேன். டிபன் வேணாம்'' - அவளை ஏறிட்டுக் கூடப் பாராமல் பேசி விட்டு மாடிக்கு விரைந்தான். சம்யுக்தாவின் மனதில் ஏமாற்றம் எட்டிப் பார்த்தது.

''ஒரு டம்ளர் பாலாவது குடிங்களேன்.''

மௌனமாக டம்ளரை வாங்கி பாலை அருந்தி விட்டு காலி டம்ளரை மோடாவில் வைத்தான்.

''மதுரைக்குப் போயிருந்தேன். வர்ற வழியில தேனியில செவ்வந்தியையும் தாத்தாவையும் பாத்துட்டு வந்தேன்.''



மனநிலை பாதிக்கப்பட்ட செவ்வந்தியை தேனியிலிருந்த பிரபல மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்திருந்தான் ரகு.

''செவ்வந்தி இப்போ எப்படி இருக்கா?''

''புலம்பறதை நிறுத்திட்டாளாம்... நல்லா தேறிக்கிட்டு வர்றா... முனியன் தாத்தாவுக்கு இந்தக் குடும்பமே ரொம்ப கடமைப்பட்டிருக்கு. பேத்தியோட நிலைமையைப் பத்திக்கூட அவரு அதிகமா கவலைப்படலை. நம்ம குடும்பத்தோட கௌரவத்துக்கு பங்கம் வந்துரக்கூடாதுன்னு ரொம்ப பாடுபட்டிருக்காரு. அவரோட எஜமான விசுவாசத்தைப் பாத்துட்டு அப்பா அப்படியே நெகிழ்ந்துட்டாரே?

செவ்வந்தி குணமானதும் இங்க தான் வரப்போறா... ஒரு மகளா நம்ம கூடவே இருக்கட்டும்னு அப்பா சொல்லிட்டாரு. செவ்வந்தி சம்மதிச்சா... அவளுக்கு ஒரு புது வாழ்க்கையை அமைச்சுத் தரணும். அதான் என் ஆசை.''

''ரொம்ப நல்ல முடிவு ரகு'' - பெருமிதத்தோடு கணவனைப் பார்த்தாள்.

''ஆங்! சொல்ல மறந்துட்டேன். பாரு... மதுரை காமராஜ் யுனிவர்சிடியில உனக்கொரு அப்ளிகேஷன் ஃபார்ம் வாங்கிட்டு வந்தேன்.'' ப்ரீஃப்கேஸிலிருந்து எடுத்துக் கொடுத்தான்.

''எனக்கு ஃபார்ம் வேணாம். நான் மேற்கொண்டு படிக்கிறதா இல்ல.''

''ஏன் வேணாம்கிறே? ஃபர்ஸ்ட் கிளாஸ்லே பாஸ் பண்ணியிருக்கியே?''

''மனுஷங்களோட மனசைப் படிக்கத் தெரியாத மக்கா இருந்துட்டேனே? உங்களைப் பார்க்கும் போதே... என் மனசாட்சி அறுக்குது. ஒரு உத்தமரை... எல்லாருக்கும் உபகாரம் பண்றவரைப் போய் சந்தேகப்பட்டுட்டேனே? அந்த மொட்டைக் கடிதம்தான் இதுக்கெல்லாம் காரணம்...

'ராஜன் சார்... ராஜன் சார்'னு உங்க ரெண்டு பேத்தையும் ஒரே மாதிரி எல்லாரும் அழைச்சாங்க. அதுல வந்த குழப்பம் இது!

சந்தர்ப்பமும் சூழ்நிலையும் உங்களைத் தவறா எண்ணும்படி வச்சிருச்சு. ஸாரி''

வேதனையில் விழிகளில் கண்ணீர் குளம் காட்டியது.

சட்டென்று அவனது விழிகள் கூர்மை பெற்றன. ''சந்தர்ப்பத்தையும் சூழ்நிலையையும் வச்சு ஒருத்தரை நாம்ப ஈஸியா சந்தேகப்பட்டுடலாம் இல்லையா?'' - அவள் இதற்கு பதில் சொல்ல முடியாமல் திருதிருத்தாள்.

மேஜை டிராயரைத் திறந்து ரகு ஒரு கடிதத்தை எடுத்து அவளது கையில் திணித்தான். குழப்பத்துடன் கடிதத்தில் விழிகளை ஓட்டினாள் சம்யுக்தா.

''ரகு! சம்யுக்தாவும் நானும் காதலர்கள். உயிருக்கு உயிரா நேசிச்சோம். என் மாமா எங்களது காதலுக்கு முட்டுக்கட்டை

போட்டாலும்... நாங்கள் தொடர்பு வைத்துக் கொண்டு தான் இருந்தோம். கட்டாயத்தின் பேரில்தான் உன்னைக் கல்யாணம் செய்து கொண்டாள். அவள் மனதில் இன்னமும் நானிருக்கிறேன். 'பழைய தொடர்பை' அவளாலும் மறக்க முடியாது. என்னாலும் மறக்க முடியாது. இப்படிக்கு கிரி'' - என்று எழுதப்பட்டு இருந்ததைப் பார்த்ததும்.. அதிர்ச்சியில் விக்கித்து நின்றாள் சம்யுக்தா.

''ஐயோ! இது அப்பட்டமான பொய். இது அபாண்டம். வீண் பழி சுமத்திட்டான்'' - வெடித்தாள். திகிலில் அவளது உடம்பு உதறிப் போட்டது.

''ஆனா... சந்தர்ப்பமும் சூழ்நிலையும் உனக்கு பாதகமா இருக்கே சம்யுக்தா? ஃபர்ஸ்ட் நைட்லே நான் ஆசையா கிட்ட வந்தப்போ... நீ அழுதே! கல்யாணத்துல இஷ்டமில்லைன்னு சொன்னே! நரக வேதனையா இருக்குன்னு சொன்னியே?''

''அதுக்கு காரணம் அந்த மொட்டைக் கடிதாசி... அதுக்கு மேல என்னோட சந்தேக புத்தி. அதான் விலகி இருக்கப் பிரியப்பட்டேன். ரகு! அப்ப போ நீங்க இந்த லெட்டரை நம்பறீங்களா? அதுக்கு முன்னாடி ஒரு உண்மையைச் சொல்லிடறேன்.

வான்மதியோட கல்யாணத்துல உங்களைப் பார்த்ததும்.. என்னையும் அறியாம உங்களை நான் விரும்ப ஆரம்பிச்சுட்டேன். இதை ஆசையா உங்ககிட்ட ஃபர்ஸ்ட் நைட்லே சொல்லணும்னு இருந்தேன். ப்ச்! அந்த மொட்டைக் கடிதத்தால மனசு குழம்பிட்டேன்.''

''மனசார விரும்பினவனை சந்தேகப்பட்டுட்டே! பௌர்ணமி பூஜைக்கு நடுராத்திரியில மலை உச்சிக்கு வான்னு எங்க அண்ணன் கூப்பிட்டப்போ.. கொஞ்சம் கூட சந்தேகப் பொறி தட்டலையா? நூறு சதவீதம் முழுசா நம்பி அர்த்தராத்திரியில கிளம்பிப் போயிட்டியே?''

''அது தப்புதான். அதுக்கான பலனை அனுபவிச்சுட்டேனே? அன்னிக்கு மட்டும் தக்க சமயத்துல நீங்க வராம இருந்திருந்தா... மலை உச்சியிலிருந்து குதிச்சு என்னை மாய்ச்சிருப்பேன். ஆயிரம் வாட்டி 'ஸாரி' கேட்டாலும் என் மனசு ஆறாது... ரகு! நீங்க கிரி எழுதினதை ந... நம்பிட்டீங்களா?''

அவளது இதயத்துடிப்பு எகிறிக் குதித்தது. பயத்தில் அவளது நா உலர்ந்து போனது.

''மக்கு! என்னையும் உன்னை மாதிரி சந்தேகப் பிராணின்னு நினைச்சுட்டியா? எதையும் அலசி ஆராய்ஞ்சு பார்க்காம நான் முடிவெடுக்கவே மாட்டேன். 'கண்ணால் பார்த்ததும் பொய்... காதால் கேட்பதும் பொய்... தீர விசாரிப்பதே மெய்'னு நம்பறவன் நான்.

உன் மனசுல ஏதோ குழப்பமிருக்கு. அது தெளிவடையட்டும்னு



நினைச்சேனே தவிர உன்னை சந்தேகிக்கலை. அந்த அல்ப புத்தி எனக்கில்லை. உங்க பெரியப்பா வீட்டுக்குப் போனோம் இல்லையா? அப்பவே இந்த லெட்டர் சமாச்சாரத்தை அவர்கிட்ட சொல்லிட்டேன். கிரியை கூப்பிட்டு ரெண்டு அறை விட்டாரு.... 'தண்ணியடிச்சுட்டு மப்புல ஏதோ கிறுக்கிட்டேன். மன்னிச்சிடுங்க'ன்னு கால்லே விழுந்துட்டான்.''

மந்தகாசமாய் புன்னகைத்தவனை விழிகள் விரியப் பார்த்தாள்.

''எப்பேர்ப்பட்ட மனசு உங்களுக்கு! இப்படி சந்தேகப்பட்டுட்டேனே?'' கண்ணீருடன் அவனது கால்களில் பணிய முற்பட்டவளைத் தடுத்தான் ரகு.

''இன்னமும் உனக்கு கோபம் தீரலையா? பிறந்தநாள் பரிசா தான் வாங்கித் தந்த நெக்லஸை நீ போட்டுக்கவே இல்லையே?''

''கோபமா... எனக்கா?'' - ஒரு கணம் விழித்தவள் வார்ட்ரோபைத் திறந்து அந்த நகையை எடுத்துக் கொண்டு வந்தாள்.

''நீங்களே போட்டு விடுங்க'' - நெக்லஸை மாட்டி விட்டான் ரகு.

''ரொம்ப அபாரமா இருக்கு சம்யுக்தா! நான் கொடுத்த வாக்கை மீறாம நடந்துகிட்டேனா? சுண்டு விரல் படாம நெக்கா மாட்டி விட்டுட்டேன்ல?''

கண்களில் குறும்பு மின்ன சிரித்தான்.

சம்யுக்தாவுக்கும் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. முகம் குங்குமமாய் சிவக்க ''ஸாரி.., ஸாரி'' என்று கூறியவளின் தளிர்க் கரங்கள் இரண்டும் அவனது கழுத்தில் மாலையாயின.

